# பொருளியல் நோக்கு

நவம்./டிசம்.
1988

## கிராமிய வங்கிகள்
## இருபத்தைந்து வருடங்கள்



மக்கள் வங்கி வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவு கிராமிய வங்கிகள் - ஒரே பார்வையில்

## தோற்றம், வளர்ச்சி, வைப்புக்கள் மற்றும் முற்பணங்கள்






மெனிக்கின்னே கிராமிய வங்கி - இலங்கையின் முதல் கிராமிய வங்கியான இது 1964-ம் வருடம் மார்ச் மாதம் 26 ஆந் தேதி திறந்து வைக்கப்பட்டது.




ப. நோ. கூ. சங்கங்களினதும் கூ. கி. வங்கிகளினதும் அண்மைக்கால வளர்ச்சி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA
No 1608

# பொருளியல் நோக்கு

மலர் 14 இதழ் 8/9 நவம்./டிசம். 1988

மக்கள் வங்கியின்
ஆராய்ச்சிப்பகுதி வெளியீடு:
தலைமைக்காரியாலயம்,
11 வது மாடி,
கொழும்பு 2,
இலங்கை

## விசேஷ அறிக்கை

3 கூட்டுறவு கிராமிய வங்கிகளின் கால் நூற்றுண்டு கால வளர்ச்சி

எச். எல். ஹேமச்சந்திரா 4 கிராமிய வங்கிகளின் தோற்றமும் வளர்ச்சியும்

யூ. அஜிதா தென்னகோன் 11 தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு கூ. கி. வங்கிகள் பற்றிய ஆய்வு

நிமல் சந்தரத்ன 17 கூட்டுறவு கிராமிய வங்கிகள் வெற்றி கண்டுள்ளனவா?

உபாலி விதானபத்திரன 22 கிராமப் பகுதிகளின் முதலீட்டு வளத்திறனை கண்டறிதல் — கிராமிய வங்கிகள் வகிக்கும் பங்கு

எம். டப். பண்டித்த 27 இலங்கையின் கிராமியத் துறையில் கூட்டுறவு கிராமிய வங்கிகளின் பங்களிப்பு

## அடுத்த இத்ழில்

★ ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய வளர்ச்சித் திட்டங்கள்: பொருளாதார அபிவிருத்தியின் பயன்களை கிராமிய மக்களுக்கு எடுத்து வருவதில் அவை எவ்வளவு தூரம் வெற்றி கண்டுள்ளன?

★ 1988 – ல் இலங்கையின் பொருளாதார செயற்பாடு

★ மூன்ருவது உலக நாடுகளில் யூகலிப்டஸ் மர நடுகை - சுற்றுப்புறச் சூழல் பிரச்சினைகள்

★ தனியார் துறை நெல் குத்துதல் - பிரச்சினைகள்

அட்டைப்படம்
செபஸ்டியன் பீரிஸ்

பொருளியல் நோக்கு கருத்துக்களையும், அறிக்கைகளையும், புள்ளிவிவரத்தரவுகளையும், உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதைக்குறிக்கோளாகக் கொண்டது.

பொருளியல் நோக்கு மக்கள் வங்கியின் ஒரு சமூகப் பணித்திட்டமாகும். எனினும் அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோக பூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக்கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக்கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரபலிப்பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும், குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.

பொருளியல் நோக்கு மாதந் தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்துவதன் மூலமோ, விற்பனை நிலையங்களிலிருந்தோ பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கிராமிய வங்கிகளின் கால் நூற்றாண்டுப்பணி

கூட்டுறவு கிராமிய வங்கிகள் மார்ச் 1989 ல் தமது வெள்ளி விழாவை கொண்டாடுகின்றன. மக்கள் வங்கி 1964-ன் ஆரம்பத்தில் இத்திட்டத்தை துவக்கி வைத்தபோது, இது ஒரு துணிகரமான முயற்சியாக கருதப்பட்டதுடன், இந்த திட்டத்தின் வெற்றி குறித்து பரவலான சந்தேகம் வங்கிக்குள்ளும் கூட காணப்பட்டது. ஆனால், கிராமிய வங்கியமைப்பு இந்த அச்சங்களைப் பொய்ப்பித்து, சவால்கள் அனைத்தையும் வென்று வளர்ச்சி கண்டு வந்தது மட்டுமன்றி, பல வழிகளிலும் கிராமிய அபிவிருத்திக்கு ஆக்கபூர்வமான பங்களிப்பினை நல்கியிருக்கிறது.

கூட்டுறவு கிராமிய வங்கியமைப்பு வெள்ளி விழா கொண்டாடும் இவ்வேளையில் பொருளியல் நோக்கு வெளியிடும் இந்த சிறப்பிதழ், இத்திட்டம் குறித்த கருதுகோள், பரிணாம வளர்ச்சி, ஆற்றல்கள், சவால்கள் மற்றும் அதன் எதிர்காலம் என்பன குறித்து பரிசீலனை செய்கிறது. இத்துறையில் சிறப்புத் தேர்ச்சியும், அனுபவமும் பெற்ற நிபுணர்கள் இந்த கட்டுரைகளை எழுதியிருக்கிறார்கள்.

கிராமியத்துறை இலங்கையின் பொருளாதாரத்தில் ஒரு முக்கிய இடத்தைப் பெறுகிறது. நாட்டு மக்களில் 75 சதவீதத்துக்கு மேற்பட்டோர் கிராமப் புறங்களில் வாழ்கிறார்கள். இந்த மக்களுக்குத் தேவையான உணவு, உறைவிடம், தொழில் வாய்ப்புக்கள் போன்ற அனைத்தையுமே கிராமப்புறங்களே வழங்குகின்றன. மொத்த தேசிய உற்பத்தி, ஏற்றுமதிச் சம்பாத்தியங்கள் மற்றும் மூலதனவாக்கம் போன்றவற்றுக்கு கிராமத்துறை வழங்கும் பங்களிப்பினை எவரும் குறைவாக மதிப்பிட்டுவிட முடியாது. இது தவிர, இதுவரையில் பயன்படுத்தப்படாத பாரிய அபிவிருத்தி வாய்ப்புக்கள் காணப்படுவதும், நாட்டுப்புற ஏழை மக்களின் வாழ்க்கைத் தரங்களை மேம்படுத்த வேண்டிய சமூக கடப்பாடும், அபிவிருத்திப் படிமுறையில் கிராமியத் துறைக்கு ஒரு முக்கிய இடத்தைக்கொடுக்கிறது. கூட்டுறவு கிராமிய வங்கியமைப்பின் வெள்ளி விழாக் கொண்டாட்டங்களின் முக்கியத்துவம், இந்தப் பின்னணியுடனேயே அணுகப்படுதல் வேண்டும்.

கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் நாட்டின் சமூக, பொருளாதார அமைப்புக்களில் பாரிய மாற்றங்கள் நிகழ்ந்து வந்துள்ளன. இதனையடியொற்றி வங்கியமைப்பிலும் மாற்றங்கள் இடம் பெற்று வந்தன. இயற்கையாகவே, கூட்டுறவுக் கிராமிய வங்கிகளும் இந்த சமூக பொருளாதார அலைகளின் தாக்கத்தினை எதிர்கொண்டு, நிலைமைகளுக்கேற்ப தமது வழிமுறைகளை மாற்றிக்கொள்ள வேண்டியிருந்தன. இந்நிறுவனங்கள் இப்படிமுறையில் வெற்றி கண்டுள்ளனவா என்பது விவாதத்துக்குரிய ஒரு விஷயமாகும். இருந்தபோதிலும், இவ் வங்கிகள் இவ்வளவு காலமும் தாக்குப்பிடிக்கக்கூடியதாக இருந்ததும் வளர்ச்சியடைந்து வந்தமையுமே ஒரு சாதனையென்றே கூற வேண்டும். கிராமிய வங்கி அலகுகள் உறுதியாகவும், நிலையாகவும் வளர்ச்சியடைந்து வந்திருப்பதுடன் அவற்றின் வியாபார நடவடிக்கைகளும் பெருக்கமடைந்திருக்கின்றன. இப்பொழுது நாடெங்கிலும் 968 கிராமிய வங்கி அலகுகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. இவற்றில் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய கிராமிய வங்கிகளின் எண்ணிக்கை 282 ஆகும். மிகுதி 686 சிறப்புக்கிளைகளும் வரையறுக்கப்பட்ட சேவைகளை வழங்கி வருகின்றன. உண்மையில், இவற்றில் எத்தனை கிளைகள் கிராமங்களில் அமைந்திருக்கின்றன? 'கிராமியம்' 'கிராமிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லாதது' என்ற பதங்கள் குறித்த வரைவிலக்கணம் மிகச் சிக்கலானதாக இருப்பதனால் இந்த மதிப்பீட்டினை செய்வது சிரமம். எவ்வாறெனினும், 968 கிளைகளில் 13.8 சதவீதமான கிளைகள் மொனராகலை, அம்பாந் தோட்டை, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் காணப்படும் மிகவும் பின்தங்கிய கிராமப் புறங்களில் அமைந்திருப்பது கண்டறியப்பட்டுள்ளது. பதுளை, கேகாலை, குருணாகல் போன்ற கிராமிய மாவட்டங்களில் 45.9 சதவீதமான கிளைகள் அமைந் துள்ளன. ஓரளவுக்கு நகர்மய மான கம்பகா, களுத்துறை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங் களில் 33.7% கிளைகளும், கொழும்பு மாவட்டத்தில் 6.4% கிளைகளும் அமைந்துள்ளன. ஒரு மேலோட்டமான முறையி லேயே இவ்விதம் வகைப்படுத் தல் முடியும். பெருமளவுக்கு கிராமப்புறங்களைக் கொண்ட மாவட்டங்களில்கூட கிராமிய வங்கிகள் ஓரளவுக்கு நகர்சார்ந்த பகுதிகளில் அமைந்திருக்க வாய்ப்பிருக்கிறது.

கிராமியவங்கிகளின் செயற் பாட்டு சாதனையை அளவிட உதவும் மற்றொரு காரணி வைப்புத்திரட்டலாகும். இந்த வங்கிகளின் வைப்புக்கள் 1965 ல் 496,360 ரூபாவாக மட்டும் இருந்து 1988ல் 183 கோடி ரூபா வரையில் பேரளவில் அதிகரித்துச்சென்றுள்ளன. வைப்புக்களின் வருடாந்த வளர்ச்சி விகிதம் 50 சதவிகிதம் வரையில் இருந்திருக்கிறது. எந்த விதமான வங்கி வசதி களுமில்லாத கிராமப்புறங்களில் மட்டுமன்றி அதிகளவு வங்கி வசதிகள் காணப்படும் கிராமப் புறங்களிலும் கூட கிராமிய வங்கிகள் போட்டி போட்டுக் கொண்டு வைப்புக்களைத் திரட்டி வந்துள்ளன. உதாரணமாக், இந்த வங்கிகளின் வைப்புக்களில் சுமார் 10 சதவீதம் கொழும்பு மாவட்டத்திலிருந்து திரட்டப் பட்டுள்ளது: கம்பகா, களுத் துறை, காலி, யாழ்ப்பாணம், கண்டி ஆகிய மாவட்டங்களி லிருந்து 41 சதவீத வைப்புக்கள் திரட்டப்பட்டன.

கிராமிய வங்கிகளில் வைப்புச் செய்தவர்களில் பெரும்பாலா னோர் சிறு சேமிப்பாளர் களாகவே இருந்தனர். இவர் களது வைப்புக்கள் 25 ரூபா விலிருந்து 500 ரூபா வரையில் இருந்தன. செப்டம்பர் 1988 அளவில் கிராமிய வங்கிகளில் 22 இலட்சத்து 40 ஆயிரம் சேமிப் புக்கணக்குகள் இருந்தன. நிர் வாகச் செலவுகள் குறைவாக இருப்பதன் காரணமாக சிறு நிலுவைகளைக் கொண்ட பெருந் தொகையான கணக்குகளை இக் கிராமிய வங்கிகள் நடத்திச் செல்லக்கூடியதாக இருக்கிறது.

நாட்டின் கிராமத்துறையின் முற்றுமுழுதான நிதித் தேவை களை வழங்குவதனை கிராமிய வங்கிகள் ஆரம்பத்திலிருந்தே தமது நோக்காக வெளிப்படுத்தி வந்துள்ளன. இந்நோக்கத்தினை நிறைவேற்றிக்கொள்ளும் விதத் தில் விவசாயம், கைத்தொழில், வீடமைப்பு, நுகர்வு மின் இணைப்பு பெறுதல் போன்ற பல்வேறு நோக்கங்களுக்கென வும் கடன் திட்டங்கள் வகுக்கப் பட்டன. கிராமிய வங்கிகள் செயற்படத்தொடங்கிய ஆரம்ப காலத்தில் கடன்கள் வைப்புக் களின் அளவையும் மிஞ்சி இருந்தன. பற்றுக்குறையை மக்கள் வங்கி உதவி வந்தது. ஆனல், 1975 - ன் பின்னர் வைப்புக்கள், கடன்களை விடக் கூடிய வேகத்தில் அதிகரிக்கத் தொடங்கின, கடன் வசதிகளை ஊக்குவிப்பதில் கிராமிய வங்கி கள் போதியகவனம் எடுக்காத தும் இந்நிலைமை தோன்றியதற்கு ஒரு காரணமாகும்.

கிராமிய வங்கிகள் தம் வசமிருக்கும் நிதிகளை கிராமியத் துறையில் பயன்படுத்தத் தவறி யமை குறித்து பலவிதமான கண்டனங்கள் தெரிவிக்கப்பட் டுள்ளன. ஆனல், இவ்விதம் கண்டனங்களைத் தெரிவிப்பவர் கள் பின்வரும் கேள்விகளை தவிர்த்து வந்துள்ளனர்.

(i) கிராமப்புறங்கள், நகர்ப் புறங்கள் என்பவற்றுக் இடையிலான எல்லைகளை வகுப்பதில் நாம் எவ் வளவு தூரம் தெளிவாக இருக்கிறோம்?

(ii) கிராமிய வைப்பாளர் களில் உண்மையில் எத்தனைபேர் கிராமத்த வர்களாக இருக்கிருர்கள்? மொத்த வைப்புக்களில் இவர்கள் எத்தனை சதவீ தத்தை வைத்திருக்கிருர் கள்?

(iii) கிராமிய வைப்பாளர் களின் எதிர்பார்ப்புக்கள் என்ன?

(iv) கிராமியத்துறையில் காணப்படும் கடன் இடை வெளியின் அளவு என்ன?

கடந்த சில வருடங்களில் கிராமிய வங்கி கள் வீடமைப்புத்துறைக்கு மட்டுமே போதியளவுக்கு கடன் களை வழங்கி வந்திருக்கின்றன. கடன் பெறுபவர்களின் கண் ணோட்டத்தின்படி கிராமிய வங்கிகளிலிருந்து எளிதாக பெற் றுக்கொள்ளக்கூடிய கடன்கள் வீடமைப்புக் கடன்களாகும்.

வழங்கப்பட்டிருந்த மொத்தக் கடன் தொகையான 76.4 கோடி ரூபாவில் அரைவாசிக்கும் கூடிய பகுதி அடகுக்கடன்களாகவே இருந்தது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இயங்கும் கிராமிய வங்கிகளில் அடகு நடவடிக்கை கள் இடைநிறுத்தி வைக்கப் பட்ட போதிலும் கடன்களின் அளவு தொடர்ந்தும் அதிகரித் துச் சென்றுள்ளது.

மேற்சொன்ன காரணிகளின் நிமித்தம் கூட்டுறவு கிராமிய வங்கியமைப்பை மீள ஒழுங்கு படுத்தியமைக்க வேண்டிய அவசி யம் இப்பொழுது எழுந்துள்ளது. இத்தகைய ஒரு மீளமைப்பு முயற்சி, கிராமியத்துறைக்கு இவ்வங்கிகள் மேலும் சிறப்பான முறையில் பணியாற்றுவதற்கும், வெளிஉலகத்துடனன தொடர் புகளை பலப்படுத்திக்கொள்வதற் கும் உதவும் என்பதில் அந்தேக மில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமிய வங்கிகளின் தோற்றமும் வளர்ச்சியும்

எச். எல். ஹேமச்சந்திரா
(ஆராய்ச்சி பகுதி, மக்கள் வங்கி)

1964 இல் மக்கள் வங்கியின் (மூன்று வருட வங்கித் தொழிற் பாட்டின் பின்னர்) பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினூடாக ஆரம்பிக்கப்பட்ட கிராமிய வங்கி முறையானது, வங்கி வசதிகளை கிராமிய மக்களிடையே விரிவுபடுத்தி, அதன் மூலமாக கிராமியத் துறையில் பொருளாதார நடவடிக்கைகளை தீவிரப்படுத்தும் நோக்குடையதாகவிருந்தது. கூட்டுறவு இயக்கத்தின் மூலமாக கிராமியக் கடனுக்கான கிராமிய சேமிப்புகளைத் திரட்டும் மக்கள் வங்கியின் நிகழ்ச்சித் திட்டத்திற்கு இது ஒரு முக்கிய வழியாக கருதப்பட்டது. வர்த்தக வங்கிகளினால் வழங்கப்படும் சேவைகள் யாவும் கிராமியத் துறைக்கு வெளியே இடம் பெற்ற ஒரு காலகட்டத்தில் கிராமியத் துறையின் அபிவிருத்தியில் ஈடுபாடு காட்டிய கிராமிய வங்கி முறையின் ஆரம்பம், நாட்டின் வங்கியமைப்பில் ஒரு முன்னோடி முயற்சியாக இருந்தது.

அக்காலப் பகுதியில் நாட்டின் சனத்தொகையில் நாலில் மூன்று பகுதியினரைப் பிரதிநிதித்துவப்படுத்திய கிராமியத் துறைமக்கள் சிறுவிவசாயம், மீன்பிடி, கைத்தொழில், ஏனைய குடிசை, சிறு கைத்தொழில்கள் வர்த்தகம் போன்ற பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததுடன், தேசிய வருவாய்க்கு கணிசமானளவு பங்களிப்பினையும் நல்கிவந்தனர். கிராமியத் துறையிலிருந்த இப் மக்களுக்கான நிதிஉதவி, முறைமை சாராத நாணய சந்தையிலிருந்து பெறப்பட்டமையால் அது உயர் வட்டி வீதங்களில் பெறப்பட்டது. கடன் வழங்கும் ஒரு முக்கிய நிறுவனமாக கிராமிய கூட்டுறவுச் சங்கம் கருதப்பட்டது. இது குறுகியகாலக் கடன் வசதிகளை வரையறுக்கப்பட்ட மட்டத்தில் (ஆனால் குறைந்த செலவில்) வழங்கியது.

கூட்டுறவுத்துறையின் நிதி உதவி வரலாறு இந்த நூற்றுண்டின் ஆரம்பத்தில் தொடங்குகிறது. 1906 இல் இருந்த இரு பிரபல்யமான கூட்டுறவு கடன் சங்கங்களில், ஒன்று கண்டி மாவட்டத்திலிருந்த தெல்தெனியாவிலிருந்தது; மற்றது மாத்தறை மாவட்டத்தில் வெலிகம கோரளையில் அமைந்திருந்தது.

1909 இல் நியமிக்கப்பட்ட விவசாய, வங்கித்தொழில் கமிட்டி, பாரம்பரியக் கிராமியத் துறையில் நிலவிய கடன்சுமையின் தீவிரத்தன்மையை சுட்டிக் காட்டியது. கூட்டுறவுக் கடன் சங்கங்கள் நிறுவப்பட்டு, அவை கிராமிய விவசாயிகளுக்கு நியாயமான செலவில் கடன்களை வழங்க, விவசாயிகள் தமது பொருளாதார நடவடிக்கைகளில் இவற்றை முதலீடு செய்து கணிசமான இலாபத்தை ஈட்டக் கூடியதாக இருக்குமென இக் கமிட்டி அறிவுரை வழங்கியது. கூட்டுறவுக் கொடுகடன் சங்கங்கள் 1911-ல் அவ்வாண்டின் 7 ஆம் இலக்க கூட்டுறவுக் கடன் சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் சட்டபூர்வமாக நிறுவப்பட்டன. இக்கட்டளைச் சட்டத்தின் கீழான முதல் கூட்டுறவு கொடுகடன் சங்கம் வரையறுக்கப்படாத பொறுப்புள்ளதொன்றாகவும், சங்கத்தின் படுகடன்களுக்கு சங்கத்தின் அங்கத்தவர்கள் தனித்தனியாகவும், கூட்டாகவும் பொறுப்பாயிருப்பர் எனவும் அமைந்தது. இத்தகைய முதலாவது சங்கம் 1912 இல் உருவாக்கப்பட்டது. ஆரம்பகாலத்தில் இத்தகைய இரு வகையான கூட்டுறவுச் சங்கங்கள் முறையே (I) வரையறுக்கப்பட்ட பொறுப்புள்ள கூட்டுறவு கொடுகடன் சங்கங்களும் (II) கூட்டுறவுச் சிக்கன சேமிப்பு சங்கங்களுமென அமைந்திருந்தன: கூட்டுறவுச் சிக்கன சேமிப்புச் சங்கங்கள் அதிகளவில் அரசாங்க ஊழியரை அங்கத்தவராகக் கொண்டிருந்தமையினால் இச்சங்கங்கள் பெருமளவில் அவர்களுக்கே உதவியது. இச்சங்கங்களின் முக்கிய நோக்கம் சேமிப்பினை ஊக்குவிப்பதாக இருந்த போதிலும் சேமிப்பின் 75 சதவீதம் வரையிலான கடன்களையும் அவை வழங்கின. பிற்பட்ட வருடங்களில் இச்சங்கங்களில் பல வரையறுக்கப்பட்ட பொறுப்புள்ள கடன் சங்கங்களாக உருமாற்றப்பட்டமையின் காரணமாக இந்த அங்கத்தவர்களின் கடன் தகுதி விரிவாக்கப்பட்டது. வரையறுக்கப்பட்ட பொறுப்புள்ள கடன் சங்கங்கள் நகர்ப்புறங்களை அடிப்படையாக கொண்டு அமைக்கப்பட்டு வர்த்தகர்கள், சிறு தொழிலதிபர்கள் போன்ற நடுத்தர வர்க்கத்தினருக்கு உதவின. எனினும், இந்தச் சங்கங்கள் கிராமிய விவசாயிகளிடையேயும் ஓரளவுக்கு வேரூன்றியிருந்தன. வரையறுக்கப்பட்ட பொறுப்புள்ள கூட்டுறவு கொடுகடன் சங்கங்கள் மட்டுமே, கிராமிய விவசாயிக்கு வரையறுக்கப்பட்ட மட்டங்களிலேனும் கடனுதவியை வழங்கின. காலப்போக்கில் இத்தகைய சகல வகையான கொடுகடன் சங்கங்களும் எண்ணிக்கையில் அதிகரித்து, அதேபோன்று அவற்றின் அங்கத்துவமும், வழங்கப்படும் கடன்களின் தொகையும் அதிகரித்தன. உதாரணமாக வரையறுக்கப்படாத பொறுப்புள்ள கொடுகடன் சங்கங்களும், வரையறுக்கப்பட்ட பொறுப்புள்ள கொடுகடன் சங்கங்களும், சிக்கன சேமிப்பு சங்கங்களும் 1926 இல் 315 ஆக இருந்து, 1942 இல் 1786 ஆக அதிகரித்தன. இந்த சங்கங்கள் யாவற்றினதும் (ஏனைய வகைச் சங்கங்களுட்பட) அங்கத்துவ எண்ணிக்கை 1925 இல் இருந்த 41,164 இலிருந்து 1942 இல் 91,988 ஆக உயர்ந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தது. கடன்களை வழங்குவதற்கு இச்சங்கங்களின் வளங்களில் பற்றுக்குறையிருந்தமையால், இதை மேவுவதற்கு அரசாங்கத்தால் 1916 இல் நிறுவப்பட்ட உள்ளூர்க் கடன்கள் அபிவிருத்தி நிதியிலிருந்து நிதிகள் பெறப்பட்டன.

நீண்டகால கடன் வசதிகளை வழங்குவதற்காக அரசாங்கத்தினால் 1920 இல் அரச ஈட்டு வங்கி நிறுவப்பட்டது. ஆயினும், இவ்வங்கி கொழும்பில் இயங்கி, கிராமியப் பிரதேசங்களில் கிளைகளைக் கொண்டிராமையினாலும் இவ்வங்கியின் வசதிகளை கிராமங்களிலுள்ள சிறு அளவு விவசாயிகள் பெறமுடியவில்லை. மேலும், இவ்வங்கியினால் வழங்கப்பட்ட ஈட்டுக் கடன்களுக்கான காணிகளின் உறுதிகள் கடுமையாக பெறுமதி நிர்ணயத்துக்கும் பரீட்சித்தலுக்குமுட்படுத்தப்பட்டன.

1920 ஆம் ஆண்டிறுதியில் உருவாக்கப்பட்ட கூட்டுறவு வங்கிகளுடன் கூட்டுறவுக் கொடுகடன் முறையில் ஒரு புதிய காலகட்டம் தொடங்கியது. இவ்வங்கிகள் கூட்டுறவு மாவட்ட வங்கிகள் அல்லது கூட்டுறவு மாகாண வங்கிகள் என்றழைக்கப்பட்டு அவ்வப் பிரதேசங்களிலுள்ள பிரதம கூட்டுறவு கொடுகடன் சங்கங்களுடன் இணைக்கப்பட்டன. இச்சங்கங்கள் இவ்வங்கிகளின் அங்கத்துவ அமைப்புக்களாக கருதப்பட்டன. இவ்வங்கிகள் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்தும், பொது மக்களிடமிருந்தும் தவணை வைப்புகளையும், சேமிப்பு வைப்புகளையும் ஏற்றன. கேள்வி வைப்புகள் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து மட்டும் ஏற்கப்பட்டன. முதலாவது கூட்டுறவு வங்கியான யாழ்ப்பாண மத்திய வங்கி 1929 இல் தாபிக்கப்பட்டது. அடுத்த இரு ஆண்டுகளிலும் கொழும்பு, கண்டிப் பிரதேசங்களில் மேலும் இரு வங்கிகள் நிறுவப்பட்டன. 1960-களின் ஆரம்பத்தில் நாட்டில் 4 கூட்டுறவு மாகாண வங்கிகளும் 11 கூட்டுறவு மாவட்ட வங்கிகளும் இயங்கின. எவ்வாறெனினும், நாட்டில் கூட்டுறவுத் துறைக்கு சேவை செய்யும் ஒரு தலைமை வங்கியின் தேவை கூட்டுறவுக் கடன் சங்கங்களின் பெருக்கத்துடன் உணரப்பட்டது.

கூட்டுறவு கொடுகடன் முறையை ஆராய்ந்த 1934 ன் வங்கித் தொழில் ஆணைக்குழு, இம்முறை நல்ல முறையில் வளர்ச்சி கண்டுள்ளது என்று தெரிவித்தது. அச்சமயத்திலிருந்த பிரித்தானிய செலாவணி வங்கிகள் ஏற்றுமதி நோக்கிலான பெருந்தோட்ட, வர்த்தகத் துறைகளுக்கு மட்டுமே சேவையாற்றியமையால் கூட்டுறவுக்கடன் முறை ஒன்றே 'உள்நாட்டினருக்கு' சேவையாற்றியதென ஏற்றுக் கொண்டது. மேலும், அதிகளவு கூட்டுறவு மத்திய வங்கிகள் அமைக்கப்படலாமெனினும், கூட்டுறவுச் சங்கங்களுக்கான தலைமை வங்கியொன்று இவ்வாணைக்குழு தெரிவித்தது. தலைமை வங்கிக்குப் பதிலாக, (அவர்களது சிபார்சுப்படி அமைக்கப்படும்) அரச உதவியுடனான உள்ளூர் வர்த்தக வங்கியுடன் கூட்டுறவு சங்கங்கள் கொடுக்கல் வாங்கல் செய்யலாமென ஆலோசனை கூறப்பட்டது. இந்த ஆணைக்குழுவினதும் ஏனையோரினதும் ஆலோசனையின் பேரில் 1939 இல் முதல் உள்நாட்டு வர்த்தக வங்கியான இலங்கை வங்கி நிறுவப்பட்டது. எனினும், முதலில் எதிர்பார்க்கப்பட்டவாறு இவ்வங்கி கூட்டுறவுச் சங்கங்களுடன் நேரடியாக தொடர்பு கொள்ளத் தவறியது. இது கிராமியத்துறையுடன் மிகக் குறைந்தளவு தொடர்புடையதாக இருந்து, விரைவில் இன்னுமொரு ஏற்றுமதித்துறை சார்ந்த வர்த்தக வங்கியாக மாறியது.

இரண்டாம் உலக யுத்தத்தின் போது நாடு தீவிர உணவுப் பற்றுக்குறை நிலையை அடைந்த சமயத்தில் இப்பிரச்சினைக்கான தீர்வினைக் காண்பதற்கு கூட்டுறவு முறையைப் பயன்படுத்த அரசாங்கம் முயன்றது. வரையறுக்கப்பட்ட பண்டங்களின் வினியோகத்தை பகிர்ந்தளிக்கவென நாடெங்கிலும் கூட்டுறவுப் பண்டக சாலைச் சங்கங்கள் அமைக்கப்பட்டதுடன், உள்நாட்டு உணவு உற்பத்திக்கு உதவுவதற்கென கூட்டுறவு விவசாய உற்பத்தி, விற்பனவு சங்கங்களும் நிறுவப்பட்டன. இச்சங்கங்களின் முக்கிய பணி உணவுப் பொருட்களை உத்தரவாதப் படுத்தப்பட்ட விலைத்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்தலாக இருந்தது. அத்துடன் விவசாயிகளுக்கான பயிர்ச்செய்கை கடன்களை வழிப்படுத்தும் முகவர் நிலையங்களாகவும் இவை இயங்கின. இச்சங்கங்கள் தன்னார்வ அடிப்படையில் உருவாகாது அரசாங்கத்தினால் அமைக்கப்பட்டவையாக இருந்த போதிலும் 1957-ம் ஆண்டளவில் இச்சங்கங்களின் எண்ணிக்கையும் அவற்றின் அங்கத்துவமும் துரிதமாக அதிகரித்திருந்தது.

கூட்டுறவுத் துறைக்கான தலைமை வங்கியாக வரையறுக்கப்பட்ட இலங்கை கூட்டுறவு சமஷ்டி வங்கியினை அமைத்தமை கூட்டுறவு கொடுகடன் முறையில் நிகழ்ந்த மற்றுமொரு முன்னேற்றமாகும். இலங்கை வங்கி நேரடியாகக் கூட்டுறவுத் துறையுடனும், குறிப்பாக மாகாண, மாவட்ட வங்கிகளுடனும் தொடர்பு கொள்ளத் தவறியமை, 1940 களின் பிற்பகுதியில் கூட்டுறவு சமஷ்டி வங்கி நிறுவப்படுவதற்கு வழிவகுத்தது. 1936 இன் கூட்டுறவுச் சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் சமஷ்டி வங்கி பதிவு செய்யப்பட்டது. இதன் நோக்கங்களாக வங்கித் தொழில் கடன் வியாபாரத்தைக் கொண்டு நடாத்துதல், சங்கங்களின் உபரி நிதிகளுக்கான சமப்படுத்தும் ஊடகமாகச் செயற்படல், சங்கங்களுக்கிடையிலான கடன் பரிவர்த்தனையை மேற்பார்வை செய்தல், சங்க ஊழியருக்கு அறிவூட்டுதல் என்பன

இருந்தன. கூட்டுறவுச் சங்கங்களும், வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான தனிநபர்களும், இவ்வங்கியின் பங்குதாரராக இருக்கும் தகைமை பெற்றனர். வங்கியின் மூலதனமானது பங்குகள், வைப்புகள், கடன்கள், இலாபங்கள் என்பவற்றைக் கொண்டதாக அமைந்தது. கடன்களின் வாயிலாக அரசாங்கத்திடமிருந்து நிதி உதவியை வங்கி பெற்றது. 1949 இல் 20 இலட்சம் ரூபாவை ஆரம்பக் கடனாகவும், 1953 இல் மேலதிகக் கடனாக 40 இலட்சம் ரூபாவையும் அரசாங்கம் வழங்கியது. மாகாண அல்லது மாவட்ட வங்கிகளினால் சேவை வழங்கப்படாத முதனிலை கூட்டுறவு சங்கங்களுக்கும், மாகாண மாவட்ட வங்கிகளுக்கும் ஒரு மாகாண அல்லது மாவட்ட பிரதேசத்திற்கு மேலான இடங்களுக்கு சேவையாற்றிய முதனிலைக் கூட்டுறவு சங்கங்களுக்கும் இவ்வங்கி கடன்களை வழங்க முடிந்தது.

சமஷ்டி வங்கியில் பலமாக நம்பிக்கை வைக்கப்பட்டிருந்த போதிலும், வங்கித் தொழில், கடன் வியாபாரமென்பவற்றை செயலூக்கத்துடன் கொண்டு நடாத்துவதற்கு அதன் பலவீனமான கட்டுக்கோப்புக் காரணமாக முடியவில்லையென்பது உணரப்பட்டது. சமஷ்டி வங்கி, அது எதிர்நோக்கிய வளங்களின் பின்னடைவு காரணமாக கூட்டுறவு மாகாண, மாவட்ட வங்கிகளுக்கும், கூட்டுறவு சங்கங்களுக்கும், கடன்வசதிகளை போதியளவு வழங்கமுடியவில்லை. கூட்டுறவுச் சங்கங்களின் சகல வைப்புகளையும் ஈர்ப்பதற்கு தேவையான சட்டபூர்வ ஏற்பாடுகளின் பற்றுக்குறை காரணமாக அவற்றைக் கவரமுடியவில்லை. அரசாங்கத்தினால் உத்தரவாதம் வழங்கப்படாத காரணத்தினால் இவ்வங்கியினால் தொகுதிக் கடன் முறைகளில் நிதிகளை திரட்டவும் முடியவில்லை. கூட்டுறவு வங்கிகளும், சங்கங்களும் பங்குகளை முதலீடாக கொள்வனவு செய்யாது கடன்தகைமை பெறுவதற்காக மட்டும் கொள்வனவு செய்தமை காரணமாக இவ்வங்கியினால் பங்கு மூலதனங்களை சேர்க்க முடியவில்லை. இவற்றுடன் அதன் கடன் வாங்கல் வட்டி விகிதத்திற்கும் (3%) கடன்வழங்கும் வட்டி விகிதத்திற்கும் (3½ – 4%) இடையே இருந்த சிறிய இடைவெளி காரணமாகவும் அரசாங்க உத்தரவாதமின்றி உயராபத்து விவசாய நடவடிக்கைகளுக்கு நிதி வழங்கல் போன்ற பல காரணங்களுக்காகவும் இவ்வங்கியினால் சிறந்த இலாபத்தைப் பெற முடியவில்லை. பல ஆண்டு காலச் செயற்பாட்டின் பின்னர், கூட்டுறவுச் சங்கங்களுடனான அதன் தொழில் நடவடிக்கை குறைந்து வருவதை சமஷ்டி வங்கி அறிந்தது. 1960-களின் இறுதிக் கால கட்டங்களில் சமஷ்டி வங்கியில் கூட்டுறவு சங்கங்களினால் இடப்பட்ட வைப்புகளும், சமஷ்டி வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களும் திடீரெனக் குறைந்தன. வங்கியின் பணிப்பாளர் சபை ஆளணியினரின் தேர்ச்சி, அனுபவம் என்பவற்றின் பின்னடைவு காரணமாக கூட்டுறவு மாகாண, மாவட்ட வங்கிகளினதும், கூட்டுறவுச் சங்கங்களினதும் மிகை நிதியத்தினை சமப்படுத்தும் ஊடகமாக இருப்பதற்கு, அல்லது சங்கங்களுக்கிடையிலான கடன் வழங்கலை மேற்பார்வையிடுவதற்குத் தேவையான நம்பிக்கையைச் சமஷ்டி வங்கி பெற முடியவில்லை. பல சந்தர்ப்பங்களில் பணிப்பாளர்கள் சமஷ்டி வங்கியின் அல்லது கூட்டுறவு கடன் முறையின் மொத்த நலனில் அன்றி தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் கூட்டுறவு சங்கங்களின் சார்பாக நடந்து கொண்டனர். சமஷ்டி வங்கியிடம் தேவைப்பட்ட பதவியணியினர் இல்லாதிருந்தமையால் கூட்டுறவு சங்கங்களின் ஊழியருக்குத் தேவைப்படும் அறிவூட்டல் தேவைகளை வழங்க அவ்வங்கியினால் முடியவில்லை.

1960-களின் பிற்பகுதியளவில் முழுக் கூட்டுறவுக் கடன் அமைப்பினாலும் கிராமியத் துறையின் கடன் தேவைகளின் வரையறுக்கப்பட்ட பகுதியினை மட்டுமே எதிர்கொள்ள முடிந்தது. இப்பிரச்சினையின் தீவிர தன்மையை 1957-ம் வருட ''இலங்கையில் கிராமிய படுகடன் சுமை'' ஆய்வு வெளிப்படுத்துகின்றது. இந்த ஆய்வின் படி கிராமியக் குடும்பங்களில் 54 சதவீதம் கடன் சுமையுள்ளதாகவும், ஒரு கிராமியக் குடும்பத்தின் சராசரிக்கடன் ரூபா 750/- ஆக இருந்ததென்பதும் தெரிகின்றது. அச்சமயத்தில் கிராமிய சனத்தொகையின் மொத்தக் கடன் ரூபா 50 கோடி என மதிப்பிடப்பட்டது. மேலும், இந்த ஆய்விலிருந்து மொத்த கடனில் 4.1 சதவீதம் மட்டுமே கூட்டுறவுச் சங்கங்களுக்கு செலுத்த வேண்டியிருந்தது என்பதும் 2.6 சதவீதமும், 11 சதவீதமும் முறையே அரசாங்கத்துக்கும், வர்த்தக வங்கிகளுக்கும் செலுத்தப்பட வேண்டியிருந்தது என்பதும் தெரியவந்தது. இக்கடன்களின் பெரும் பகுதி (92 சதவீதம்) தொழில் ரீதியாக கடன் வழங்குபவர்கள், காணிச் சொத்தக்காரர்கள், கடைகள் வைத்திருப்பவர்கள், வர்த்தகர்கள் போன்றோருக்கு செலுத்தப்பட வேண்டியதாக இருந்தது.

1957 இல் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வின் அடிப்படையில், கூட்டுறவு இயக்கமானது, தனிநோக்கக் கூட்டுறவு சங்கங்களை, பலநோக்கு கூட்டுறவு சங்கங்களாக இணைத்து புனரமைக்கப்பட்டது. பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள், கிராமியத்துறையில் கடன்களை வழங்கி, சேமிப்புக்களை ஒழுங்குபடுத்துவதன் மூலமாக கிராமிய வங்கித் தொழிலை மேற்கொள்ளுமென எதிர்பார்க்கப்பட்டது. அவை வழங்கவிருந்த வசதிகளுள் சந்தைப்படுத்தல், நுகர்வோர் பொருட்களை வழங்கல், விவசாய உள்ளீடுகள், களஞ்சிய வசதிகள், அங்கத்தவருக்கான வேலை வாய்ப்பு முதலியன போன்ற பல்வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவைகள் அடங்கும். கிராமியத் துறையின் பொருளாதார நடவடிக்கைகளைத் தூண்டுவதற்கான முதனிலை கிராமிய வங்கியாக பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் பணியாற்ற வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது.

ப. நோ. கூ. சங்கங்களின் அறிமுகத்துடன், உயர் செயற்றினும், கட்டுக்கோப்பு வலுவும், கூட்டுறவு இயக்கம் அதன் நோக்கங்களை அடைதலுக்கும், கிராமிய வங்கித் தொழிலையும் விவசாயக் கடனையும் அபிவிருத்தி செய்வதற்குமான ஆதரவினை அளிப்பதற்குமான போதிய நிதியாற்றல் உள்ள விசேட கடன் நிறுவனமொன்றின் தேவை உணரப்பட்டது. விவசாய உணவு அமைச்சு, இலங்கை மத்தியவங்கி அமைச்சரவை, பாராளுமன்றம் போன்ற பல்வேறு நிறுவனங்களுக்கிடையே பல வருடங்களாக இடம் பெற்ற விவாதங்கள், பேச்சுவார்த்தைகள், முரண்பாடுகள் என்பவற்றின் பின்னர் 1961 இன் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டம் நிறைவேற்றப்பட்டு, மேற்கூறிய தேவைகளை எதிர்கொள்ளவென மக்கள் வங்கி அதே ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது. மக்கள் வங்கியின் ஆரம்பத்துடன் கூட்டுறவு சமஷ்டி வங்கி கலைக்கப்பட்டு அதன் சொத்துக்கள் பொறுப்புக்கள் மக்கள் வங்கியினால் பொறுப்பேற்கப்பட்டன. அச்சமயத்தில் இயங்கிவந்த 15 கூட்டுறவு மாகாண, மாவட்ட வங்கிகளில் 9 வங்கிகள், மக்கள் வங்கிக் கிளைகளாக மாற்றப்பட்டன. (1) வங்கியின் 50 சதவீத பங்குகளை அரசாங்கம் வைத்திருப்பதன் மூலமாக அரசாங்கத்தின் பங்குபற்றலை ஏற்படுத்தல் (மிகுதி 50 சதவீதபங்குகள் கூட்டுறவு சங்கங்களுக்கென ஒதுக்கப்பட்டது), (2) சகல கூட்டுறவுச் சங்கங்களும் தங்கள் நிதிகளை புதிய வங்கியில் மட்டுமே வைப்புச் செய்ய வேண்டுமெனும் சட்டரீதியான தேவை (3) வர்த்தக வங்கித் தொழிலீடுபட்டு செயற்படுவதற்கு வங்கிக்கு வழங்கப்பட்ட அதிகாரம் (4) அரசாங்க நிதிகளை அல்லது வெளியிலிருந்து தொகுதிக் கடன் முறிகளை அரசாங்க உத்தரவாதத்துடன் பெறுதலுக்கான அதிகாரம் போன்றவற்றை மக்கள் வங்கிக்கு வழங்கியதன் மூலம் தாக்கமான ஒரு நிதி நிறுவனமாக அது அமைய வகை செய்யப்பட்டது.

மக்கள் வங்கிச் சட்டத்தில் விளக்கிக் கூறப்பட்டுள்ளவாறு புதிய வங்கியின் நோக்கங்களாவன: இலங்கையில் கூட்டுறவு இயக்கத்தையும் கிராமிய வங்கித் தொழிலையும் விவசாயக் கடனையும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும், பயிர்ச் செய்கைக் குழுக்களுக்கும், வேறு நபர்களுக்கும் நிதியுதவியும், வேறு உதவிகளும் அளிப்பதன் மூலமாக அபிவிருத்தி செய்தல்; மேலும் நாடுமுழுவதிலும் குறிப்பாக கிராமப்புறங்களில் கிளைகள் பலவற்றையேற்படுத்தி மக்களின் பெரும்பான்மையினரிடையே பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தல், கிராமிய பொருளாதாரத்தை உருமாற்றுதல் என்பனவாகும்.

மக்கள் வங்கி தொழிற்படத் தொடங்கிய மிகக்குறுகிய காலத்திலேயே, வெகு தொலைவிலுள்ள பகுதிகளுக்கு கிளை வங்கி வசதிகளை வழங்குவதிலுள்ள கஷ்டங்களை அது உணரத் தொடங்கியது. இப்பகுதிகளில் இயக்க, நிர்வாக செலவுகள் உயர்வாக இருந்ததுடன் அபாய ஏதுக்களும மலிந்திருந்தன. இதன் காரணமாக அதன் கிளை வங்கித்தொழிலை தூரதொலைவிலுள்ள பகுதிகளுக்கு விரிவாக்கல் சாத்தியமற்றதென மக்கள் வங்கி உணர்ந்தது. இந்நிலைமை, கிராமிய பொருளாதாரத்தினதும் மக்களினதும் தனிப்பட்ட சில பண்புகளாலேயே உருவாகியிருந்தது. குறிப்பாக பொருத்தமான பிணைகளின்மை, வருமானத்தின் நிச்சயமற்ற தன்மையும், ஒழுங்கற்ற தன்மையும் போன்ற சில இயல்புகளை குறிப்பிடலாம். வங்கி அதன் இயக்கத்தின் ஆரம்ப கட்டங்களில், வர்த்தகவங்கிகள் இல்லாத கிராமியப்புறங்களில் பல கிளைகளைத் திறந்த போதிலும், இந்த வசதிகள் குறைந்த வருமான மட்டங்கள் உள்ளவரிடையே நிலையான வருமானமுள்ளவர்களுக்கும், நடுவகுப்பினர் சிலருக்குமே கிடைக்கக்கூடியனவாயிருந்தன.

கிராமிய வங்கி என்பது வங்கி என்ற பதத்துக்கமைய ஆடம்பரமான வங்கியொன்றல்ல. இது பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் ஒரு வங்கித் தொழில் அலகாக - கடன் வழங்கும், சேமிக்கும் திணைக்களமாக ஆரம்பிக்கப்பட்டது. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஒரு பாகமாக கூட்டுறவு வங்கி விளங்கியமையால் அதற்கென்று பிறிதான சட்டபூர்வ அமைப்பெதுவுமின்றி அது ப. நோ. கூ. சங்க துணைச் சட்டங்களின் அதிகாரத்திற்குட்படுத்தப்பட்டது.

ஆரம்பகட்டத்தில், கிராமிய வங்கியினை அமைப்பதற்கு ஒரு ப. நோ. கூ. ச. தெரிந்தெடுக்கப்பட்டதும், கிராமிய வங்கி இயங்குவதற்கான நியதிகளையும் நிபந்தனைகளையும் விளக்கி, அச்சங்கம் மக்கள் வங்கியுடன் ஒரு ஒப்பந்தத்திற்குட்பட வேண்டியிருந்தது. மேலும், தெரிந்தெடுக்கப்பட்ட ப. நோ. கூ. சங்கங்கள் அவற்றின் துணைச் சட்டங்களில், ப. நோ. கூ. ச. ஒரு கிராமிய வங்கியினை அமைப்பதற்கு ஏற்ற சட்டபூர்வ நிலைமையை வழங்குவதற்கான மாற்றங்களையும் ஏற்படுத்த வேண்டியிருந்தது. கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தினாலும், மக்கள் வங்கியினாலும் காலத்திற்குக் காலம் வழங்கப்படும் கட்டளைகளுக்கும், அறிவுறுத்தல்களுக்கும், கூட்டுறவு கிராமிய வங்கி கீழ்ப்பணிந்து நடத்தல் வேண்டும். கிராமிய வங்கிகள் அதன் ப. நோ. கூ. சங்கங்களின் பெயரில் தொழிலை நடத்திய வேளையில், நகை அடைவுபிடிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயத்தில் மக்கள் வங்கியின் முகவராகவும் கடமையாற்றியது.

கிராமிய வங்கிகள் பெரும்பாலும் ப. நோ. கூ. ச. கட்டடங்களில் அமைந்திருந்தன. அத்துடன் அந்த வங்கியின் ஊழியர்களும் ப. நோ. கூ. ச. ஊழியர்களின் ஒரு பாகமாயமைந்தனர். கிராமிய வங்கியின் ஆளணியினரில் வங்கி முகாமையாளரும் (கடன் முகாமையாளர்) வங்கியின் செயற்பாடுகளைப் பொறுத்து சில உதவியாளர்களும் இருந்தனர். ப. நோ. கூ. சங்கத்திற்குட்பட்ட கிராமிய வங்கியின் நிருவாகம், ப. நோ. கூ. ச. பணிப்பாளர் சபையினால் அதன் பொது முகாமையாளரினூடாக மேற்கொள்ளப்பட்டது.

கிராமியத் துறையில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிற்கேனும் கடன் வசதிகளை விஸ்தரித்து, சேமிப்புகளைத் திரட்டுவதற்கும் இத்துறையில் பொருளாதார நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கு உதவுவதற்கும் கிராமிய வங்கித் திட்டம் பயனுள்ள ஒரு கருவியாக உருவாக்கப்பட்டது. கிராமிய வங்கிகளை ஸ்தாபிப்பதற்கான மூல நோக்கங்களில் பின்வருவன சேர்க்கப்பட்டிருந்தன.

1. கிராமியத் துறையில் குறைந்த வருமானப் பிரிவினருக்கு பயனுள்ள வகையில் கடன் வசதிகளை வழங்கல்.
2. நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் கிராமியத் துறையில் சேமிப்புக்களைத் திரட்டல்.
3. வழங்கப்படும் கடன் வசதிகளில் போதியளவு, விபரமான கண்காணிப்பினை வழங்கல்.
4. ஆவணமிடுதல், கணக்கிடு செய்தல் முறைகளில் செயற்றிறனை மேம்படுத்தல்.
5. கிராமியத் துறை மக்களிடையே வங்கித் தொழில் பழக்கங்களை மேம்படுத்தல் என்பனவாகும்.

இந்த நோக்கங்களை அடைதற் பொருட்டு இந்த நிறுவனங்களால் பின்வரும் பணிகள் நிறைவேற்றப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது.

1. ஒவ்வொரு நோக்கத்தினதும் அங்கிகரிக்கப்பட்ட வரையறைக்குள், ப. நோ. கூ. சங்க அங்கத்தவர்களுக்கு பல்வேறு நோக்கங்களுக்கும் கடன் வசதிகளை வழங்கல்.
2. அங்கத்தவரிடமிருந்தும், அங்கத்தவரல்லாதவரிடமிருந்தும் வைப்புகளை ஏற்றல்.
3. அங்கத்தவருக்கும், அங்கத்தவரல்லாதவருக்கும் அடகு பிடிக்கும் வசதிகளை வழங்கல்.
4. கடன்களை, சந்தைப்படுத்தலோடு இணைத்தல்.

கிராமிய வங்கித் திட்டத்தின் கீழ் அதன் அங்கத்தவர்களுக்கு உற்பத்தித் தேவைகளுக்கும் (விவசாயம், கால்நடை வளர்ப்பு, குடிசைக் கைத்தொழிலுட்பட), வீடமைப்பு, கடன் மீளல், வர்த்தகம், நுகர்வு, மின் இணைப்பு என்பவற்றுடன் வேறு அவசரதேவைகளுக்கும் நிதியுதவி கிடைக்கக் கூடியதாகவிருந்தது. ப. நோ. கூ. சங்கங்களுக்கூடாக அரசாங்கத்தினால் நெல் உற்பத்திக்கென கடன் திட்டமொன்று இயக்கப்பட்டு வந்தமையால் ஆரம்ப காலத்தில் கூட்டுறவு வங்கிகள் நெல் உற்பத்திக்கென வசதிகளெதனையும் வழங்கவில்லை. ஆரம்ப கட்டத்தில் கடன்களின் தேவைகளைப் பொறுத்து, அதாவது உற்பத்திக்கென ரூபா 2,500/- அவசர தேவைகளுக்கென ரூபா 200/- என கடன் உச்சளவு வகுக்கப்பட்டிருந்தது. கடன் வசதிகள் ஐந்து வருடகால நீடிப்பில் குறுகிய கால, நடுத்தரகால கடன்கள் அடங்கியிருந்தன. கடன்களின் நோக்கங்களைப் பொறுத்து மீள் கொடுப்பனவுக் காலப்பகுதியின் உச்ச அளவு நிர்ணயிக்கப்பட்டது. ஆரம்பத்திலிருந்தே மக்கள் வங்கியின் அதிகாரம் பெற்ற முகவர்களாக கிராமிய வங்கிகள் அடைவு பிடித்தலை மேற்கொண்டன.

கிராமிய வங்கிகள் அங்கத்தவருக்கும், அங்கத்தவரல்லாதவருக்கும் சேமிப்பு வைப்புக்கணக்குகளையும், நிலையான வைப்புக் கணக்குகளையும் திறந்து வைத்தது. சங்கத்திற்கு தமது உற்பத்திகளை விற்பனை செய்வதிலிருந்து பெறும் பணத்தின் ஒரு பகுதியையேனும் வைப்புச் செய்வதற்கு

கிராமிய வங்கிகளின் வைப்புக்களும் முற்பணங்களும் 1965 - 1971

| வருட முடிவு | வங்கிகளின் எண்ணிக்கை | சேமிப்பு வைப்புக்கள் | | நிலையான வைப்புக்கள் | | மொத்தம் | | குறுங்கால கடன்கள் | | அடகு கடன் | | மொத்தம் | | வைப்புக்களுக்கும் முற்பணங்களுக்கும் இடையில் வித்தியாசம் ரூ. '000 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | தொகை ரூ. '000 | எண்ணிக்கை | தொகை ரூ. '000 | எண்ணிக்கை | தொகை ரூ. '000 | எண்ணிக்கை | தொகை ரூ. '000 | எண்ணிக்கை | தொகை ரூ. '000 | எண்ணிக்கை | தொகை ரூ. '000 | |
| 1965 | 8 | 2,924 | 492 | 9 | 5 | 2,933 | 496 | 1,153 | 915 | | 253 | | 1,167 | – 670 |
| 1966 | 13 | 4,634 | 703 | 15 | 23 | 4,651 | 726 | 1,783 | 1,327 | 4,222 | 427 | 6,005 | 1,754 | – 1,028 |
| 1967 | 27 | 8,792 | 1,306 | 41 | 65 | 8,833 | 1,371 | 2,897 | 2,029 | 6,598 | 633 | 9,495 | 2,663 | – 1,291 |
| 1968 | 44 | 17,359 | 3,111 | 287 | 223 | 17,646 | 3,333 | 5,586 | 3,631 | 9,507 | 1,086 | 15,093 | 4,716 | – 1,383 |
| 1969 | 68 | 28,626 | 5,713 | 724 | 461 | 29,350 | 6,173 | 7,893 | 5,572 | 14,325 | 1,524 | 22,218 | 7,096 | – 922 |
| 1970 | 90 | 49,936 | 16,109 | 892 | 799 | 50,831 | 16,908 | 10,017 | 7,122 | 18,092 | 1,980 | 28,109 | 9,102 | + 7,806 |
| 1971 | 111 | 60,371 | 17,188 | 838 | 676 | 61,209 | 17,864 | 10,725 | 7,144 | 21,044 | 2,172 | 31,769 | 9,317 | + 8,548 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கத்தவர்கள் ஊக்குவிக்கப் பட்டனர். அங்கத்தவர்களுக்கு அவர்களின் சேமிப்புக் கணக்குகளினூடாக கடன் வழங்கப்பட்ட போதிலும் இது நேரடியாக வழங்கப்படவில்லை. கிராமிய வங்கித் திட்டத்தின் ஆரம்ப காலத்தில் அங்கத்தவர்களுக்கு நடைமுறைக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டபோதிலும், குறித்த சில சட்டப்பிரச்சினைகள் காரணமாக விரைவில் இந்த வசதியை வாபஸ் பெறவேண்டியிருந்தது.

கிராமிய வங்கிகள் ப.நோ.கூ. சங்கங்களின் திணைக்களங்களாக ஆரம்பிக்கப்பட்ட போதிலும், அவற்றின் ஒழுங்கமைப்பு முறையில் மக்கள் வங்கியுடன் தனித் தொடர்புடையதாக இருந்தன. மக்கள் வங்கி, கிராமிய வங்கிகளுக்கு நிதி, முகாமைத்துவம், கண்காணிப்பு என்பவற்றுடன் வேறு உதவிகள் மூலமாக அதனது முழு ஒத்துழைப்பினை தொடர்ந்தும் வழங்கிவந்தது. அது கிராமிய வங்கிகளுக்கு, அங்கத்தவருக்கு மேலதிகப் பற்று வசதிகளையும் மீள கடன் கொடுத்தலுக்கான தவணைக் கடன் வசதிகளையும் வழங்கியது. ஆரம்ப வருடங்களில் கிராமிய வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அவற்றில் வைக்கப்பட்ட வைப்புகளை விஞ்சியதுடன், அத்தகைய விஞ்சிய வேறுபாடு மக்கள் வங்கியினால் வழங்கப்பட்டும் வந்தது. கிராமிய வங்கிகளினால் கொண்டு நடாத்தப்படும் தொழில்களின் சகல அம்சங்களிலும் ஒவ்வொன்றிற்கும் அறிவுரை வழங்கி உதவி புரிய அதன் ஊழியரொருவரை மக்கள் வங்கி அமர்த்தியது. கிராமிய வங்கிகளின் கடன் முகாமையாளர்களுக்கு மக்கள் வங்கிக் கிளைகளில் பயிற்சி வசதிகள் வழங்கப்பட்டன. அருகாமையில் உள்ள மக்கள் வங்கி கிளையினால் மாதாந்த கண்காணித்தல் மேற்கொள்ளப்பட்ட அதே வேளையில், வங்கியின் தலைமைப்பணிமனையினால் ஒழுங்கான பரிசிலனைகளும் நடாத்தப்பட்டு வந்தன. கிராமியவங்கிகள், அவற்றின் செயலாற்றல் குறித்த அறிக்கைகளையும், புள்ளிவிபரங்களையும் ஒழுங்காக மக்கள் வங்கிக்கு சமர்ப்பிக்க வேண்டுமென்ற தேவையேற்படுத்தப் பட்டது. இலகுவான கடன் நியதிகளில் அடைவு பிடிப்பதற்கான இரும்புப் பெட்டிகளையும், கரும பீடங்களையும், எழுது கருவிகளையும். உபகரணங்களையும் கிராமிய வங்கிக்கு மக்கள் வங்கி வழங்கியது.

கிராமியத்துறையினருக்கு வரையறுக்கப்பட்ட சேவைகளை வழங்குவதிலும், கிராமிய வங்கிகள் வர்த்தக வங்கிக் கிளைகளிலும் பார்க்க குறிப்பிட்ட சில அனுகூலங்களைக் கொண்டிருந்தன. உதாரணமாக, கிராமிய வங்கிகள் அதிகமாக ப.நோ.கூ.ச. கட்டடங்களில் அமைந்தனவாக இருந்ததுடன், ப.நோ.கூ.ச. ஊழியர்களின் ஒரு பாகமான அதன் ஊழியர்கள் மிகக் குறைந்த சம்பளம் பெறுபவர்களாகவும், வர்த்தக வங்கிகளின் ஏனைய பொருளாதார வசதிகளுடன் ஒப்பிடும்போது குறைவான வசதிகளைப் பெற்றவர்களாகவும் காணப்பட்டனர். வர்த்தக வங்கிகள் போலன்றி கிராமிய வங்கிகள் விரிவான சேவைகளை வழங்க வேண்டிய தேவையின்றி கிராமிய மக்களுக்கு போதுமானதும், வரையறுக்கப்பட்டதுமான சேவைகளை மட்டுமே வழங்க வேண்டியிருந்தன. அத்தகைய கிராமிய வங்கிகளின் வரையறுக்கப்பட்ட செயற்பாடுகள் அவற்றின் செயற்பாட்டுச் செலவுகளையும் வரையறைக்குட் படுத்தின. வர்த்தக வங்கிக்கிளைகள் இயங்க முடியாத கிராமங்களில், கிராமிய வங்கிகள் அவற்றின் குறைவான செயற்பாட்டு செலவுகள் காரணமாக சாதகமாக இயங்கின. கிராமிய வங்கியின் பணிகள் கூட்டுறவுச் சங்கத்தின் வரையறுக்கப்பட்ட செயற்பாட்டுப் பிராந்தியத்திற்குள் அடங்கியிருந்ததுடன் வங்கியின் அலுவலர்களும் பெரும்பாலும் அப்பிராந்தியத்தினை சேர்ந்தவர்களாகவே இருந்தனர். இத்தகைய உள்ளூர் அலுவலர்கள், அப்பிராந்திய நிலைமைகளைப் பற்றியும் வாடிக்கையாளர் பற்றியும் சிறந்த அறிவினைப் பெற்று, அதன் காரணமாக அத்தகைய அறிவினைப் பயன்படுத்தி கடன் பெறுபவரின் கடன் தேவைகளையும் கடன் வழங்கும் தீர்மானங்களை மேற்கொள்கையில் கடன் பெறுமதியையும் மதிப்பிட முடிந்தது. இத்தகைய நெருங்கிய அறிவுடன், கிராமிய வங்கிகள் அவற்றின் கடன் வழங்கலில் கடன் பெறுபவரின் பிணைகளைத் தளர்த்தி, அதாவது நிலையான சொத்துக்களைப் பிணைவைத்து கடன் வழங்காது சொந்த உத்தரவாதங்களில் கடன்வழங்க முடிந்தது. கிராம மக்களுக்குக் கிடைக்கக் கூடியதாகவிருந்த பெரும்பாலான நிலையான சொத்துக்கள் பரம்பரையாகப் பெற்ற, பிரிவுபடாத காணிகளாக, அவற்றின்மீது வர்த்தகவங்கிக் கடன்களைப் பெறுவதற்கு தகுதியற்றனவாகக் காணப்பட்டமையால் கிராமியக் கடன் வழங்கும் துறையில் கிராமிய வங்கிகளுக்கு இது பெரும் அனுகூலமாகவிருந்தது.

மறுபக்கத்தில், கூட்டுறவுக் கட்டடங்களில் அமைந்திருந்த கிராமிய வங்கிகளின் உள்ளூர் ஊழியர்கள் இப்புதிய நிறுவனத்துடன் கிராமவாசிகள் பரிச்சயம் கொள்வதற்கு உதவினர். குறைந்த கல்வியறிவு பெற்ற, எளிமையான கிராம வாசிகள் அவர்களுக்குத் தேவையான வங்கித் தொழில் வசதிகளை, அதிக விஸ்தாரமான வங்கி நடைமுறைகளும், அதிக சம்பிரதாயங்களும் இன்றி பெற்றுக்கொள்ளக் கூடிய கிராமிய வங்கிகளையே விரும்பினர். அதிகார வர்க்க கெடிபிடியில்லாத வங்கித் தொழில் நிறுவனமாயமைந்த கிராமிய வங்கி, அதன் கிராமிய வாடிக்கையாளருடன் நெருங்கி தொடர்பினை பேணும் நிலையிலிருந்தது. வாடிக்கையாளருக்கு உகந்ததாகவிருந்த வங்கியின் அலுவல் நேரம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருதரத்தினருக்கும் அனுகூலமாக அமைந்தது. கிராமிய வங்கிகளினல் மேற்கொள்ளப்பட்ட அடகு பிடிக்கும் முறை, கிராமிய மக்கள் பழக்கப்படுத்தப்பட்டிருந்த பாரம்பரிய கடன் வழங்கல் முறையாகவிருந்தது. ப. நோ. கூ. சங்கங்களின் சந்தைப் படுத்தலுடனும், விற்பனையுடனும் வங்கித் தொழிலை இணைத்தமை, கிராம உற்பத்தியாளர் உகந்த நேரத்திற்கு தேவையான கடனைப் பெற உதவியதுடன், அவர்களின் உற்பத்தி வருமானத்தில் ஒரு பகுதியை சேமிப்பதற்கும் உதவியது. நாடு முழுவதும் புவியியல் ரீதியில் பரவியிருந்த அமைப்பான கூட்டுறவு சங்கங்களினூடாக கிராமிய வங்கி முறை செயற்படுத்தப்பட்டமையால், புதிய வங்கித் தொழில் முறை கிராமியத் துறையில் பெருமளவிலான உற்பத்தியாளரையும், நுகர்வோரையும் அடைய முடிந்தது. கிராமியப் பொருளாதார தன்மைக்கிணங்க, இத்துறையிலிருந்த பெருமளவிலான வருமான உழைப்பாளிகள் கமக்காரராகவும், சிறுகாணிகளைக் கொண்டவர்களாகவும், உயர் பருவகால வருமான வேறுபாடுகளுடையவர்களாகவும் காணப்பட்டனர். இவர்களின் உற்பத்தி, நுகர்வு செலவினங்களை வருடம் முழுவதும் எதிர்கொள்ள வேண்டியிருந்த சமயத்தில் அவர்கள் தங்கள் வருமானங்களை அறுவடை சமயங்களில், அதிகமாக வருடத்திற்கு இரு தடவைகள் பெற்றனர். அறுவடை காலங்களில் அவர்களது மிகை வருமானம், கிராமிய வங்கிகளினல் வைப்புத் திரட்டல்களாக உட்கிரகிக்கப்பட்டு, இந்த வளங்கள் பின்னர் வேறு பொருளாதார நடவடிக்கையிலான முதலீட்டிற்காக வேறு துறைகளுக்கு மாற்றப்பட்டன. பயிர்ச் செய்கையற்ற காலங்களில் கிராம வாசிகளுக்கு பணம் தேவைப்படும் போது, கிராமவங்கிகள் பொருளாதாரத்தின் ஏனைய துறைகளிலிருந்து வளங்களைப் பெற்று கிராம வாசிகளிடையே பகிர்ந்தளித்தன.

வெவ்வேறு பிராந்தியங்களில் இயங்கும் கிராமிய வங்கிகளை தனித்தனியாக எடுத்துப்பார்த்தால் பொதுவாக சில வங்கிகள் நிதியில் தன்னிறைவு மட்டத்திற்கு அப்பாற்பட்டும், வேறு சில அம்மட்டத்திற்குக் குறைந்தும் காணப்படுகின்றன. தன்னிறைவு மட்டத்திற்கு மேலாகவுள்ள வங்கிகளின் மிகை நிதிகள், வளங்களின் ஆதாரம் தேவைப்படும் வங்கிகளுக்கு மாற்றப்பட்டன. கிராமிய வங்கிமுறையானது, ஆரம்ப காலங்களில் நிதிப் பற்றுக்குறைப் பிரச்சினையை எதிர்நோக்கியது. கிராமியத் துறையின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படவென வெளித்துறைகளிலிருந்து இந்த நிதிகள் வழங்கப்பட்டன.

1964 மார்ச் மாதம் 17 ஆந் திகதியன்று திறந்து வைக்கப்பட்ட ''மெனிக்கின்ன கிராமிய கூட்டுறவு வங்கி'' என்ற பெயருடைய முதல் கிராமிய வங்கியுடன் கூட்டுறவு கிராமிய வங்கித் தொழில் ஆரம்பமாகியது. கண்டி மாவட்டத்தில் மெனிகின்னவிலுள்ள கூட்டுறவுச் சங்கத்தின் ஒரு கிளையாக இது அமைந்தது. அதே ஆண்டின் ஏப்ரல், மே மாதங்களில் மேலும் இரு கிராமிய வங்கிகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், அடுத்துவந்த 1965 ஆம் 1966 ஆம் ஆண்டுகளில், ஒவ்வொரு ஆண்டிலும் 5 வங்கிகளை அமைத்ததன் மூலம் இத்திட்டம் விஸ்தரிக்கப்பட்டது. இத்திட்டம் திருப்திகரமாக இயங்குகின்றதென்ற தொடக்க அனுபவத்துடன் விஸ்தரிப்பு வீதம் அதிகரிக்கப்பட்டது. 1966 இறுதியிலிருந்து 1971 முடிவு வரை ஆண்டொன்றிற்கு சராசரி 20 வங்கிகள் திறக்கப்பட்டதுடன் இந்த வங்கிகளின் எண்ணிக்கை 111 ஆக அதிகரித்தது. 1966 முதல் 1971 வரையிலான காலத்தில் கிராமிய வங்கிகளின் விஸ்தரிப்பு சீரான வளர்ச்சியைக் காட்டியபோதிலும், 1971 ற்கு பின்னரான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இந்த வேகம் குறைவாக இருந்தது. இதற்கான காரணம் கிராமிய வங்கித் திட்டத்தின் தொடக்க காலத்தில், தெரிந்தெடுக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களில் மட்டுமே பரீட்சார்த்த அடிப்படையில் வங்கிகள் அமைவாக்கப்பட்டன என்பதாகும்.

1966 இறுதிவரை கிராமிய வங்கிகளில் சேமிப்புக் கணக்கு வைத்திருப்போரின் எண்ணிக்கை 4,600 ஆக அதிகரித்தது. ஆனல் அதன் பின்னர் 1971 இறுதியில் இந்த எண்ணிக்கை 60,400 ஆக துரிதமாக அதிகரித்தது. எவ்வாறெனினும், சேமிப்புக் கணக்கு வைத்திருப்போரின் எண்ணிக்கை 1969 இறுதியில் 28,600 ஆக இருந்து 1970 இறுதியில் 49,900 ஆக அதிகரித்தது. இதில் 54 சதவீதம், 1970 இறுதிக் காலாண்டின் போது இடம் பெற்ற ரூபா்த்தாள்கள் இரத்து செய்யப்பட்டதன் காரணமாக ஏற்பட்டது. இதே போக்கினைப் பின்பற்றி சேமிப்பு வைப்புகளும் 1966 இறுதியிலிருந்த 703,000 ரூபாவிலிருந்து 1971 இறுதியில் 17,185,000 ரூபாவாக அதிகரித்தன. 1970 இல் நான்காம் காலாண்டில் சேமிப்புவைப்புகள் ரூபா 8,255,000 இலிருந்து ரூபா 16,109,000 ஆக இரட்டித்தது. இதற்கான காரணம் சேமிப்புக் கணக்கிலேற்பட்ட அதிகரிப்பும், ரூபாத்தாள்கள் இரத்து செய்யப்பட்டதன் விளைவாக சேமிப்புக் கணக்குகளில் இருந்த சராசரி வைப்புகளின் தொகைகளின் அதிகரிப்புமாகும். 1971 இறுதியில் சேமிப்பு வைப்புகள் மிகக் குறைவாகவே அதிகரித்தன. ஏனெனில் ரூபா வாபஸ் பெறப்பட்ட காலத்தின் போது வைப்புச் செய்யப்பட்ட நிதிகளின் கணிசமான பகுதி 1971 முற்பகுதியில் மீளப் பெறப்பட்டது. கிராமிய வங்கிகளில் வரையறுக்கப்பட்ட நிலையான எண்ணிக்கை வைப்புக் கணக்குகளே இருந்தன; ஆனல் அதன் சேமிப்புக் கணக்குகளுடன் ஒப்பிடுகை யில் உயர் சராசரி வைப்புத்

( 33 –ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களனி ப.நோ. கூ. சங்க பிரதேசத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு கூ. கி. வங்கிகள் பற்றிய ஆய்வு

யு. அஜித்தா தென்னக்கோன்
(விரிவுரையாளர், களனி பல்கலைக்கழகம்)

1989 மார்ச் மாதத்தில், இலங்கையிலுள்ள கிராமிய வங்கிகளின் 25 வது ஆண்டு பூர்த்தி அடைகின்றது. மக்கள் வங்கியினால் கிராமிய வங்கித் திட்டம் 1964-ல் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அப்போது கிடைக்கக் கூடியதாக இருந்த வரையறைக்குட்பட்ட வங்கி வாய்ப்புக்களை கிராமியப் பிரதேசங்களுக்கு விஸ்தரித்தமை மிகவும் முக்கியமான புதுமை நோக்கிலான ஓர் அணுகு முறையாகும். வங்கித் தொழில், கிளை வங்கிச் சேவை ஆகியவற்றின் அனுகூலங்களை ஒன்றுசேர்க்கக் கூடிய கிராமிய வங்கி முறையின் சிகரமாக மக்கள் வங்கி செயல்பட வேண்டும். கடந்த இருபது ஆண்டுகளில் குறிப்பாக 1972 ல் மறுசீரமைப்பின் பின்னர், கிராமிய வங்கிகள் நல்ல வளர்ச்சி கண்டுள்ளன. 1972ம் ஆண்டின் பின்னர், கிராமிய வங்கிகள் கூட்டுறவு கிராமிய வங்கிகள் என அழைக்கப்பட்டன (கூ. கி. வ.) 1988 ம் ஆண்டின் நடுப் பகுதியில் (30.06.88) 282 கிராமிய வங்கிகள் இயங்கின; மேலும், 685 விசேட கிளைகள் இவற்றோடு இணைக்கப்பட்டிருந்தன. கிராமிய துறைக்கு நிறுவன ரீதியான நிதி வசதி வழங்கப்பட்டமை இதன் உயர்வுக்கு ஒரு குறிப்பிடத்தக்க பங்களிப்பினை நல்கியது.

ஆய்வின் நோக்கங்கள்

1. தேர்ந்தெடுக்கப்பட்ட கூ.கி. வங்கிகளின் வைப்புக்கள், முன்பணம் என்பவற்றின் போக்குகளைப் பரீட்சித்தல்.

2. கிராமத்துறையின் அபிவிருத்தியில், கிராமிய சேமிப்புகளை ஒன்று திரட்டுவதில் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமிய வங்கிகள் எந்தளவுக்கு வெற்றியடைந்துள்ளன என்பதைப் பகுப்பாய்வு செய்தல்.

3. இலங்கையிலுள்ள கூட்டுறவு கிராமிய வங்கிகளின் மொத்த செயலாற்றலுடன் இவ்வாய்வின் பலாபலன்களை ஒப்பிட்டுப் பார்த்தல்.

4. கூட்டுறவு கிராமிய வங்கிகளுக்கு எவ்வாறு திருத்தங்களை அறிமுகப்படுத்தலாம் என்பதனை அறிதல்.

ஆராய்ச்சி முறை

1988ம் ஆண்டின் முடிவில் கம்பஹா மாவட்டத்தில் அமைந்துள்ள களனி ப. நோ. கூ. சங்க பிரதேசத்தில் உள்ள கூ.கி. வங்கி அலுவலகங்களின் மொத்த எண்ணிக்கை 6 ஆகும். இந்தக்கட்டுரை களனி ப. நோ. கூ. சங்கப் பிரதேசத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு கூ. கி. வங்கிகளான வெதமுல்ல (1973) களனி (1981) வனவாசல (1981) பேலியகொட—பட்டிய (1986) ஆகியனவற்றில் நடாத்திய வெளிக்கள ஆய்வினை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஆய்வுக்குட்படுத்தப்படும் ப. நோ. கூ. சங்க பிரதேசத்தில் 6 கூ. கி. வங்கிகள் ஆங்காங்கு அமைந்துள்ளபடியினால், அனைத்து வங்கிகளினதும் சேமிப்புகள், முதலீடுகள் முதலியவற்றை ஆழமாக பகுப்பாய்வு செய்வது மிகவும் கடினமான காரியமாகும். எனவே குறிக்கோளின் அடிப்படையில் 4 கூ. கி. வங்கிகளை நாம் தேர்ந்தெடுத்துள்ளோம்.

1981 - 1988 ஆண்டுக் காலத்தின்போதான செயலாற்றல் பற்றிய விபரமான பகுப்பாய்வு இத்தேர்ந்தெடுக்கப்பட்ட கூ.கி. வங்கிகளில் இருந்து பெறப்பட்டுள்ளது. 1981 - 1988 ஆண்டு வரையிலான சேமிப்புகளும் முற்பணங்களும் களனி ப. நோ. கூ. சங்கங்களினதும் கூ. கி. வங்கிகளினதும் கிடைக்கப்பட்ட பதிவேடுகளிலிருந்து பெறப்பட்டது. அதன்படி தெளிவுபடுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டபோது, அவற்றை ப. நோ. கூ. சங்க உத்தியோகத்தர்களிடமிருந்தும், கூ. கி. வங்கி உத்தியோகத்தர்களிடமிருந்தும் பெறப்பட்டது. கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களினால் கணக்குப் பரிசோதனை ஒழுங்காகச் செய்யப்படுவதனால் இவ்விலக்கங்கள் நம்பகமானவையாகும். மேலும், இலங்கையிலுள்ள கூ. கி. வங்கிகளின் மொத்த ஆற்றலுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டிய நோக்கத்திற்காக பிரசுரிக்கப்பட்டுள்ள வைப்புக்கள், முன்பணங்கள் குறித்த தரவுகள் யாவும் கிடைத்த மூலாதாரங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டன.

தேர்ந்தெடுக்கப்பட்ட கூ. கி. வங்கிகளின் வைப்புக்கள்

கூ.கி. வங்கிகளின் விதிகளின் படி, எந்த ஒரு நபரும், ப.நோ. கூ. சங்கத்தின் அங்கத்தவரோ அல்லது அங்கத்தவரில்லாதவரோ கிராமிய வங்கியில் பணத்தை வைப்புச் செய்ய முடியும். 1988ம் ஆண்டின் முடிவில், தேர்ந்தெடுக்கப்பட்ட கூ.கி. வங்கிகளின் மொத்த சேமிப்புக்களும் நிலையான வைப்புக்களும் ரூ. 9,546,000/- ஆகும். 1987ம் ஆண்டின் முடிவில் இருந்ததுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது ரூ. 1,690,000/- கூடியுள்ளது, அதிகரிப்பு 22% வீதமாகும். அட்டவணை 1ல் காட்டியுள்ளவாறு இந்த நான்கு கூ. கி. வங்கிகளும் வைப்புக்கள் திரட்டுவதில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 1

களனி ப.நோ.கூ.ச. பகுதியில் தெரிவு செய்யப்பட்ட சில கிராமிய வங்கிகளில் வைப்புக்கள் 1981 - 1988

(ரூ. '000)

| வெதமுல்லே | | | | களனி | | | வணவாசல | | | பேலியகொட - பட்டிய | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வருடம் | சேமிப்பு | நிலையான வைப்பு | மொத்தம் | சேமிப்பு | நிலையான வைப்பு | மொத்தம் | சேமிப்பு | நிலையான வைப்பு | மொத்தம் | சேமிப்பு | நிலையான வைப்பு | மொத்தம் |
| 1981 | 845 | 431 | 1276 | 57 | 16 | 73 | – | – | – | – | – | – |
| 1982 | 1366 | 619 | 1985 | 207 | 81 | 288 | 166 | 43 | 209 | – | – | – |
| 1983 | 1632 | 657 | 2289 | 457 | 58 | 515 | 345 | 103 | 448 | – | – | – |
| 1984 | 2057 | 534 | 2591 | 551 | 82 | 633 | 599 | 153 | 752 | – | – | – |
| 1985 | 2916 | 244 | 3160 | 856 | 33 | 889 | 575 | 154 | 729 | – | – | – |
| 1986 | 3207 | 292 | 3499 | 1167 | 108 | 1275 | 933 | 158 | 1091 | 182 | 15 | 197 |
| 1987 | 3861 | 451 | 4312 | 1414 | 104 | 1518 | 1255 | 263 | 1518 | 499 | 9 | 508 |
| 1988 | 4576 | 402 | 4978 | 2014 | 95 | 2109 | 1574 | 110 | 1684 | 768 | 7 | 775 |

** பட்டிய கிராமிய வங்கி 1986-ல் ஸ்தாபிக்கப்பட்டது.

ஆதாரம்: ஆய்வுத்தரவுகள்

அடைந்துள்ளன. உதாரணமாக, 1981ம் ஆண்டின் முடிவில் வெதமுல்ல கூ. கி. வங்கியிடமிருந்த வைப்புக்கள் ரூ. 1,276,600/- ஆகும். ஆனால், 1988ம் ஆண்டின் முடிவில் இவ்வைப்புக்கள் ரூ. 4,978,000/- ஆக அதிகரித்தது. 1986ம் ஆண்டின் முடிவில் பே/பட்டியா கூ. கி. வங்கியின் வைப்புக்கள் ரூ. 197,000/- ஆகவும், இது 1988ம் ஆண்டின் முடிவில் ஏறக்குறைய நான்கு மடங்காக அதாவது ரூ. 775,000/- ஆக அதிகரித்தது. ஏனைய இரு கூ. கி. வங்கிகளிலும் இதற்கொப்பான வளர்ச்சி சேமிப்பு திரட்டுதலில் ஏற்பட்டுள்ளதைக் காணலாம். நிலையான வைப்புகளிலும் பார்க்க, சேமிப்பு வைப்புகளில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வங்கிகள் தமது பிரதேசத்தில் பெருந்தொகையான சேமிப்புகளை திரட்டி எடுத்தமை மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். இதன்படி இவை இயங்கும் பிரதேசத்தில் சேமிப்புகளை திரட்டுவதில் இவை மிகுந்த ஊக்கத்துடன் செயல்பட்டிருப்பது தெரிகிறது. சேமிப்புகளின் தொகையும், சேமிப்பாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பும் இந்த பிரமிப்பூட்டும் நிகழ்வுகளை (அட்டவணை 2) சாட்சி பகருகின்றன. உபயோகமற்றிருக்கும் இந்த நிதிகளை ஒன்று சேர்ப்பதால் வங்கி நிறுவனங்கள் அவற்றைக் கடனளிப்பு செய்யக் கூடியதாயிருக்கும். எனவே, இந்த நிறுவனங்களின் வங்கி செய்முறைகளை சரியாக வழிப்படுத்தல் மூலம், கிராமிய சேமிப்புக்களை அதிகரிப்பதோடு கிராமப்புறங்களில் சேமிப்புப் பழக்கத்தை மக்கள் விரும்பச் செய்யவும் உதவும். எனினும், வைப்புக்களை ஒன்று திரட்டுவதில் ஏற்படுத்திய வளர்ச்சி கடன் வழங்குவதில் காணப்படாமை துரதிர்ஷ்டமாகும்.

1981ம் ஆண்டில் வைப்புக்கள் வைத்திருப்போரின் எண்ணிக்கை 2818 ஆகவும், 1988ம் ஆண்டில் இவர்களின் எண்ணிக்கை 11,717 ஆகவும் அதிகரித்தது. 1981ம் ஆண்டின் முடிவில் இருந்த நிலைமையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது 8899 வைப்பாளர்கள் அதிகரித்துள்ளனர் அல்லது 315 விகிதம் அதிகரிப்பு காணப்படுகிறது. பெருமளவில் வைப்பாளர்களின் எண்ணிக்கை அதிகரித்த போதிலும், கடன் வாங்குவோரின் (குறைந்தவனை) எண்ணிக்கையில் அத்தகைய மாற்றம் ஏற்படவில்லை. 1981ம் ஆண்டில் கூ. கி. வங்கிகளில் கடன் வசதிகளைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை 60 ஆயிருந்தது. 1988ம் ஆண்டில் இதன் ஒத்த எண்ணிக்கை 145 ஆகும். 1981ம் ஆண்டின் கடைசியில் உள்ள நிலையுடன் ஒப்பிடும்போது கடன் பெற்றோரின் எண்ணிக்கை 85 ஆல் அல்லது 141 விகிதம் கூடியுள்ளது. வைப்பாளர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்த வளர்ச்சியைக் காட்டுகிறது.

அட்டவணை 2

தெரிவு செய்யப்பட்ட கிராமிய வங்கிகளில் வைப்புச் செய்தோர் மற்றும் கடன்பட்டோர் எண்ணிக்கை 1981 - 1988

| வருடம் | வைப்புச் செய்தோர் (சேமிப்பு + நிலையான வைப்பு) மொத்தம் | கடன் பட்டோர் (குறுங்கால கடன்) | அடகு கடன் எடுத்தோர் |
|---|---|---|---|
| 1981 | 2818 | 60 | 1385 |
| 1982 | 5012 | 72 | 1258 |
| 1983 | 7466 | 90 | 1919 |
| 1984 | 8189 | 77 | 2725 |
| 1985 | 8890 | 63 | 3388 |
| 1986 | 10040 | 115 | 3963 |
| 1987 | 10995 | 156 | 4122 |
| 1988 | 11717 | 145 | 4517 |

ஆதாரம்: ஆய்வுத்தரவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கடன்களும் முற்பணங்களும் – குறைந்த தவணை முதலீட்டு வழிகள்

கிராமிய மட்ட கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் ஒரு அங்கத்தவர் பலவகைப்பட்ட தேவைகளுக்காக கடன்களை பெறுவதின் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பதே கூ. கி. வங்கியின் திட்டமாகும். கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்களும், கிராமிய வங்கிகளில் வைப்புக் கணக்குகள் வைத்திருப்போரும் கிராமிய வங்கிகளிலிருந்து கடன்கள் பெறத் தகைமையுடையவராவர். விவசாய உற்பத்தி, விலங்கு வளர்ப்பு, சிறு கைத்தொழில், கடன் மீட்பு, மின்சாரம் பெறுவதல், நுகர்வோர் பொருள், ஆபத்துக் கால உதவி ஆகியனவற்றிற்கே நிதிகள் வழங்கப்படுகின்றன. 1988ம் ஆண்டில் இந்த நான்கு கூ. கி. வங்கிகளினாலும் வழங்கப்பட்ட மொத்த குறுகிய கால கடன்கள் ரூ. 399,000 ஆகும், 1988ம் ஆண்டின் முடிவில் அடகு பிடிக்கும் திட்டத்தின் கீழ் இந்த நான்கு கூ. கி. வங்கிகளினாலும் வழங்கப்பட்ட முற்பணங்களின் மொத்த தொகை ரூ. 6036000/- ஆக இருந்தது. எனவே 1988ம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட கூ. கி. வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களின் (அடகு பிடித்தல் + குறைந்த தவணை) மொத்த எண்ணிக்கை ரூ. 6435000/- ஆகும். 1988ம் ஆண்டில் வழங்கப்பட்ட மொத்த கடன்களில், 40 விகிதம் வெதமுல்ல கூ. கி. வங்கியினாலும், 25% களனி கூ. கி. வங்கியினாலும் வழங்கப்பட்டது. வனவாசல கூ. கி. வங்கி வழங்கிய கடன் 14% மாகவும், பே/பட்டிய கூ. கி. வங்கியினால் வழங்கப்பட்ட கடன் 21% மாதவும் (அட்டவணை 3 & 4). இருந்தது.

#### அடகு பிடிக்கும் நடவடிக்கைகள்

கூ. கி. வங்கிகள் மக்கள் வங்கியின் அடகு பிடிக்கும் முகவராகவும் கடமையாற்றுகின்றன. இது வங்கியின் வெற்றிகரமான கடன் வழங்கும் முயற்சியாகக் கருதப்படுகின்றது. கூ. கி. வங்கிகள், தமது சொந்த நிதி மூலமோ அல்லது மக்கள் வங்கியிடமிருந்து பெறும் மேலதிகப் பற்றுக்கள் மூலமாகவோ அடகு பிடிக்கும் முயற்சிகளில் ஈடுபடலாம்.

குறுகிய தவணைக்கடன்களுக்கு எதிராக அடகு பிடிக்கும் முயற்சிகள் மிகவும் விசேஷமாக அதிகரித்துள்ளன. 1981ம் ஆண்டில் அடகு வைத்தோரின் எண்ணிக்கை 1385 ஆக இருந்தது. இது 1988ம் ஆண்டில் 4517 ஆக அதிகரித்தது. (அட்டவணை 2). அடகு முற்பணங்களின் மொத்த தொகை, துரித அதிகரிப்பை காட்டுகின்றது. 1981ம் ஆண்டில் ரூ. 947,000/- ஆக இருந்த அடவு முற்பணங்களின் மொத்த எண்ணிக்கை 1988ம் ஆண்டில் ரூ. 6036000 ஆக அதிகரித்தது.

அட்டவணை 4
குறுங்கால கடன்களும் அடகுக் கடன்களும் 1981 - 1988

(ரூ. '000)

| வருடம் | அடகுக் கடன் | குறுங்கால கடன் | மொத்தம் |
|---|---|---|---|
| 1981 | 947 | 31 | 978 |
| 1982 | 988 | 73 | 1061 |
| 1983 | 1617 | 130 | 1747 |
| 1984 | 2543 | 99 | 2642 |
| 1985 | 3295 | 183 | 3478 |
| 1986 | 3769 | 276 | 4045 |
| 1987 | 3884 | 382 | 4266 |
| 1988 | 6036 | 399 | 6435 |

ஆதாரம்: ஆய்வுத்தரவுகள்

தேர்ந்தெடுக்கப்பட்ட கூ. கி. வங்கிகளினால் நோக்க அடிப்படையில் வழங்கப்பட்ட கடன்களை 5ம் அட்டவணையில் தரப்பட்டுள்ள தரவுகள் காட்டுகின்றன. 1988ம் ஆண்டின் முடிவில் தேர்ந்தெடுக்கப்பட்ட கூ. கி. வங்கிகளின் மொத்த முற்பணங்கள் ரூ. 6402000 ஆகும். குறைந்த தவணை கடன்களில் அதிகமான விகிதம் அதாவது 97 விகிதம் வீடமைப்பிற்கும் அதற்குப் பின்னர் கடன் மீட்சி, வர்த்தகத்திற்காகவும் அளிக்கப்பட்டுள்ளது. 1988ம் ஆண்டில் அடவு பிடித்தலின் கீழ் வழங்கப்பட்ட கடன்களின் மொத்த தொகை ரூ. 6036000 ஆகும். மொத்த முற்பணங்களில் (குறுகிய தவணை + அடவு பிடித்தல்) அடவு பிடித்தலின் கீழ் வழங்கப்பட்ட கடன்கள் 94% வீதமாகும். மொத்த முற்பணங்களில் இதுவே அதிக தொகையாகும்.

அட்டவணை 3
மொத்த முற்பணங்கள் 1981 - 1988

(ரூ. '000)

| | வெதமுல்ல | | | களனி | | | வனவாசல | | | பேலியகொட - பட்டிய | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வருடம் | அடகு கடன் | குறுங்கால கடன் | மொத்தம் | அடகு கடன் | குறுங்கால கடன் | மொத்தம் | அடகு கடன் | குறுங்கால கடன் | மொத்தம் | அடகு கடன் | குறுங்கால கடன் | மொத்தம் |
| 1981 | 791 | 31 | 822 | 156 | – | 156 | – | – | – | – | – | – |
| 1982 | 641 | 31 | 672 | 295 | 22 | 317 | 52 | 20 | 72 | – | – | – |
| 1983 | 856 | 24 | 880 | 542 | 53 | 595 | 219 | 53 | 272 | – | – | – |
| 1984 | 1389 | 40 | 1429 | 728 | 13 | 741 | 426 | 46 | 472 | – | – | – |
| 1985 | 1872 | 127 | 1889 | 817 | 17 | 834 | 606 | 39 | 645 | – | – | – |
| 1986 | 1956 | 175 | 2131 | 1078 | 12 | 1090 | 735 | 89 | 824 | – | – | – |
| 1987 | 1834 | 181 | 2015 | 978 | 118 | 1096 | 688 | 78 | 766 | 384 | 5 | 389 |
| 1988 | 2418 | 174 | 2592 | 1406 | 160 | 1566 | 856 | 50 | 906 | 1356 | 15 | 1371 |

ஆதாரம்: ஆய்வுத்தரவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சேமிப்பை ஒன்றுதிரட்டல்

1981 - 1988 வரையில் நான்கு கூ. கி. வங்கிகளில் தேறிய வைப்பு நிலை குறிப்பிடக் கூடிய அபிவிருத்தியைக் காட்டுகின்றது. ஒவ்வொரு வருடத்திலும் அனைத்து கூ. கி. வங்கிகளிலும் வைப்புகளும் அதிகரித்துள்ளதை அட்டவணை 6 காட்டுகின்றது. மேலும், கடந்த காலத்தில் இந்த நான்கு கூ. கி. வங்கிகளின் வங்கி முயற்சிகள் அதிகரித்து வந்ததோடு சேமிப்புகளை ஒன்று திரட்டக் கூடிய தகைமையை இவை பெற்றதையும் தேறிய வைப்பு நிலையில் உள்ள அபிவிருத்தி தெளிவாக்கின்றது. 1981ம் ஆண்டுக்கும் 1988ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் முற்பணங்களுக்கு மேலதிகமாக வைப்புக்கள் ரூ. 370000ல் இருந்து 3111000 ஆக வருடாந்தம் கூடியிருக்கின்றது.

இதனால் சேமிப்புகளை ஒன்று திரட்டிய பிரதேசத்திலேயே வளங்களை இந்த கூ. கி. வங்கிகள் வெற்றிகரமாகப் பயன்படுத்தவில்லை யென்பதை கடந்த காலத்தில் வளர்ந்து வந்த தேறிய வைப்பு நிலைகள் காட்டுகின்றன. பலதரப்பட்ட முயற்சிகளுக்காக கடன்களை அதிகரிக்கவும்

அட்டவணை 5

கடன்களின் பகிர்வு (டிசம்பர் 31) 1988-ல் உள்ளவாறு)

(ரூ. '000)

| நோக்கம் | தொகை | சதவீதம் |
|---|---|---|
| விவசாயம் | 1 | 0.3 |
| வீடமைப்பு | 293 | 80.0 |
| கடன் மீட்பு | 47 | 13.0 |
| வியாபாரம் | 15 | 4.0 |
| மின் இணைப்பு | – | – |
| ஏனையன | 10 | 2.7 |
| மொத்த குறுங்கால கடன்கள் | 366 | 100.0 |
| அடகு கடன்கள் | 6036 | 94.0 |
| குறுங்கால கடன்கள் | 366 | 6.0 |
| மொத்த முற்பணங்கள் | 6402 | 100.0 |

ஆதாரம்: ஆய்வுத்தரவுகள்

போதிய வாய்ப்பு இருக்கின்றது. எனினும், தேர்ந்தெடுக்கப்பட்ட கூ. கி. வங்கிகளினால் இப்பிரதேசத்தில் வழங்கப்பட்ட மொத்த கடன்கள் பல்வேறு காரணங்களினால் தேவைகளுக்குக் குறைவாகவே இருந்திருக்கின்றன. உற்பத்தியை அதிகரிப்பதற்கு முக்கியமாக வேவைப்படும் முதலீட்டுக் கடனை அலட்சியப்படுத்தி, குறைந்த தவணை நிதியை வழங்குவதில் கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது. இங்கு மேற்கொள்ளப்படும் அனேக முயற்சிகளுக்கு மிகக் குறைந்த கடன் உதவிகளே வழங்கப்பட்டுள்ளன. முன்னர் குறிப்பிட்டபடி கூ. கி. வங்கிகள், வீடமைப்பு, கடன் மீட்டல், வர்த்தகம் ஆகியனவற்றிற்கே அதிக கடன் உதவிகளைச் செய்து, முதலீட்டு கடன்களில் மிகவும் குறைவான கவனத்தையே செலுத்திவந்துள்ளது. கிராமிய வங்கி முறையானது புதிய திருப்பத்தை அணுகவும், அந்தந்த பிரதேசங்களில் வரும் அபிவிருத்தி பிரச்சினைகளுக்கு உறுதியான அணுகுமுறையைப் பின் பற்றவும் இப்போது காலம் வந்துள்ளது.

தேறிய வைப்புக்கள் நிலை காட்டும் அபிவிருத்தியானது விசேடமாக இங்கு கடன் தேவைகள் அதிகமாகக் காணப்பட்ட போதிலும் களனி ப. நோ. கூ. சங்க நிதிகள் மற்றும் பகுதிகளுக்கு விசேடமாக நகரப் பகுதிகளுக்கு மாற்றம் செய்யப்படுவதைக் காட்டுகின்றது. ஆகவே இப்பிரதேச அபிவிருத்திக்கென இந்நிதியில் ஓரளவை ஒதுக்கி வைக்க சிறந்த வழி முறைகள் கையாளப்பட வேண்டும். கிராமப்புறங்களிலிருந்து வரும் உபரி நிதிகளை சரிவரப் பயன் படுத்துவது வங்கிப்படுத்தலின் முக்கிய கடப்பாடாகும். மேலதிகமான நிதியங்களை கிராமப்புறங்களிலேயே கடன்கள் மூலம் அதிகமாக கிடைக்கச் செய்ய மிகவும் ஊக்கமுள்ள முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். இதன் மூலம் இப்பகுதிகளில் புதிய பொருளாதார முயற்சிகளை கைத்தொழிலாளர் துவங்குவதற்கு ஊக்குவிக்கப்படுகின்றனர். இதன் பலனாக வேலைவாய்ப்புக்கள் அதிகமாகும்; மக்களின் வருமானமும். அதிகரிக்கும். செயற்படும் இடங்களில் கடன் வசதிகளை வழங்குவதன் மூலம் ஒரு முக்கியமான பாகத்தை கூ. கி. வங்கிகள் வகிக்க அதிக பிரயத்தனம் எடுக்காவிடில் ஒரு இடத்திலிருந்து வேறு ஒரு இடத்திற்கு வளங்களை மாற்றும் ஒரு வழியாக மாத்திரமே அவை செயலாற்ற நேரிடும்.

அட்டவணை 6

தெரிவு செய்யப்பட்ட கிராமிய வங்கிகளின் மொத்த வைப்புக்கள், கடன்கள் மற்றும் தேறிய நிலை 1981 – 1988

(ரூ. '000)

| வருடம் | மொத்த வைப்புக்கள் | மொத்த முற்பணங்கள் | மொத்த வைப்புக்களுக்கும் முற்பணங்களுக்குமான வித்தியாசம் |
|---|---|---|---|
| 1981 | 1340 | 970 | + 370 |
| 1982 | 2482 | 1061 | + 1421 |
| 1983 | 3252 | 1747 | + 1505 |
| 1984 | 3976 | 2642 | + 1334 |
| 1985 | 4770 | 3378 | + 1392 |
| 1986 | 6062 | 4045 | + 2017 |
| 1987 | 7856 | 4266 | + 3590 |
| 1988 | 9546 | 6435 | + 3111 |

ஆதாரம்: ஆய்வுத்தரவுகள்

நிலையான கணக்குகள், சேமிப்பு கணக்குகள் வடிவில் கூ. கி. வங்கிகள் தமது மிகை நிதிகளை முதலீடு செய்ய, மக்கள் வங்கி அதற்கான வசதிகளை அளித்து வருகிறது. இத்துடன், வட்டி விகிதங்கள் சாதகமாக இருக்கும் காலங்களில் தமது மிகை நிதிகளை தேசிய சேமிப்பு வங்கியிலும் கூ. கி. வங்கிகள் முதலீடு செய்கின்றன. 1986-88 ஆண்டு காலத்தில் அனைத்து கூ. கி. வங்கிகளின் முதலீடுகளும். கடந்த ஐந்து வருடங்களிலும் பார்க்க அதிகமாக இருந்ததை 7வது அட்டவணை காட்டுகின்றது. நடைமுறையில் உள்ள கடன் முறைகளின் கீழ், பிரதேசத்துள் சேர்க்கப்பட்ட வைப்புக்களில் கணிசமான பகுதி வேறு பகுதிகளில் காணப்படும் முயற்சி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 7

களனி ப. நோ. கூ. ச. பிரதேசத்தில் அனைத்து கூ. கி. வங்கிகளிலும் மூலவளப்பாவனை 1981 – 1988

| வருடம் | மக்கள் வங்கி | தேசிய சேமிப்பு வங்கி | (ரூ. '000) மொத்தம் |
|---|---|---|---|
| 1981 | 200 | | 200 |
| 1982 | 600 | 250 | 850 |
| 1983 | 450 | – | 450 |
| 1984 | 200 | – | 200 |
| 1985 | 200 | – | 200 |
| 1986 | 1050 | – | 1050 |
| 1987 | 2550 | – | 2550 |
| 1988 | 1850 | 1000 | 2850 |

ஆதாரம்: ஆய்வு தரவுகள்

களில் பெரும் இலாபம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

மக்கள் வங்கியின் வைப்புக் கணக்குகளில், அதிகமான முதலீடுகளை கூ. கி. வங்கிகள் செய்வதால், அதன் பின்னர், கிராமியச் சேமிப்புகள் மக்கள் வங்கியின் பொதுவான நிதி முயற்சிகளுக்கு பயன்படுகின்றன. அண்மைக் காலங்களில், குறிப்பாக கட்டட நிர்மாணிப்பு வெளி, உள்ளூர் வர்த்தக முயற்சிகளில் முக்கியமான இடத்தை இன்று பெறுகின்றது. இங்ஙனமான முயற்சிகள், பொருளாதார அபிவிருத்திக்கு மிகவும் முக்கியமானதாகும். ஆனால், இதன் முக்கியமான உண்மையென்னவென்றால், கிராமப்புறங்களிலிருந்து பெறப்படும் சேமிப்புகள் கிராமப்புறங்களுக்கு திரும்பவும் பயன்படுத்தப்படாமல், வேறு பகுதிகளுக்கு கொடுக்கப்படுகின்றது. வங்கிகள், வளங்களை மாற்றம் செய்யும் கருவிகளாக "கிராமிய துறை அபிவிருத்தியின் அபிவிருத்திக்கு" உதவுகின்றன என இச்சந்தர்ப்பத்தில் ஒருவர் கூற முடியும்.

WCARRD அறிக்கையானது (Report of the High Level Mission on the Follow-up the World Conference on Agrarian Reform and Rural Development in Sri Lanka, July, 1979, p. 21) தனது ஆய்வில் "உண்மையில், கிராமிய மிகைகள் வங்கிப்படுத்தல் முறை மூலம் கிராமத்திற்கு வெளியேயுள்ள பகுதிகளில் பயன்படுத்தப்படுவதன் மூலம், (அதாவது நகர்ப்புற, கிராமப்புறப் மேட்டுக்குடியிருப்பினரின்நுகர்வு, கைத்தொழில், வர்த்தகம், சேவைகள் ஆகியன). கிராமப் பிரிவு அபிவிருத்தியற்ற சீர்கேடான நிலையில் விடப்பட்டுள்ளது" எனக் கூறுகிறது. இவ்வித சந்தர்ப்பங்களில், கிராமப் புற மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதில் புதிய அணுகு முறைகளை மீளாய்வு செய்ய வேண்டும்.

பொதுவான போக்கு

இப்பொழுது நாம் இலங்கைக் கூ. கி. வங்கிகளினால் ஒன்று திரட்டப்பட்ட சேமிப்புகளின் மொத்த ஆற்றலை எமது ஆய்வின் காண்புகளோடு ஒப்பிட்டுப் பார்ப்போம். அட்டவணை 7-ல் தரப்பட்ட தரவுகள் கூ. கி. வங்கிகளின் எண்ணிக்கையின் அதிகரிப்பையும், 1981ம் ஆண்டு முதல் அவற்றின் மொத்த வைப்புக்கள், முற்பணங்களையும் காட்டுகின்றன. 1988 ஜுன் 30ம் திகதியிலிருந்த படி, கூ. கி. வங்கிகளின் மொத்த எண்ணிக்கை 967 ஆகும். 1988ம் ஆண்டின் நடுப் பகுதியில் மொத்த வைப்புக்களான ரூ. 175 கோடி ரூபாவிற்கெதிராக கொடுக்கப்பட்ட மொத்த முற்பணங்களின் தொகை 74.2 கோடி ரூபாவாகும். இதன் பயனாக கிராமிய வங்கிகளின் மேலதிக வளங்கள் 100.9 கோடி ரூபாவாகும். மார்கழி 1981 க்கும் ஆனி 1988 க்கும் இடைப்பட்ட காலத்தில் வருடாந்த முற்பணங்களுக்கு மேலதிகமான கையிருப்பு 16.2 கோடி ரூபாவிலிருந்து 100.9 கோடி ரூபாவாக அதிகரித்துள்ளது. இலங்கை மத்திய வங்கியினால் தரப்பட்ட மாவட்ட ரீதியிலான தரவுகளின்படி, திருகோணமலை மாவட்டத்தில் மட்டுமே இதற்கெதிரான நிலைமை இருந்ததோடு, கம்பஹா மாவட்டத்தின் அறிக்கைப்படி மேலதிக வைப்புகளின் தொகை 16.1 கோடி ரூபாவாக அதிகரித்தது. கடந்த 8 ஆண்டுகளாக அதிகமான வளங்கள் அதிகரிப்பதைக் கவனிக்கக் கூடியதாயிருக்கிறது. வளங்களின் வளர்ச்சி கணிசமான அளவாயிருந்தபோதும், உள்ளூரில் உற்பத்தி முதலீடுகளுக்குத் தேவையான நிதிகளை வழிப்படுத்துவதில் கூ. கி. வங்கிகள் மிகக் குறைந்த முயற்சிகளையே எடுத்துள்ளன.

முன் சொன்ன அறிக்கையும் (1979, ப. 34) இப்போக்கு பற்றி பின்வருமாறு சுட்டிக் காட்டியுள்ளது. "1964ம் ஆண்டு முதல் மக்கள் வங்கியின் உதவியுடன் 600 கிராமிய வங்கிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலும் இவை கணிசமான சேமிப்புத் தொகையைச் சேர்த்துள்ளன. ஆனால்,

(அ) உள்ளூர் கிராமிய அபிவிருத்திக்காக மேலதிக உள்ளூர் வளங்களை உபயோகத்திற்குக் கொண்டுவரக் கூடிய முறையில் அலகு வங்கி முயற்சிகள் அபிவிருத்தி செய்யப்படவில்லை. கிராமிய முற்பணங்களுக்கு மேலதிகமாக கிராமிய வைப்புக்கள் அதிகமாக இருப்பதிலிருந்து இது தெளிவாகத் தெரிகின்றது.

(ஆ) மக்கள் வங்கியானது பிர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 8

இலங்கையில் உள்ள அனைத்து கிராமிய வங்கிகளிலும் மொத்த வைப்புக்கள், மொத்த முற்பணங்கள் மற்றும் தேறிய நிலை 1981 - 1988

| வருடம் | கூ. கி. வ. எண்ணிக்கை | மொத்த வைப்பக்கள் | மொத்த முற்பணங்கள் | மொத்த வைப்புக்களுக்கும் முற்பணங்களுக்கும் இடையிலான வித்தியாசம் |
|---|---|---|---|---|
| 1981 | 746 | 434048 | 262596 | + 162453 |
| 1982 | 804 | 541484 | 329272 | + 212272 |
| 1983 | 843 | 717981 | 391612 | + 326369 |
| 1984 | 888 | 905490 | 508247 | + 397243 |
| 1985 | 914 | 1087536 | 574811 | + 512725 |
| 1986 | 932 | 1295595 | 657775 | + 637820 |
| 1987 | 955 | 1560178 | 708782 | + 851396 |
| 1988 | 967 | 1750845 | 742273 | + 1008572 |

தம வர்த்தக வங்கியாகியுள்ளது. கிராமிய சேமிப்புகளை ஒன்றிணைத்து அவற்றை முக்கியமாக நகரப் புறங்களில் கைத்தொழில், வர்த்தகம், சேவைகள் ஆகியவற்றில் பாரம்பரிய வங்கிச் செய்திட்டங்களுக்குப் பயன்படுத்துகிறது.

இலங்கையின் அதிகமான மாவட்டங்களில் வைப்புக்கள், முற்பணங்களிலும் பார்க்க அதிகமாயிருப்பதோடு, கிராமிய மிகைகளை வங்கி முறைகள் மூலம் பெற்று, நகர்ப்புறங்களிலும், வர்த்தக பிரிவிலும் அவற்றைப் பயன்படுத்துவதால் கிராமப் புறங்களை அபிவிருத்தி குன்றிய நிலைமைக்கு இட்டுச் செல்கின்றது. இலங்கை மத்திய வங்கியின் 1986--பொருளியல் ஆய்வில் இந்நிலைமை தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

"கடந்த பத்தாண்டுகளாக கிராமப்புறங்களிலிருந்து வரும் அதிகமான வளங்கள் நகரப்புறங்களுக்கு பயன்படுத்தப்படுவதை, கொடுகடன்களுக்கு மேலதிகமாக வளர்ச்சியடைந்து வரும் வைப்புக்கள் காட்டுகின்றன. எனினும், கிராமப் புறங்களில் கடன்களுக்கான தேவைக் குறைவே நிதி மாற்றலுக்குக் காரணமென நாம் கூற முடியாது. கிராமப்புறங்களில் விவசாயம், மீன்பிடி, விலங்கு வளர்ப்பு, சிறு கைத்தொழில்கள் ஆகியனவற்றை அபிவிருத்தி செய்ய நடுத்தர, நீண்டகால முதலீட்டு மூலதனம் தேவைப்படுகின்றது. எனவே முன்னைய ஆண்டுகளில் திரும்பவும் சுட்டிக் காட்டப்பட்டவாறு கிராமிய வங்கிகள், அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்ட நோக்கங்களுக்கான பல்வேறு கொடுகடன் முறைகளையும் ஆராய்ந்து அறிய வேண்டும்: கிராமப் புறங்களின் பல்வேறு பொருளாதார முயற்சிகளையும் விரிவாக்குவதற்கான அவசியமான நிருவனமாகச் செயலாற்றுகின்ற உள்ளமைப்பை கிராமிய வங்கிகள் அபிவிருத்தி செய்ய வேண்டும்"

முடிவுரை

நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை ஊக்குவிப்பதில் கிராமிய அபிவிருத்தி மிகவும் முக்கியமானதாகக் கருதப்பட்டு வந்துள்ளது. அதே போல, பொருளாதார முயற்சிகளை தூண்டுவதில் கொடுகடன் முக்கிய பங்கு வகிக்கிறது என்பதிலும் சந்தேகமில்லை. இலங்கையின் கிராமியப் பிரிவு நிறுவன ரீதியற்ற கடன் மூலங்களையே பாரம்பரியமாக நம்பிவந்திருக்கிறது. முறைசரா கடன் கொடுப்போர் அதிக வட்டி கேட்பதால் உற்பத்தித் தேவைகளின் உற்பத்திச் செலவுக்கள் அதிகரிக்கின்றன. இதுவே பெரும் பிரச்சினையாக அமைந்து வந்தது. மறுபக்கத்தில் பார்க்கும்போது நிறுவன ஆதாரங்களினூல் கொடு கடன்கள் குறைந்த வட்டியில் வழங்கப்பட்டால் உற்பத்திச் செலவு கணிசமான அளவுக்குக் குறைகிறது. இந்த ரீதியில் கிராமிய அபிவிருத்தி நிறுவனங்களாக கூ. கி. வங்கிகள் இயங்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றன. கிராமப்புறங்களில் காணப்படும் வறுமைக் கொடுமைக்கு நிவாரணமாக வங்கிப்படுத்தலின் உபயோகமே அபிவிருத்தி கருவியாக இருக்க வேண்டும்.

வளங்கள் கணிசமான அளவு வளர்ச்சியடைந்த போதிலும் உற்பத்தி, முதலீட்டு நோக்கங்களுக்கு நிதிகளை வழிப்படுத்த கிராமிய வங்கிகள் வெகு குறைவான முயற்சிகளையே எடுத்துள்ளன. இதற்குப் பதிலாக பணச் சந்தையில் குறைந்த தவணை முதலீட்டு வழிகளில் கூ. கி. வங்கிகள் கவரப்பட்டுள்ளன. சேமிப்பு திரட்டப்பட்டுள்ள பிரதேசங்களில் வங்கிகள் அவற்றை வெற்றிகரமாகப் பயன்படுத்தவில்லை என்பதை கூ. கி. வங்கிகளின் தேறிய வைப்பு நிலைகளின் வளர்ச்சி காட்டுகின்றது. எனினும், இந்த இடங்களில் கொடுகடன்களுக்கு தேவையில்லை என்று கூற முடியாது. ஏனெனில், பல்வேறு முயற்சிகளிலும் விவசாயப் பிரிவு, விலங்கு வளர்ப்பு, சிறு கைத்தொழில், வர்த்தகம், மற்றும் சேவைகளுக்கு சாதகமான கடன்களைக் கொடுக்க வாய்ப்புக்கள் உண்டு.

அபிவிருத்திக்காக தற்போது வழங்கப்படும் நிறுவன அமைப்பு நிதிகளிலும் பார்க்க அதிகமான தொகை கிராமியப் பொருளாதாரத்திற்குத் தேவைப்படுவதனூல், இந்நிலை மாற்றப்பட்டு, அதிகமான கொடு கடனை கிராமப்பிரிவு பெறுவதற்கு வழிவகை செய்யப்பட வேண்டும். எனினும், மக்கள் வங்கியின் கீழ்

( 21 -ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் வெற்றி கண்டுள்ளனவா?

நிமல் சந்தரத்ன
(தலைவர், இலங்கை வங்கி)

கிராமிய சமுதாய அமைப்புக்கான நிதி ஏற்பாடுகளை முன்னேற்றும் நோக்கில் மக்கள் வங்கி 25 வருடங்களுக்கு முன்னர் நிறுவன ரீதியான வழி முறையொன்றை துவக்கிவைத்தது. அது தான் கூட்டுறவுக் கிராமிய வங்கி அமைப்பு. கிராமியப் பொருளாதாரத்தின் இயல்பும் கிராமப் பகுதிகளில் பொருளாதார ரீதியில் நிலைத்து நிற்கக் கூடிய வர்த்தக வங்கிக்கிளைகளை நிறுவுவதில் உள்ள சிரமங்களும், இத்தகைய கூட்டுறவுக் கிராமிய வங்கிகளை ஸ்தாபிப்பதற்கு பின்னணியிலிருந்த அணுகுமுறையாகும். வரையறுக்கப்பட்ட செயற்பாட்டு பிரதேசம், எளிமையான அமைப்பு, கூட்டுறவு சங்கங்கள் ஊடாக வாடிக்கையாளர்களோடு ஏற்கனவே ஸ்தாபிதமாகியிருக்கும் தொடர்பு, அவர்கள் பற்றிய நெருக்கமான அறிவு போன்றன ஒரு கூட்டுறவுக் கிராமிய வங்கி கிராம சமுதாயத்தைப் பொறுத்தவரை மிகப் பொருத்தமான ஓர் அமைப்பாக இயங்க உதவின.

கிராமிய வங்கிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு சில வருடங்கள் முன்னர் பேராசிரியர் எட்வாட் நீவின் சேமிப்பை ஒன்று திரட்டுவதற்கு நிறுவனங்களைத் தாபிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தினை மிகத் தெளிவாக பின்வருமாறு விளக்கியிருந்தார்.

“வளர்ச்சி குன்றிய நாடுகளைப் பொறுத்தவரை நிதி நிறுவனங்களின் கடப்பாடுகள் என்ன என்பது மிகத் தெளிவாக தெரிகிறது. மிகப் பெரிய அளவிலான தனித் தனி மூலங்களில் இருந்து ஒப்பீட்டு ரீதியில் சிறிய சராசரி அளவிலான சேமிப்புகளை ஒன்று திரட்டுவதற்கான சேமிப்பு நிலையங்களை உருவாக்குவது இவற்றின் முதல் நோக்கமாக இருத்தல் வேண்டும். ஒரு பொருளாதாரத்தில் சேமிப்புக்களைப் பாதுகாக்கவும், இலாபகரமான முறையில் பயன்படுத்தி பாதுகாப்பதற்கு வழிகள் இல்லாதவிடத்து நிதிகள் ஒன்றில் வெளி நாடுகளுக்குத் திருப்பப்பட்டுவிடுகின்றன; அல்லது பயனற்ற வழிகளில் பணமாக அல்லது விலையுயர்ந்த உலோகங்களாக இரகசியமாகச் சேர்த்து வைக்கப்படுகின்றன; அல்லது ஒன்றுதிரட்டப்படாமல் அப்படியே கிடக்கின்றன. எனினும், எவ்வளவு வறுமையான பொருளாதாரமாக இருந்த போதினும் கூட, சேமிப்புக்கள் பாதுகாப்பாகவும், வசதியாகவும், முதலீடு செய்யப்பட்டு மிகவும் பயனுள்ள தேவைகளுக்கு பயன்படுத்தப்படக் கூடியதாக அமைக்கப்படுகின்ற நிறுவனங்கள் மிக அவசியமானதாகும். எவ்வளவு தூரம் ஒரு நாடு வறுமையாக இருக்கின்றதோ உண்மையில் அவ்வளவு தூரம் அதன் எல்லைகளுக்குள்ளே வாழ்கின்ற பொது மக்களிடமிருந்தும், நிறுவனங்களிடமிருந்தும் சேமிப்புக்களைத் திரட்டி முதலீடு செய்வதற்கான நிறுவன அமைப்புக்கள் அவசியம் தேவைப்படுகின்றன.”

நீவின் மேலே விபரித்தவாறு கிராமியக் கடன் பெறுவோருக்கு நிதிகளை வழங்குவதற்கான வழியமைப்பாக விளங்குவதால் கிராமிய வங்கிகள் இந்நோக்கங்களில் பணியாற்ற வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றன. இந்நோக்கங்களை நிறைவு செய்யும் போது, முறைசாரா கடன் வழங்குபவர்கள் - குறிப்பாக மிக உயர்ந்தவீத வட்டியை அறவிடுகின்ற கடன் வழங்குவோரின் - பங்கினைக் குறைப்பதும், கடனுக்கத்தில் அதிகரிப்பை ஏற்படுத்துவதும், கடன் நிபந்தனைகளை இலகுவாக்குவதும் சாத்தியமாகும். 1964ல் நிறுவப்பட்ட கிராமிய வங்கி அமைப்பானது, சேமிப்புகளை ஒன்று திரட்டும் நோக்கில் நிறுவன ரீதியாக எடுக்கப்பட்ட முக்கியமான படிமுறையாகவும், நாட்டில் கடனுக்கத்தை பரவலாக்குவதுடன் வேறு எவ்வகையிலுமே பெற முடியாத வர்த்தக வங்கிகளின் சேவைகளை மிகவும் பின் தங்கிய கிராமப் பகுதிகளுக்குக் கிடைக்கச் செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட ஒரு முக்கிய நிகழ்ச்சியாகக் கருதப்படுகிறது.

வங்கிக் கிளைகள் அமைப்பமுறைக்கு எவ்வகையிலுமே பொருத்தமில்லாத இடங்களிலும் கூட, வரையறுக்கப்பட்ட அளவிலான வங்கிக் கடன் வசதிகளை வழங்கும் வழியாக கிராமிய வங்கிகள் கருதப்பட்டன. அன்றியும் வாடிக்கையாளர், உள்ளூர் நிலைமைகள் பற்றிய தனிப்பட்ட அறிவு, வர்த்தக வங்கிக் கிளை அமைப்பின் நன்மைகள், வேறுபட்ட பகுதிகளிடையே வளங்களை மாற்றீடு செய்வதற்கான வாய்ப்புக்கள், நிதிகளுக்கான பேரளவு பாதுகாப்பு யாவற்றையும் உள்ளடக்கியதான அலகு வங்கி முறை ஒன்றாக இது கருதப்பட்டது.

வர்த்தக வங்கியின் கண்ணோட்டத்தில் நோக்கும் போது, ஒரு வர்த்தக வங்கிக் கிளையை இயக்குவதைவிட கிராமிய வங்கியொன்றை இயக்குவதற்கு மிகக் குறைந்த செலவே ஏற்படும். ஒரு கிளை வங்கியை இயக்கும் செலவினங்கள் மிகக் கூடுதலாக இருக்கும் அதே வேளை, வரையறுக்கப்பட்ட சில நடவடிக்கைகளேயுள்ள கிராமப்பகுதியில் வங்கி நடவடிக்கைகளைக் குறைந்த செலவிலேயே, பொருளாதார சாத்தியப்பாடு கருதி மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. நிதி இலாபத்தன்மை அம்சத்தைப் பொறுத்தவரை அநேகமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமிய வங்கிப் பகுதிகள் எத்தகைய வர்த்தக வங்கிக் கிளைகளினதும் சேவையையும் பெறக் கூடியதாக இருக்கவில்லை. வர்த்தக வங்கிக் கிளையொன்றுக்கு மாறாக, கிராமிய வங்கிகள் பெரும்பாலும் கூட்டுறவுச் சங்கக் கட்டடங்களில் தமது அலுவலகத்தை அமைத்துக் கொள்கின்றன. அதுபோல மக்கள் வங்கி அலுவலர்களோடு ஒப்பிடுகையில் கிராமிய வங்கி ஊழியர்களுக்கு மிகக் குறைந்த ஊதியமே வழங்கப்பட்டும் வந்தது. இந்தப் பகுதிகளைப் பொறுத்த வரையில் கிராமிய வங்கிகளால் வழங்கப் பட்டு வந்த வரையறுக்கப்பட்ட வங்கி வாய்ப்புக்களை இவை பெற்றுக்கொள்ள வேண்டும்; அல்லது எத்தகைய வங்கி வசதிகளும் அற்றவையாக இருத்தல் வேண்டும்.

கிராமிய வாடிக்கையாளரின் கண்ணோட்டத்தில் பார்க்குமிடத்து உள்ளூரிலே தமக்குப் பரிச்சயமான நிறுவனமொன்றினால் வழங்கப்படக் கூடிய வரையறைக்குட்பட்ட வங்கி வாய்ப்புக்கள் விருப்பத்திற்குரியனவாகவே இருக்கும். அதிக படாடோபமும், புரிந்துகொள்ள கடினமானதுமான நிறுவனங்களை விட இவை விரும்பப்படுகின்றன. உண்மையில், பெரும்பாலான கிராமவாசிகள் பாரம்பரிய வங்கிக் கிளைகளில் நுழைவதற்கு அச்சமும் தயக்கமும் கொண்டுள்ளனர். அதன் விளைவாக கிராமமக்களின் கூடியளவு சேமிப்புக்களைப் பெற்றுக்கொள்ளும் ஆற்றல் அற்றவையாகவே இவை இயங்க வேண்டியிருந்திருக்கும். விசேட விவசாயக் கடன் திட்டத்தின் கீழ் வர்த்தக வங்கிக்கிளைகள் விவசாயிகளுக்கு சிறிய அளவில் நிதிகளை பகிர்ந்தளித்தது உண்மைதான். இருப்பினும் இந்த வங்கிகளின் மீது நல்ல நம்பிக்கை வைத்துச் செயற்படும் கிராமத்து வாடிக்கையாளர்களை அவை பெற்றிருக்கவில்லை. கிராமிய வங்கி ஊழியர்களுடனான நட்பு ரீதியான தொடர்பும், வாடிக்கையாளரின் நேர வசதிக்கேற்றவாறு வகுக்கப்பட்டுள்ள வங்கி அலுவல் நேரங்களும் கிராம மக்களைப் பொறுத்த வரையில் முக்கியத்துவம் பெறும் விஷயங்களாகும்.

ஆரம்ப நிலையிலான வங்கியமைப்பொன்றின் அறிமுகம் கூட ஒரு கிராம வங்கி வாடிக்கையாளனைப் பொறுத்தவரை பயனுள்ள அறிவூட்டும் அனுபவமாகக் கருதப்படக் கூடியதாயிருந்தது. இந்த வாடிக்கையாளர்கள் வங்கி நடைமுறைகளில் பரிச்சயப் பட்டுக் கொள்வதற்கான வாய்ப்பினை இது கொடுத்தது. வங்கிப் பழக்க வழக்கங்களின் அபிவிருத்தி - குறிப்பாக மேலதிக பணத்தை வைப்பிலிடுதல், தமது வங்கிக் கணக்குகளைப் பொறுப்புடன் பேணி வருதல் போன்ற பழக்கங்களுக்கூடாக நல்ல வாடிக்கையாளர்கள் உருவாக்கப்படுதல் வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. அதன் மூலம் முழுமையான வங்கிச் சேவைகளை விஸ்தரிக்க முடியும் எனக் கருதப் பட்டது. இதைவிடவும் கிராமிய வங்கிகளின் இவ்வகை இயக்கத்தின் மூலமாக முழுமையான வங்கிச் சேவைகளை அவ்வப் பகுதிகளில் வழங்கமுடியுமா என்பதைத் தீர்மானிப்பதற்கான நிலைமைகளை அறிவதாகவும் இது அமைந்தது. இவ்வகையில் வங்கிக் கிளைகள் அதிகரிக்கப்படுவது அல்லது கிராமிய வங்கிகளின் நடவடிக்கைகளை விரிவுபடுத்துவது பற்றித் தீர்மானிக்கலாம்.

ஆரம்பப் பரீட்சார்த்த கால கட்டத்தில், கிராமிய வங்கிகள், குறைந்த பட்சம் 3 வருடகாலம் செயற்பட்டு ஒழுங்கு முறையாகத் தமது பங்கு முதல்களைச் செலுத்திவந்த, வலுவான அங்கத்துவத்தைக் கொண்டிருந்த கூட்டுறவுச் சங்கங்களிலேயே ஏற்படுத்தப்பட்டன. கடனைத் திருப்பிச் செலுத்தும் பதிவேடு நல்ல முறையில் இருப்பதுடன் குறிப்பிட்ட சங்கம் இலாபமீட்டுவதாகவும் இருக்க வேண்டியிருந்தது. கிராமிய வங்கிகளை நடைமுறைப்படுத்துவதற்காகத் தெரிவு செய்யப்பட்ட பல கூட்டுறவுச் சங்கங்கள் மக்கள் வங்கியின் விரிவுபடுத்தப்பட்ட கடன் திட்டத்தை அமுல்படுத்துவனவாயிருந்தன.

1966-ம் வருட முடிவில் 13 கிராமிய வங்கிகளே ஸ்தாபிக்கப் பட்டிருந்தன; ஆனால், 1971 டிசம்பர் இறுதியளவில் இவ்வங்கிகளின் எண்ணிக்கை 111 ஆக அதிகரித்திருந்தது. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் புனரமைப்பின் விளைவாக, 1972 இன் பின் கிராமிய வங்கிகள் மிகத் துரிதமாக அதிகரித்தன. புனரமைக்கப்பட்ட ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்துக்கும் ஒரு கிராமிய வங்கி இணைக்கப்படவேண்டும் என்ற அரசாங்க தீர்மானமும் இந்த அதிகரிப்புக்கு ஒரு காரணமாகும். இதனால் 1972 இன் பின் கிராமிய வங்கிகள் "கூட்டுறவுக் கிராமிய வங்கிகள்" என்ற பெயரில் அழைக்கப்படலாயின. 1972-இல் மட்டும் 131 புதிய கிராமிய வங்கிகள் ஸ்தாபிக்கப்பட்டதுடன், இதில் 111 வங்கிகள் அவ்வாண்டின் முதற் காலாண்டிலேயே அமைக்கப் பட்டுவிட்டன. கிராமிய வங்கிகளூடாக, விரிவுபடுத்தப்பட்ட கிராமியக் கடன்திட்டம் அமுல்படுத்தப்படவேண்டும் என்ற அரசின் திட்டத்தை நடைமுறைப் படுத்தும் பொருட்டு 1972-ன் முடிவில் 242 ஆக இருந்த கிராமிய வங்கிகள் அடுத்த வருடத்தினுள் 341 ஆக அதிகரித்துவிட்டன.

ப.நோ.கூ. சங்கங்கங்களின் புனரமைப்புக்காக சில சங்கங்கள் ஒன்றிணைக்கப்பட்டபோது, 1974-ம் வருடத்தில் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் எண்ணிக்கை 332 ஆக குறைவடைந்தது. எனினும், அதே வருடத்தில், கிராமிய வங்கிகளை விரிவாக்குதற்காக ப.நோ.கூ. சங்க 'பிராதேசிகா'க்களில் விசேட கூட்டுறவுக் கிராமிய வங்கிக் கிளைகள் உருவாக்கப்பட்டன. இந்த விசேடகிளைகள் கூட்டுறவுக் கிரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 1

கிராமிய வங்கிகளின் விஸ்தரிப்பு

1964 - 1988

| வருடம் (டிசம்பர் முடிவில்) | கூட்டுறவு கிராமிய வங். எண்ணிக்கை | விசேஷ கிளைகள் | மொத்தம் |
|---|---|---|---|
| 1964 | 3 | | 3 |
| 1965 | 8 | | 8 |
| 1966 | 13 | | 13 |
| 1967 | 27 | | 27 |
| 1968 | 44 | | 44 |
| 1969 | 68 | | 68 |
| 1970 | 70 | | 70 |
| 1971 | 111 | | 111 |
| 1972 | 242 | | 242 |
| 1973 | 341 | | 341 |
| 1974 | 332 | 71 | 403 |
| 1975 | 338 | 109 | 447 |
| 1976 | 345 | 158 | 503 |
| 1977 | 285 | 259 | 544 |
| 1978 | 284 | 275 | 559 |
| 1979 | 284 | 302 | 586 |
| 1980 | 284 | 357 | 641 |
| 1981 | 287 | 459 | 746 |
| 1982 | 286 | 518 | 804 |
| 1983 | 288 | 555 | 843 |
| 1984 | 286 | 602 | 888 |
| 1985 | 286 | 628 | 914 |
| 1986 | 283 | 649 | 932 |
| 1987 | 282 | 673 | 955 |
| 1988 | 282 | 686 | 968 |

மிய வங்கிகளின் அதே நடைமுறைகளையே செயல்படுத்தின.

இருபத்தைந்தாண்டு காலத்துக்குள் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளில் ஏற்பட்டுவந்துள்ள முன்னேற்றகரமான விஸ்தரிப்பினை அட்டவணை - 1 காட்டுகின்றது. கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் பரவலரன விரிவாக்கம் குறிப்பாக 1972க்குப் பின் துரித வேகத்தில் இடம்பெற்றது. 1974-ல் முடிவடைந்த முதல் பத்து வருட காலப்பகுதியில் கிராமிய வங்கிகளின் எண்ணிக்கை 332 ஆக அதிகரித்திருந்தது. இரண்டாவது பத்தாண்டு கால முடிவின்போது அத்தொகை 888 ஆக இருந்ததுடன் அதன் 25-வது வருட நிறைவின் போது ஏறக்குறைய ஆயிரத்தை எட்டிப்பிடித்தது. 1987 இறுதியில் கூட்டுறவு கிராமிய வங்கித் திட்டத்தின் கீழான ஒருங்கமைக்கப்பட்ட கிராமிய வங்கி நிறுவனங்கள் 955 ஆக அமைந்தன. இவற்றில் கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் 282 ஆகவும் விசேட கிளைகள் 673 ஆகவும் இருந்தன. கூட்டுறவுக்கு கிராமிய வங்கிகளின் இத்தகைய துரித விரிவாக்கத்தின் காரணமாக, நாடு முழுவதுமுள்ள வர்த்தக வங்கிக்கிளைகளின் எண்ணிக்கையையும் இவை மிஞ்சிவிட்டன. மாவட்ட மக்கள் தொகை, நிலப்பரப்பு, ஏனைய வங்கி வசதிகளுக்கான வாய்ப்புக்கள் போன்ற அம்சங்களை பொறுத்தும் இவ்வங்கிகள் நாடு முழுவதும் ஓரளவு பரவலாகவே அமைந்துள்ளமையையும் காண முடிகிறது. கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் புவியியல் ரீதியான பரம்பல் அட்டவணை -2-ல் தரப்பட்டுள்ளது.

கிராமப்பகுதிகளில், சேமிப்புக்களின் ஆற்றல் குறைவாகவே உள்ளது என்றும், அதன் விளைவாக திரட்டப்படும் சேமிப்புக்களை விடவும் கூடுதலான தொகை கடன் வழங்குவதற்கு தேவைப்படுகிறது என்றும் பொதுவான ஊகம் நிலவுகிறது. கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் கடந்தகால அநுபவம் இந்த ஊகம் தவறானது என நிரூபித்துள்ளது. முதல் 5 வருடகால இயக்கத்தின் போது வைப்புக்களுக்கும் கடன்களுக்கும் இடையில் ஒரு பற்றுக்குறை இடைவெளி இருந்தது. ஆனால், அடுத்து வந்த வருடங்களில் (1974, 1975 நீங்கலாக) கிராமிய வங்கிகள் தாம் வழங்கிய குறுகிய காலக் கடன், அடைவுக்கடன் தொகைகளுக்கு மேலதிமாக பெருந் தொகையை சேமிப்புக்களில் வைத்திருந்தன. 1970 இல் கிராமிய வங்கிகள் 78 இலட்சம் ரூபாவை மிகையாகப் பெற்றிருந்தன; 1980 இல் இத்தொகை 19.1 கோடி ரூபாவாக அதிகரித்து. 1987 இறுதிப்பகுதியில் 85.1 கோடி ரூபாவரையில் உயர்ந்து காணப்பட்டது. 1987 இறுதியில் கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் (திருகோணமலை தவிர்ந்த) எல்லா மாவட்டங்களிலுமே கடன்களுக்கு மேலாக அதிகரித்த வைப்புக்களைக் கொண்டிருந்தன.

கிராமிய வங்கிகளின் விஸ்தரிப்பு சுமார் 1000 கிளைகள் வரையில் பரவியுள்ளதுடன் ஓரளவுக்கு நாடு முழுவதிலும் இக்கிளைகள் வியாபித்துக் காணப்படுகின்றன. மேலும் இவ்வங்கிகள் ஒன்று திரட்டியுள்ள சேமிப்புக்களின் அளவு திருப்திகரமானதாகவே இருக்கிறது. இருப்பினும், கிராமிய அபிவிருத்திக்குரிய நிதி வழங்கும் ஒரு நிறுவனம் என்ற வகையில் அதன் செயல்பாடு மிகவும் வரையறுக்கப்பட்டதாகவே இருந்துவந்துள்ளது. கிராமிய சமூகத்திடமிருந்து சிறுசேமிப்புக்களை திரட்டுவதில் கிராமிய வங்கிகள் தமது ஆற்றலிகளைத் தெளிவாகவே புலப்படுத்தின. ஆனால், அவற்றின் கடன் பதிவேடுகள் மிகக் குறைந்த நடவடிக்கைகளையே காட்டி நின்றன. குறிப்பாக, நகை அடைவுக்கடன்கள் நீங்கலாகப் பார்க்குமிடத்து கடன் நடவடிக்கைகள் மிகக் குறைவாகும். 1987 இறுதியில் நகை அடைவுக்கடன் தவிர்ந்த கடன்கள் ரூபா 33.78 கோடியாக மட்டுப்படுத்தப்பட்டிருந்

அட்டவணை 2

கிராமிய வங்கிகள் — மாவட்ட வாரியான பகிர்வு - 1987

| மாவட்டம் | கூட்டுறவு கிராமிய வங்கிகள் விசேஷ கிளைகள் |
|---|---|
| கொழும்பு | 59 - 69 |
| கம்பகா | 94 - 97 |
| களுத்துறை | 46 - 47 |
| கண்டி | 77 - 77 |
| மாத்தளை | 23 - 22 |
| நுவரெலியா | 27 - 29 |
| காலி | 69 - 72 |
| மாத்தறை | 65 - 66 |
| அம்பாந்தோட்டை | 25 - 25 |
| யாழ்ப்பாணம் | 36 - 36 |
| மன்னார் | 08 - 07 |
| வவுனியா | 06 - 06 |
| மட்டக்களப்பு | 10 - 10 |
| அம்பாறை | 28 - 28 |
| திருகோணமலை | 13 - 13 |
| குருணாகல் | 96 - 96 |
| புத்தளம் | 35 - 35 |
| அநுராதபுரம் | 39 - 39 |
| பொலனறுவை | 28 - 28 |
| பதுளை | 53 - 53 |
| மொனராகலை | 09 - 09 |
| கேகாலை | 49 - 49 |
| இரத்தினபுரி | 60 - 60 |
| | 955 968 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 3

கிராமிய வங்கி கடன்களின் பகிர்வு

(ரூ. பத்து இலட்சம்)

| நோக்கம் | 1985 முடிவில் நிலுவை | % | 1986 முடிவில் நிலுவை | % | 1987 முடிவில் நிலுவை | % | 30.09.88 ல் நிலுவை | % |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. உற்பத்தி | 53.8 | 23.0 | 60.5 | 20.5 | 66.9 | 19.8 | 93.6 | 24.3 |
| 1.1 விவசாயம் | 33.7 | | 32.4 | | 33.2 | | 58.6 | |
| 1.2 கால் நடை வளர்ப்பு | 9.4 | | 11.6 | | 15.1 | | 15.9 | |
| 1.3 குடிசை கைத்தொழில் | 10.7 | | 16.5 | | 18.6 | | 19.1 | |
| 2. வீட்டுமின் இணைப்பும் நீர் வழங்கலும் | 133.4 | 57.0 | 176.2 | 59.7 | 198.2 | 58.7 | 225.2 | 58.9 |
| 3. கடன் மீட்பு | 15.2 | 6.5 | 17.8 | 6.0 | 19.8 | 5.9 | 19.9 | 5.3 |
| 4. நுகர்வு | 7.3 | 3.1 | 8.4 | 2.8 | 10.9 | 3.2 | 10.4 | 2.8 |
| 5. வர்த்தகமும் ஏனையனவும் | 24.4 | 10.4 | 32.4 | 11.0 | 42.0 | 12.4 | 33.0 | 8.7 |
| மொத்தம் | 234.1 | 100.0 | 295.3 | 100.0 | 337.8 | 100.00 | 382.1 | 100.0 |

தன. நகை அடைவுகளுக்கு வழங்கப்பட்ட தொகை ரூபா 37.1 கோடியாகும். நகை அடைவுக்கடன் உட்பட மொத்தமாக வழங்கப்பட்ட கடன்கள் நீங்கலாக மேலதிக வைப்புக்களாக 85.1 கோடி ரூபா இருந்தது.

குறுங்காலக் கடன்களில் அரைப்பங்கிற்கும் கூடுதலானவை வீடுகளுக்கு மின்னிணைப்பு பெறுவதற்கும் நீர் வழங்கலுக்காகவும் பயன்படுத்தப்பட்டன. வேளாண்மை உற்பத்தி மற்றும் குடிசைக் கைத்தொழிலுக்கான கடன்கள், முற்பணங்களில் ஏறத்தாள 20 சதவீதத் தொகையை மட்டுமே கொண்டிருந்தன. இதிலிருந்து அடைவு பிடித்தலின் மூலம் பெறப்பட்ட பணம் உற்பத்தி நோக்கத் தொழில் முயற்சிகள் உட்பட பல்வேறு நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கும் என்பதனை ஏற்றுக்கொள்ளலாம். 1985-87 காலப் பகுதியில் குறுங்கால முற்பணங்களின் நோக்க அடிப்படையிலான பகிர்ந்தளிப்பு அட்டவணை 3 இல் தரப்பட்டுள்ளது.

கடன் வழங்களிலுள்ள இக் குறைபாடு பல ஆண்டுகளுக்கு முன்பே உணவு, விவசாய தாபன தூதுக்குழுவினால் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டது. இது கிராமிய வங்கிகள் பற்றி குறிப்பிடுகையில் ''உள்ளூர் கிராமிய அபிவிருத்திக்கென, மிகையாக இருக்கும் உள்ளூர் மூல வளங்களை ஒழுங்கான முறையில் பயன்படுத்தும் நோக்கில் கிராமியத் துறையில் வங்கி அலகுகள் இன்னும் சரியாக அபிவிருத்தியடையவில்லை. கிராமிய முற்பணங்களை விட கிராமிய வைப்புக்களின் மிகை நிலையாக அதிகரித்துச் செல்வதில் இது மிகத் தெளிவாக்ப் புலனாகின்றது'' என்று தெரிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியும் அதன் ஆண்டறிக்கைகளிலும் பொருளாதார மீளாய்வுகளிலும் இக்கருத்தை தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கிறது. 1985 ஆம் ஆண்டிற்கான மீளாய்வில் அது, ''கிராமியத் துறைக்கு கடன் வழங்குவதில் கிராமிய வங்கிகள் மிகுந்த சுறுசுறுப்புடன் முயற்சிகளை மேற்கொண்டாலொழிய, இவ்வங்கிகள் கிராமியத் துறையில் இருந்து நகர்ப்புற நிலையங்களுக்கு மூல வளங்களை மாற்றல் செய்யும் வழி முறையாக வெறுமனே தொடர்ந்தும் இருக்கும்'' என்று குறிப்பிட்டுள்ளது. உண்மையில், சிறு கைத்தொழில் முயற்சிகளுக்குப் போதுமான கடன்களை வழங்குவதில் கிராமிய வங்கிகள் தவறியமையே மத்திய வங்கி 1985 இல் பிராந்திய கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் அமைப்பை தொடங்குவதற்கு வழிகோலியது.

கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் அவற்றின் கடன் வழங்கலை அதிகரிக்க இயலாமல் போனமைக்கு ஐயத்துக்கிடமின்றி பல காரணிகள் ஏதுவாக இருந்தன. உள்ளூர் சமூகம் நிதியிடலுக்கான ஆற்றல் வாய்ந்த பொருளாதார தொழில் முயற்சிகளைக் கொண்டிருக்கவில்லை என்பதே இதில் முதலாவதும் முதன்மை வாய்ந்ததும் ஆகும். அத்தகைய தொழில் முயற்சிகளின் மேம்பாடு, தேர்ச்சி, சந்தை வாய்ப்பு தொழில் முயற்சியாளர்களின் ஆற்றல் என்பனவற்றை வேண்டி நிற்கின்றது. வெறும் நிதிகள் போதுமானவையல்ல. எனவே நிதிகளைப் பயன்படுத்துவதற்குப் பொருளாதார தொழில் முயற்சிகளுக்கான இம்முன் நிபந்தனைகளை தோற்றுவிக்க வேண்டி இருக்கும்.

கடன் வழங்களுக்காக வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களைக் கருத்திற் கொண்டாலும் கூட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் ஊழியர்கள் அபாய ஏதுக்களை எதிர்நோக்கும் அளவுக்கு முனைப்புப் பெற்றவர்களாக இருக்கவில்லை என்பதனையும் இங்கு கவனத்தில் எடுக்க வேண்டும். அடைவு வைத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற பூரணமான பாதுகாப்புடன் கூடிய கடன் வழங்கல்களையே அவர்கள் மிக எளிதாக மேற்கொண்டது போல் தெரிகிறது. செயற் திட்டங்களையும் அவற்றின் ஆற்றலையும் அடிப்படையாகக் கொண்ட கடன் வழங்கல் விஷயத்தில் திட்டங்களை மதிப்பீடு செய்யும் திறன் இவ்வூழியர்களுக்கு இருக்கவில்லை. அத்தகைய கடனளிப்புக்களை ஊக்குவிப்பதற்குத் தேவையான அர்ப்பணிப்பும், துணிவும் கூட அவர்களிடம் இல்லாதிருந்திருக்கலாம்.

கிராமிய வங்கிகளை மதிப்பீடு செய்கையில், ''கூட்டுறவுக் கிராமிய வங்கிகளுக் கூடாக கிராமிய சேமிப்புகளை ஒன்று திரட்டுவது என்ற வரையறுக்கப்பட்ட கருத்தைப் பொருத்த வரை கிராமிய வங்கித் தொழில் வெற்றியடைந்திருக்கின்றது எனக் கூறுவதில் உண்மை இருக்கலாம். ஆனால் கிராமியப் பொருளாதாரத்தின் பொதுவான அபிவிருத்தியைப் பொறுத்தவரை கிராமிய வங்கித் தொழில் வரவேற்கத்தக்க தாக்கத்தினை மேற்கொள்வதில் தவறி விட்டது'' என்று ஓல்கட் குணசேகரா கூறினார். இக்குறைபாடு கடந்த காலச் செயற்பாட்டில் தெளிவாகத் தெரிகிறது. அதே வேளையில் அரசாங்கத்தின் சனசக்தி நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்த அபிவிருத்திக்கான புதிய வாய்ப்புக்கள் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளுக்கு-அவை ஏற்கனவே ஸ்தாபிதமான-நிறுவனங்கள் என்ற அனுகூலத்துடன் கிட்டுகின்றன. மீண்டும் சிறிய அளவு தொழில் வாய்ப்பினையும், வருமானத்தையும் உருவாக்கும் தொழில் முயற்சிகளுக்கு கடன் வழங்கத்தக்க அடிப்படையினை இதன் மூலம் உருவாக்கிக் கொள்ள முடியும். சனசக்தி வேலைத்திட்டத்தில் ஈடுபட்டுள்ள ஏனைய அரச அமைப்புக்கள், தொழில் வகைகளைத் தெரிவு செய்து நிதியிடுவதற்காக சிபாரிசு செய்து கூட்டுறவுக் கிராமிய வங்கிகளுக்கு நிதிக்காக அனுப்பும் ஒரு நிலையில் இவ்வங்கிகள் முன்வைக்கமுடியும். இந்த முறையானது இலங்கை மத்திய வங்கி தனது பிரதேச அலுவலகங்கள் ஊடாகத் திட்டங்களை இனங்கண்டு, அவ்வப் பகுதிகளில் உள்ள வர்த்தக வங்கிக் கிளைகளுக்கு நிதிக்காக சிபாரிசு செய்வதற்கு ஒப்பான ஒன்றாக விளங்குகின்றது.

கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் 25 வருட நிறைவு கொண்டாடப்படும் இச்சந்தர்ப்பத்தில் அவை ஸ்தாபிதமாவதற்கு பின்னணியில் இருந்த காரணங்களை நோக்குவது பொருத்தமானதாகும். வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுவது அவசியமானதும் முக்கியமானதுமாகும் என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால், இது ஒன்று மட்டுமே தேவையை நிறைவு செய்து விடாது. கிராமங்களின் தன்மைகளுக்கேற்ப பொருத்தமான வலுவான நடைமுறைகள் இந்நிறுவனங்களில் சேர்த்துக் கொள்ளப்படுதல் வேண்டும். வங்கிகளோ அன்றி ஏனைய கடன் வழங்கும் நிறுவனங்களோ கிராமிய மக்களுக்கு — வறிய, கல்வியறிவு குறைந்த வாடிக்கையாளர்களுக்கு - பொருத்தமான அமைப்புக்களாகவே நிறுவப்படுதல் வேண்டும். கிராம சமுதாயத்தில் உள்ள கிளைவங்கிகள், நகரங்களில் உள்ள வங்கிகளைப் போன்று அதே அமைப்பிலும், அதே அணுகு முறையிலும் செயற்படுமேயானால் அவை செழிப்புமிக்க வாடிக்கையாளர்களை மட்டுமே கொண்டிருக்கும்.. அவர்கள் நில உடமையாளர்களாக, வர்த்தகர்களாக மட்டுமே விளங்குவர். மிகப் பெருந்தொகையினரான சாதாரண கிராமத்தவர்களாக இருக்க மாட்டார்கள். கிராம மக்கள் தம்மைத்தேடி வருவதற்குப் பதிலாக வங்கியாளர்களே தமது கிராம வாடிக்கையாளர்களைத் தேடிச் செல்ல வேண்டும் என்பது இப்போது உணரப்பட்டுள்ளது.

கிராமியத் துறைக்கு சேவையாற்றுவதற்கென நிதி நிறுவனங்களை அபிவிருத்தி செய்வது இலகுவானதொரு காரியமல்ல. 25 வருடங்களுக்கு முன்னர் முதலாவது கிராமிய வங்கி ஆரம்பிக்கப்பட்டபோது, அது அதுவரை காலமும் இருந்த மரபுகளை மீறி சிறிதளவு வங்கி வசதிகளை மட்டுமே கொண்டிருந்த சமூகத்தின் ஒரு பிரிவினருக்கு மிகப் பயனுள்ள அமைப்புக்களாக இயங்கி வந்துள்ளன. வெறுமனே சேமிப்புக்களைத் திரட்டுவதிலும், அவ்விதம் திரட்டப்பட்ட நிதிகளை வளர்ச்சியடைந்த பகுதிகளுக்கு அனுப்பிக் கொண்டிருப்பதிலும் மட்டும் இனியும் இவ்வங்கிகள் செயற்பட முடியாது. உள்ளூர் சமூகத்துக்குள்ளேயே புதிய தொழில் முயற்சிகளை கண்டுபிடித்து, அவற்றுக்கு நிதிவசதிகளை வழங்கும் ஓர் ஊடகமாக அவை செயற்பட வேண்டிய காலம் வந்துவிட்டது.

( 16—ம் பக்கத் தொடர்ச்சி)

கூ. கி. வங்கிகள் அபிவிருத்தியடைந்துள்ளமையினால், மக்கள் வங்கியினைப் போலவே அவையும் அதே முறையிலேயே நடத்தப்படுவதோடு, கிராமிய அடிப்படை நிறுவகமான தனித்துவம் இதற்கு இல்லையென்பதை அனுபவம் காட்டுகின்றது. கிராமிய பொருளாதார தேவைகளுக்கேற்ற அபிவிருத்தியுடன் தொடர்பான ஆழமான கட்டுக்கோப்பு இன்மையினால் இன்றும் இலங்கைக் கிராமிய வங்கித்துறை பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, கிராமப்புற மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஒரு புதிய அணுகுமுறை, ஒரு புதிய மனப்பாங்கு, ஒரு வித்தியாசமான ஏற்பாடு மிகவும் அவசியமானதாகும். கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பைக் கொண்டுவரக் கூடியதும், கிராமத்து மக்களின் வருமானத்தை அதிகரிக்கக் கூடியதுமான முயற்சிகளுக்கு கொடுகடன்கள் அளிக்கப்பட வேண்டும் என்பதை இங்கு வற்புறுத்தியாக வேண்டும்.

# கிராமப் பகுதிகளின் முதலீட்டு வளத்திறனைக் கண்டறிதல்: கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் வகிக்கும் பங்கு

உபாலி விதானபதிரன

இலங்கையின் கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் தமது 25 வது ஆண்டு நிறைவினை 1989 ம் ஆண்டு மார்ச் மாதம் கொண்டாடுகின்றன. இக்கிராமிய வங்கித் திட்டம் 1964 ம் ஆண்டு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட போது, நிறுவன ரீதியிலான நிதிச் செயற்பாடுகளில் இருந்து நாட்டின் கிராமியத் துறை பெருமளவுக்கு துண்டிக்கப்பட்டிருந்தது. கிராமிய மக்கள் அடிப்படை வங்கி நடைமுறைகளில் பரிச்சயம் கொள்வதற்கு கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் வழிகாட்டின என்று கூறலாம். ஆரம்ப வருடங்களில் கூ. கி. வங்கி இயங்கிய பிரதேசங்களில் அதனது அணுகு முறை மிக ஜாக்கிரதையானதாக இருந்தது. இவ் வங்கிகள் தமது சூழலில் இருந்த நிதி அமைப்புக்குள் தாக்குப் பிடிக்கக் கூடியதாக இருந்தன. மெனிக்ஹின்னே கூ. கி. வங்கியை இதற்கோர் உதாரணமாகக் கூறலாம். இவ்வங்கியமைப்பு 1970ன் முற்பகுதிகளில் துரித வேகத்தில் வளர்ச்சி கண்டது. பண வைப்பின் அளவு விரிவடைந்தது; அதன் முதலீட்டமைப்பு பண்முகப்படுத்தப்பட்டது. 1976 ல் இவ்வங்கியமைப்பில் 503 கிளைகள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. வைப்புத் தொகை 11.6 கோடி ரூபாவாகவும், முற்பணங்களின் பெறுமதி 10.1 கோடி ரூபாவாகவும் அமைந்தன. 1977 க்குப் பிந்திய காலகட்டம் கூட்டுறவுக் கிராமிய வங்கியமைப்பில் நெருக்கடி நிலையை எடுத்து வந்தது. கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் இலாபத்தன்மையினுல் ஏற்பட்டதல்ல இந்நெருக்கடி; கிராமப் பகுதிகளின் சேமிப்பு நிதிகள் நகர்சார் தொழில் முயற்சிகளுக்கு பாய்ச்சப்படுகிறது போன்ற குற்றச்சாட்டுகளே இந்நிலைமையைத் தோற்றுவித்தன. கிளைகள், வைப்புக் கணக்குகள், வைப்புத் தொகை, முற்பணங்கள் என்பன பெருமளவில் அதிகரித்த ஒரு கட்டத்திலேயே இந்நெருக்கடி நிலைமை ஏற்பட்டது. இவ்வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாக 1988ம் ஆண்டின் இறுதிக் கட்டத்தில் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் விரிவாக்கம் 860 கிளைகளாக பெருகி, 180 கோடி ரூபாவுக்கும் அதிகமான வைப்புக்களை தன் கைத்தே வைத்திருந்தமையைக் குறிப்பிடலாம். இவ்வைப்புக்களில் ஏறத்தாழ 65% இந் நாட்டின் வர்த்தக வங்கிகளில் முதலீடு செய்யப்பட்டமை, எந்தளவிற்கு கிராமியத் துறையின் மூலவளங்கள் நகர்த்துறை நோக்கி நகர்த்தப்பட்டன என்பதைக் காட்டுகின்றது.

இலங்கையில் கிராமிய வங்கிகளின் வளர்ச்சி

| வருடம் | கிளைகளின் எண்ணிக்கை | மொத்த வைப்புக்கள் ரூபா | மொத்த முற்பணங்கள் ரூபா | ஏனைய வங்கிகளில் முதலீடுகள் ரூபா |
|---|---|---|---|---|
| 1965 | 8 | 496,360 | 1,167,265 | (670,905) |
| 1966 | 13 | 725,791 | 1,753,604 | (1,027,813) |
| 1967 | 27 | 1,371,313 | 2,662,689 | (1,291,376) |
| 1968 | 44 | 3,333,328 | 4,446,344 | (1,113,016) |
| 1969 | 89 | 6,173,145 | 5,395,927 | 777,218 |
| 1970 | 90 | 16,908,586 | 9,102,279 | 7,806,307 |
| 1971 | 111 | 17,864,410 | 9,316,647 | 8,547,763 |
| 1972 | 242 | 23,320,318 | 15,184,913 | 8,135,405 |
| 1973 | 341 | 45,154,631 | 38,912,146 | 6,242,485 |
| 1974 | 403 | 62,734,400 | 67,406,770 | (4,672,370) |
| 1975 | 447 | 74,214,009 | 87,285,572 | (13,071,563) |
| 1976 | 503 | 116,289,077 | 101,792,546 | 14,496,531 |
| 1977 | 544 | 175,462,249 | 110,883,300 | 64,578,949 |
| 1978 | 559 | 222,146,023 | 125,078,000 | 97,068,023 |
| 1979 | 586 | 271,003,019 | 129,251,000 | 141,752,019 |
| 1980 | 641 | 368,354,024 | 176,699,000 | 191,655,024 |
| 1981 | 743 | 434,048,015 | 271,596,000 | 162,452,015 |
| 1982 | 804 | 541,483,024 | 329,277,000 | 212,208,024 |
| 1983 | 840 | 683,444,717 | 361,261,007 | 322,183,710 |
| 1984 | 888 | 965,490,225 | 508,246,093 | 457,244,132 |
| 1985 | 914 | 1,087,536,439 | 574,811,379 | 512,725,060 |
| 1986 | 932 | 1,295,597,828 | 657,775,183 | 637,822,645 |
| 1987 | 955 | 1,560,178,455 | 708,781,964 | 851,396,491 |
| 1988 | 968 | 1,832,051,929 | 764,598,077 | 1,067,453,852 |

கிராமிய வங்கித் திட்டம் அதன் நோக்கங்களை அடையத் தவறி விட்டதா? அது தன் மூல நோக்கங்களை மறந்து, மூலவளங்களை நகர்சார் மேட்டுக்குடியினரின் தேவைகளை நிறைவு செய்யப் பயன்படுத்துகின்றதா? கிராமியத் துறை அபிவிருத்திக்குப் பதிலாக அபிவிருத்தி இன்மையைத் தோற்றுவிக்கும் ஒரு கருவியாக இது மாறியுள்ளதா? இது போன்ற பாரிய குற்றச்சாட்டுக்கள் இக்கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் மீதும், அதனைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றுவித்த மக்கள் வங்கிக்கு எதிராகவும் சமத்தப்படுகின்றன. நாட்டின் சமூகப் பொருளாதார அமைப்பின் மீது போதியளவு ஆய்வினை மேற்கொள்ளாமல் இவற்றை சரியான முறையில் விளங்கிக் கொள்ள முடியாது. குறிப்பாக, 1970-களின் நடுப்பகுதியில் இருந்து கட்டியெழுப்பப்பட்ட மிகை வைப்பு நிதி உருவானதற்கான காரணங்களை துருவி ஆராய்வதற்கே இக் கட்டுரை முனைகின்றது.

கிராமியக் கூட்டுறவு வங்கியின் உள்ளார்ந்த அமைப்பு முறை மாற்றங்களும், சூழலில் ஏற்பட்ட இயற்கை விளைவுகளும் இம்மிகை வைப்பு நிதி உருவாகக் காரணமாக அமைந்ததாக அண்மைக் கால ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. இவ்வாறான நிலைமைக்கு ஏதுவான காரணிகளை உள்வாரி, வெளிவாரி என்ற அடிப்படையில் வகுக்கலாம். வெளிவாரியான காரணிகள் இலங்கையின் சமூகப் பொருளாதார அமைப்பினைக் குறிப்பிடுகின்றன. கிராமியப் பொருளாதாரத்தின் சமூக, பொருளாதார, அரசியல் நிலைமை ஏனைய துறைகளுடன் அதன் தொடர்பினை விளக்குவதாக உள்ளது. கூட்டுறவுக் கிராமிய வங்கிகளோ அல்லது நாட்டின் முழுமையான வங்கி முறைகளோ இவற்றின் மீது போதியளவு தாக்கத்தினைக் கொண்டிருக்கவில்லை. கூட்டுறவுக் கிராமிய வங்கிகளில் இன்று நிலவுகின்ற மிகை வைப்பு 1975ம் ஆண்டில் இருந்து தொடர்ச்சியாக ஏற்பட்ட வரலாற்றுச் செயல் முறையின் இறுதி விளைவு எனலாம். 1977 பொருளாதார சீரமைப்பின் பின் இச்செய் முறை விரிவாக்கப்பட்டது. 1975 வரை கிராமியக் கூட்டுறவு வங்கி பெரும்பாலும் வைப்புக்கள், கடன்கள் என்பவற்றில் ஒரு சமநிலையை வைத்திருந்தன. வெளியில் மிகை வைப்புக்களை முதலீடு செய்யும் பிரச்சினை ஒரு போதும் எழுவில்லை. 1975 லும் கிராமிய வங்கிகளின் முற்பணங்கள் அவற்றின் மொத்த வைப்பினை விடவும் 17.1 வீதத்தால் (1.3 கோடி ரூபா) கூடுதலாக இருந்தன. 1976 ல் இருந்து மிகை வைப்புக்கள் வருடாந்தம் 69.7% ஆக வளர்ச்சியடைந்தன. இவை கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் முற்பணங்களின் அளவை விடவும் மிகக் கூடுதலாக இருந்தது. இதனை இன்றைய நிலைமைக்கு வழிகோலிய ஒரு திருப்பு முனையாக அடையாளம் காண முடியும்.

1977ம் ஆண்டு சீர்திருத்தங்கள் சில சாதகமான தாக்கங்களைக் கொண்டிருந்த போதிலும், கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின முதலீட்டுச் சந்தை மீது எதிர்மறையான சில தாக்கங்களையும் கொண்டிருந்தன. இதுகால வரையிலும் உள்ளூர் சந்தை அமைப்புக்குள் இருந்த விவசாய உற்பத்திப் பொருட்கள் (உ+ம் மிளகாய், வெங்காயம், பருப்பு ஆதியன) குடிசைக் கைத்தொழில்கள் (உ+ம் சீனி, புடவை, கடதாசி) கைப்பணிப் பொருட்கள் (உ+ம் பட்டிக், முகமூடி செய்தல் போன்றன) வர்த்தகம், செலாவணி என்பன மீது இருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமையின் விளைவாக உருவான சந்தைச் சக்திகளினால் பலத்த தாக்கத்திற்குட்பட்டன. விலை, இலாபம், நுகர்வோர் இறைமை போன்றன கிராமிய உற்பத்தியாளர்களைப் பொருத்தவரை புதிய அம்சங்களாகும். அரசாங்க உதவியும், பாதுகாப்பும் சடுதியாக வாபஸ் பெறப்பட்டமையை அவர்களால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. இதன் விளைவாக இவ்வுற்பத்திப் பொருட்கள் புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட இறக்குமதிப் பிரதியீட்டுப் பொருட்களுடன் போட்டியிட முடியாது சந்தையிலிருந்து ஒதுங்க வேண்டியவைகளாக மாறின. இப்போட்டியில் சில பொருட்கள் பிடித்து நின்ற போதிலும் பெரும்பாலான பொருட்களால் அதனை தாக்குப் பிடிக்க முடியவில்லை. உள்ளூர் வர்த்தக மாற்று விகிதத்தில் சடுதியாக ஏற்பட்ட மாற்றம் விவசாயிகளையும், கிராமியக் கைத்தொழிலாளர்களையும், கைவினைஞர்களையும் பாதித்தன. உள்நாட்டு வர்த்தகத்தில் ஏற்பட்ட இந்த சடுதியான மாற்றத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட அல்லது மத்தியிலிருந்து வந்த பொருட்கள் கிராமப்புறங்களில் வந்து குவிந்தன. பலவகையான உள்நாட்டுப் பிரதியீட்டுப் பொருட்கள் இவற்றுக்கு வழிவிட்டு ஒதுங்க வேண்டியிருந்தன. நகர் மையங்களில் முதலீடு செய்வது இலாபம் தரக் கூடியதாக இருந்தமையால் அத்துறையை நோக்கி மக்கள் வரப்பட்டார்கள். முதலீட்டாளர்கள் வெகு விரைவில் இச் சந்தை நிலைமைகளை விளங்கிக் கொண்டார்கள். நகரத்தை மையமாகக்கொண்ட உற்பத்தித் துறைகளுக்கு கிராமிய வர்த்தகர்கள் தமது முதலீட்டமைப்பை மாற்றிக் கொண்டார்கள். உத்தரவாத விலைகள், பசளை மானியம் போன்ற ஊக்குவிப்புக்கள், புதிய மாற்றங்கள் கொண்டு வந்த அதிர்ச்சிக்கு ஈடு கொடுக்கப் போதியவையாக இருக்கவில்லை. கிராமிய வங்கிகள் 1977-க்கு முன்னர் முதலீடுகளை இட்டிருந்த துறைகளில், 1977-ன் சீர்திருத்தங்களின் பின்னர் சந்தை வாய்ப்புக்கள் சுருங்கிக் கொண்டு வந்ததுடன், விலைகளும் வீழ்ச்சியடைந்திருந்தன. உள்நாட்டு வர்த்தக அமைப்பில் ஏற்பட்டு வந்த இத்தகைய மாற்றங்களே கிராமிய வங்கிகளில் மிகை வைப்புக்கள் தோன்றுவதற்கு அடிப்படை காரணங்களாக இருந்தன.

இதே வேளையில் கிராமிய வைப்புக்கள் அதிவேகத்தில் வளர்ந்தன. அரசின் செய்திட்டங்களான நாட்டின் வீடமைப்புத்திட்டம், கட்டடம், பாதையமைப்பு, நீர்ப்பாசனம் மின்வலு என்பவற்றுக்கூடாக நேரடி நிதிப் பாய்ச்சல் கிராமத்தினுள் சென்றமை இதற்கான காரணமாகும். இது தவிர, மேற்காகிய குடிய




கல்வோர் அனுப்பிய பணம், மற்றும் சிறு நில உடைமையாளர்கள் பணப்பயிர்களுக்கு பெற்றுக் கொண்ட நல்ல விலைகள் போன்றன கிராமப் பகுதிகளில் திரவத் தன்மை பெருக வழிகோலின. எனினும், மீள் முதலீடு செய்யக் கூடிய நிலைமை அங்கிருக்காமையால் கிராமியத் துறை இந்நிதியைப் பயன்படுத்தத் தவறியது. அதேவேளை வைப்புச் செய்வோர்களுக்கு அரசாங்கத்தின் வட்டி வீதக் கொள்கைகள் மிகவும் சாதகமான முறையில் அமைந்தன. வங்கிகளினால் அளிக்கப்பட்ட வருடாந்த வட்டி வீதம் 20 சதவீதத்தினையும் தாண்டியது. இது கிராமியத் துறையில் முதலீடுகள் மந்தமாக இடம் பெறக் காரணமாக இருந்தது. அனுகூலங்களை எதிர்பார்த்த முதலீட்டாளர்கள் வேறு வழியின்றி பணத்தை வைப்புப் செய்வதில் ஈடுபட்டார்கள். எனவே, உயர்ந்த விலையிலான வைப்புக்கள் அதிகரிக்க முற்பணங்களின் விலைகளும் இயல்பாகவே அதிகரித்தன. இதனால் கிராமிய முதலீட்டுச் சந்தை மேலும் நலிவடைந்தது. இச்செயற்பாட்டினால் வைப்பினை விஞ்சிய முற்பண அதிகரிப்பு வங்கியமைப்பில் குறிப்பிடக் கூடியதொரு அம்சமாக மாறியது. இது சந்தை விலை விகிதங்களின் வீழ்ச்சியை எடுத்துக் காட்டியது. இக் காலகட்டத்தில் கிராமிய வங்கிகள் மட்டுமன்றி ஏனைய வங்கிகளும் கிராமப் புறங்களில் கிளைகளைத் திறந்து வைத்தன. இதன் விளைவாக கிராமியத் துறை மிகை வைப்புக்களினால் மேலும் பாதிப்பினை எதிர் நோக்கியது.

பிழை எங்கு ஏற்பட்டிருக்கிறது என்பதில் கவனஞ் செலுத்தாது முற்பணங்களின் அளவை எப்படிப் பெருக்கலாம், என்பதிலேயே கவனஞ் செலுத்தப்பட்டது. இதனை அடையும் நோக்கில் மேலும் பல நிறுவனங்கள், கருவிகள், திட்டங்கள் என்பன அறிமுகப்படுதப்பட்டன. இதன் விளைவாக வங்கிகள், கிளைகள், கடன் திட்டங்கள் என்பன மென் மேலும் பெருகின. குறிப்பாக 1983 ன் பின்னர் ஏற்பட்ட பாதுகாப்பற்ற முதலீட்டுச் சூழ்நிலையால் நிலைமை மேலும் சீர்கேடடைந்தது. இதன் மூலம் கஷ்டமான பிரதேசங்களின் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் இயக்கத்தினை இடை நிறுத்த வேண்டியிருந்தது. இலகுவாகப் பாதிக்கப்படக் கூடிய இடங்களில் அமைக்கப் பட்டிருந்த வங்கிகளில் நகை அடகுத் தொழில் இடை நிறுத்தி வைக்கப்பட்டது. இந்த முதலீட்டுச் சூழலுக்குள்ளேயே கிராமிய வங்கிகளினதும், கிராமிய வங்கி அமைப்பினதும் உள்ளார்ந்த பலவீனங்களை நாம் பரிசீலனை செய்தல் வேண்டும்.

இரண்டாவது தொகுதியில் அடங்கும் காரணியான உள்வாரியான மாற்றங்களில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் அமைப்பு ரீதியான செயலாற்றல் தகைமையை குறிப்பிடலாம். ப. நோ. கூ. சங்கங்கள், கூ. கி. வங்கிகள், மக்கள் வங்கி, கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் போன்ற பல்வேறுபட்ட நிறுவனங்களின் செயற்பாடுகள் இவற்றுள் அடங்குகின்றன. நிறுவன அமைப்பு, முகாமைத்துவம் ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளில் மேற் குறிப்பிட்ட நிறுவனங்களின் நடைமுறைகளை கூ. கி. வங்கிகள் செயற்படுத்தின. முக்கிய தீர்மானங்கள், வைப்புப் போக்குகள், முற்பணங்கள், மிகைவைப்பு நிதி போன்றவற்றில் இம் மாற்றங்களின் செல்வாக்கு வெளிக் காரணிகளுக்குப் புறம்பாக இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

கூட்டுறவுத் துறையின் புனரமைப்புக்கு முன்னரான கால கட்டத்தையும் பின்னரான கால கட்டத்தையும் (1972) கவனத்தில் எடுத்தே கிராமிய வங்கிகளின் உள்ளார்ந்த அமைப் பொழுங்குகளை பரிசீலனை செய்தல் வேண்டும். கூ. கி. வங்கிகளின் தற்போதைய நிலையில் அதற்கான மாற்றங்களின் பங்களிப்பை பின்வரும் வகையில் குறிப்பிடலாம்:

I. கூ. கி. வங்கிகள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் நிறுவன ரீதியில் வைத்திருக்கும் முக்கியத்துவத்தினை அகற்றுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. முக்கிய தீர்மானம் எடுத்தல், முகாமைத்துவ நடவடிக்கைகளுடன் உள்ளடக்கி கூ. கி. வங்கியை மேற்பார்வை செய்யும் மக்கள் வங்கியின் தலைமைத்துவத் தன்மையைக் குறைத்தல்.

3. பாந்துபட்டு அமைந்திருக்கும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுடன் வங்கி ஊழியர்களின் முக்கியத்துவத்தை குறைத்தல்.

புனரமைப்புக்கு முன்பாக கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் ஒரு ''கிராமிய வங்கி நிறுவனமாக'' தன்னுரிக்கத்துடனும், சுதந்திரத்துடனும் செயற்பட்டன. அவை சுயமாக கணக்கு வழக்குகளை வைத்துக் கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டதுடன், ஒவ்வொரு கூ. கிராமிய வங்கியும் அவற்றின் செயற்பாட்டுக்கு தாமேபொறுப்பேற்க வேண்டியவையாக இருந்தன. இந்த் தனியான கருமங்கள் செயற்பாடுகள் மற்றும் அறிக்கை சமர்ப்பிக்கும் முறைகள் என்பன கிராமிய வங்கிகளை தனித்துவமாக இனங்காட்டின. கிராமிய வங்கி முகாமையாளர், ப. நோ. கூ. ச. முகாமைத்துவக் குழுக்களுக்கு அல்லது ஆளும் சபைக்கு நேரடியாக அறிக்கை சமர்ப்பித்தார். இருந்தபோதிலும் கூட கிராமிய வங்கிகள் புனரமைப்பிற்குப் பின் ஒவ்வொரு பல நோக்குக்கூட்டுறவுச் சங்கத்திலும் ஒரு விசேஷ கிளையும், கடன்/சந்தைப் படுத்தும் முகாமையாளர் பதவி ஒன்றும் உருவாக்கப் பட்டது. இவர் கடன்/சந்தைப்படுத்தல் சம்பந்தமான நடைமுறை பற்றி ப. நோ. கூ. சங்கத்தின் பொது முகாமையாளருக்கு அறிக்கை சமர்ப்பித்து வந்தார்.

கடன்/சந்தைப்படுத்தும் முகாமையாளர் பதவி பின்னர் வங்கிச் சேவை முகாமையாளர் பதவியாக மாற்றப் பட்டது. ஈட்டு ஆதனங்களை பரிசீலனை செய்தல், பல நோக்குக் கூட்டுறவுச் சங்க ஆளுனர் சபைக்கு கடன் விண்ணப்பங்களை சிபார்சு செய்தல், கடன்களை அனுமதித்தல் போன்றன இவரது பொறுப்புக்களாகும். ஒவ்வொரு வங்கிச் சேவை முகாமையாளரும் இரண்டு முதல் ஐந்து வரையான கூட்டுறவுக் கிராமிய வங்கிக்கிளைகளுக்கு அல்லது அதன் கட்டுப்பாட்டில் இருக்கும் விசேட கிளைகளுக்குப் பொறுப்பாக இருக்கிறார். அனேக பகுதிகளில் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் கடன் வழங்கல் அளவும், அவற்றின் வளர்ச்சியும் வங்கிச் சேவைகள் முகாமையாளரின் ஆர்வம், அர்ப்பணிப்பு மற்றும் ஆற்றல் என்பவற்றிலேயே தங்கியிருக்கின்றன. எவ்வாறுயினும், வங்கிச் சேவைகள் முகாமையாளருக்கு கடன் வழங்குவதிலும், ஊக்குவிப்பு நடவடிக்கைகளிலும் குறைவான வாய்ப்புக்களே வழங்கப்பட்டிருந்தன. அத்துடன் அவர்களுக்கான சம்பள அமைப்பும் உற்சாக மூட்டுவதாக இருக்கவில்லை. இத்தகைய பின்னணியொன்றில் இவர்களிடமிருந்து தனித்துவமான செயற்றிறனை எதிர்பார்ப்பது யதார்த்தபூர்வமானதாக இருக்கமாட்டாது.

வங்கிச் சேவைகள் முகாமையாளருக்குக் கீழே (சில ப. நோ. கூ. சங்கங்களில் சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட சம்பள மீளாய்வுக்குப் பின்னரும் கூட) மிகக் குறைந்த ஊதியத்திற்கு அமர்த்தப்பட்ட கிளை முகாமையாளர்கள் இருந்தனர். கைத்தொழில் துறைச் சம்பள மட்டங்களுடன் ஒப்பிடும் போது இது மிக குறைவானதாகும். இவ் அலுவலர்கள் அடிக்கடி சங்கத்தின் சில்லறைக் கடைகளிலும், பல நோக்குக் கூட்டுறவுச் சங்க அலுவலகத்திலும் பல்வேறுபட்ட அலுவல்களில் மாற்றி மாற்றி ஈடுபடுத்தப் பட்டனர். ஆகவே, கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் செயற்பாடுகள் மிக உயர்ந்த வங்கி நடைமுறைகளைக் கொண்டவையாக விளங்கிய போதிலும், தற்போதய நடைமுறை காரணமாக இந்நிலைமைக்கு உகந்த விதத்தில் தேர்ச்சிமிக்க ஆளணி அமைப்பொன்றை பெறமுடியவில்லை. ஆகவே தற்போதுள்ள ஊழியர் தொடர்பு முறை, பொறுப்பேற்கும் படிமுறை, குறைந்தளவு ஊக்குவிப்பு மற்றும் ஊதியம் போன்ற காரணிகள், இவ்வூழியர்கள் கிராமிய முதலீட்டு வாய்ப்புக்களை சுயமான உந்துதலுடன் கண்டறிந்து செயற்படுவதற்கு தடையாக இருக்கின்றன. குறிப்பாக இக்கிராமியத் திட்டங்களுக்கு வெளியே முதலீடு செய்வது குறைந்த அபாய ஏதுக்கள், நல்ல/ பலாபலன்கள் போன்ற காரணங்களின் நிமித்தம் எளிதானதாகவிருக்கிறது.

வங்கிச் சேவைகள் முகாமையாளரிடம் வேலைகள் குவிந்திருக்கும் ஒரு நிலைமைக்கு மேற்சொன்ன காரணிகள் வழிகோலியுள்ளன. அம்பலாங்கொடை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க வங்கிச் சேவைகள் முகாமையாளர், 1986-ல் கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் ஐந்தின் மேற்பார்வைப் பணிகளைச் செய்யவேண்டியிருந்தது. ஒவ்வொரு மாதமும் 100 கடன் விண்ணப்பங்களைப் பரிசீலிக்க வேண்டிய வேலையும் அவருக்கிருந்தது. போதியளவிலான மேலதிக கொடுப்பனவுகள் எவையுமின்றி அவர் பரந்த அளவில் பயணங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது. இது தவிர, வங்கிச் சேவை முகாமையாளர்களின் இத்தகைய வேலைப் பளுவினை மேலதிகாரிகள் மிகவும் அற்பமாகவே கணக்கிலெடுத்தனர்.

கூட்டுறவுக் கிராமிய வங்கிக் கடன் திட்டங்கள் எதிர்நோக்கிய தடங்கல்களில் கடன் தொகைகளை அங்கீகரிப்பதில் உள்ள நடைமுறைத் தாமதங்களும், வழமைகளில் உள்ள நெகிழ்வற்றதன்மைகளும் முக்கியமானவையாகும். ஒரு கடனை வழங்குவதற்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்கு சுமார் 6 வாரங்கள் சென்றமை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. சிலவேளைகளில் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் பதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேடுகள் இதை விட மோசமான நிலைமைகளை வெளிப்படுத்துகின்றன. இவைகள்யாவும், கூட்டுறவுக் கிராமிய வங்கிகளுக்குக் கடன் பெற வருபவர்களை உற்சாகமிழக்கச் செய்பவையாக இருந்தன. இந்தத் தாமத நடைமுறைகளும், கடன்களைப் பெறுவதில் உள்ள கூடிய நடைமுறைச் செலவினங்களும் கிராமியக் கடன் சம்பந்தமான நூல்களில் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளன. 'கிராமிய வங்கி நடவடிக்கைகளில் ஓர் உள்ளார்ந்த எளிமை காணப்பட்ட போதிலும் இந்த உயர்ந்த செலவினங்களைக் குறைப்பதற்கான பொருத்தமான எத்தகைய தீர்வையும் இதுவரை அவை முன்வைக்க முடியாமல் உள்ளன'.

மூல ஆவணங்களில் குறிப்பிட்டுள்ளபடி, கூட்டுறவுக் கிராமிய வங்கி ஊழியர்களின் முக்கிய பொறுப்புக்களில் ஒன்று விரிவான கடன் வழங்கும் முறையொன்றைத் தயாரிப்பதாகும். அவ்வப் பகுதிகளின் கடன் திட்டங்களைத் தயாரிப்பதற்கு அவ்வப் பகுதிகள் குறித்து ஒழுங்கான மதிப்பீட்டாய்வுகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அங்கத்தவர்களின் பொருளாதாரத் தகவல் அட்டைகள், அந்தந்த அங்கத்தவர்களின் கடன் தேவைகள் பற்றிய அடிப்படைத் தகவல்களைப் பெறுவதற்கு உபயோகப்படுகின்றன. எவ்வாறுயினும், நடைமுறையில், கூட்டுறவுக் கிராமிய வங்கி அலுவலர்களின் ஆற்றலும், அளவும் இந்நோக்கத்தை நிறைவேற்றுவதில் மிகவும் வரையறுக்கப்பட்டதாகவும், எதிர்பார்த்த அளவை விட குறைந்ததாகவுமே இருந்தன. கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் கிராமியத் துறைக்கான கடனுக்கத்தைப் பொறுத்தவரை மிகப் பாரதூரமான தடைக் கல்லாக விளங்குவது அவர்களாலே வகுக்கப்பட்டுள்ள கடுமையான தகுதி காண் அளவீடுகளாகும். அங்கத்துவம் பற்றிய விஞக்களில் இருந்தே இது ஆரம்பிக்கின்றது. நகை அடகு வைத்தல் தவிர்ந்த கடன் வசதிகள் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளில் அங்கத்துவம் பெற்றவர்களுக்குள்ளேயே பரிசீலனைக்கெடுத்துக் கொள்ளப்டன. பெறக்கூடிய கடனின் அளவும் ஒரே சீராக இருக்கவில்லை. கடன் விண்ணப்பதாரர்களின் பங்குடமைகளைப் பொருத்ததாக அது அமைந்தது. அங்கத்துவத்தைப் பெற்றுக் கொள்வதும் தொடர்ச்சியாக அதில் அக்கறையாக இருப்பதும் அனேகமாக கிராம மக்களைப் பொறுத்தவரையில் அதிக நன்மைதரும் பயற்சியாக இருந்தது. கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் வைப்புக் கணக்கொன்றை ஆரம்பிக்க விரும்பும் எவரையும் ஊக்கப்படுத்தின. அவ்வகையில் விரும்பிய தொகையை வைப்பாகச் சேர்த்துக் கொண்டன. இருப்பினும் அங்கத்தவர்களாக இருந்த நபர்கள் மாத்திரமே கடன் வசதிகளைப் பெறக் கூடியதாக இருந்தது. இந்த செயல்முறை அவற்றால் கையாளப்பட்ட கடன் கணக்குகளின் அளவை விட மிகப் பெரிய அளவிலான வைப்புக் கணக்குகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக இருந்தது. எடுத்துக் காட்டாக காலி மாவட்டத்தில் உள்ள 4 கூ.கி. வங்கிகளில் வைப்புக்கணக்குகளின் எண்ணிக்கை 10269 ஆக இருந்தது. அதே வேளை நகை அடகுக் கணக்குகள் தவிர்ந்த கடன் கணக்குகள் மிகக் குறைந்தளவில் அதாவது 764 ஆக மட்டுமே இருந்தன.

இதே வேளை அங்கத்தவரல்லாதவர்களின் வைப்புக் கணக்குகள் 7363 ஆக - அல்லது மொத்த வைப்புக் கணக்கில் 75% ஆக - இருந்தன. ஆகவே கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் இந்த மிகை வைப்புக்கணக்கு நிதிகள் மன்னிக்க முடியாத ஒரு செயலாக இருந்தால் கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் இத்தகைய அங்கத்துவரல்லாதவர்களின் வைப்புக் கணக்குகளை ஏற்றுக்கொள்வதை சட்டரீதியாக ஏன் ஒழுங்கு படுத்தக் கூடாது? கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் கிராமிய வைப்பாளர்களின் வைப்புக்களுக்கு ஒரு சிறப்பான, அபாய ஏதுக்கள் குறைந்த இலாபத்தைப் பெற வாய்ப்பளிப்பதன் மூலம் ஒரு தேசிய கடமையை நிறைவேற்ற வில்லையா? மாறாக, அங்கத்தவரல்லாதவர்கள் கூ. கி. வங்கிகளால் வழங்கப்படக் கூடிய வெவ்வேறு வகையான கடன் வசதிகளுக்குத் தகுதி உடையோர் ஆக்கப் படலாம். இத்தகைய ஒரு மாற்றத்தின்போது எழக்கூடிய சிக்கல்கள் பற்றி மேலதிக பரிசீலனைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

கூ. கி. வங்கிகளின் முதலீட்டு வாய்ப்புக்களைப் பாதித்தி மற்றொரு காரணி சிக்கல் மிக்க வெளிச்சூழலாகும். கிராமிய வளங்கள் ஒழுங்கமைக்கப் படாதவையாகவும், கூறு படுத்தப்பட்டவையாகவும் உள்ளன. உதாரணமாக, நிலத்தை அடிப்படையாகக் கொண்ட முதலீடுகள், சிறிய துண்டாடப்பட்ட, உரிமைத் தகராறுகளுக்குட் பட்ட காணிகளைப் பொறுத்த வரையில் சாத்தியமாக இருக்க வில்லை. காணிகளே வருமானத்தின் மூலாதாரமாகவும், அதே வேளை பிரதானமான பாதுகாப்புப் பிணையாகவும் விளங்குகின்றது.

எவ்வாறுயினும், காணி உறுதிகள் தெளிவற்றவையாக இருப்பதால் அவற்றின் முதலீட்டு அடிப்படையான பயன்பாடும் மிகவும் குறைவானதாகவே உள்ளது. கூட்டுறவுக் கிராமிய வங்கி அலுவலர்கள் கிராமிய வாடிக்கையாளர்களுக்குக் கடன் வழங்குவதில் தேவையற்ற கவனத்தையும், கண்காணிப்பையும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இந்த அமைப்பின் சிக்கலானது சீரழிவை உண்டாக்க வல்லதாக உள்ளது. முதற் கண் அது கிராமியப் பகுதிகளின் முதலீட்டு வாய்ப்புக்களைத் தடுத்து கிராம நிதிகளின் பாய்ச்சலை மத்தியை நோக்கித் திருப்புகின்றது. இர

( 33 —ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் கிராமியத்துறையில் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் பங்களிப்பு

எம். டப். பண்டித்த

**1984, ஆசிய பசுபிக் பிராந்திய விவசாய கடன் தாபனம் கொழும்பில் கூடியபோது, சிரேஷ்ட நிர்வாகிகள் குழு கல்வி/கண்காணிப்பு, வேலைத் திட்டத்துக்காக, மக்கள் வங்கி பொது முகாமையாளர் எம். டப். பண்டித்த அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரையின் திருத்தியமைக்கப்பட்ட வடிவம்.**

கிராமிய வங்கிகள் (அல்லது பின்னல் பெயரிடப்பட்டவாறு கூட்டுறவுக் கிராமிய வங்கிகள்) (1) தமது 25 வருடப் பூர்த்தியை இவ்வருடம் மார்ச் மாதத்தில் கொண்டாடுகின்றன. இந்த வங்கிமுறை, மக்கள் வங்கியின் ஆரம்ப கால கட்டத்திலேயே நடைமுறைப் படுத்தப்பட்டது. இதை ஒரு நிறுவனரீதியான கருவியாக உபயோகித்து இதனூடாக, கிராமப் பகுதிகளுக்கு வங்கி வசதிகளுக்கான அம்சங்களை கூட்டுறவு இயக்கம் மூலம் வழங்க முடியும் என எதிர்பார்க்கப்பட்டது. ஒரு கூ.கி. வங்கியை மரபு ரீதியான நோக்கில் ஒரு வங்கியாக கொள்ளமுடியாது. ஆனல் அது பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் நிதித்துறை கருவியாக விளங்கக் கூடியதாக இருந்தது. அது சட்டரீதியான தனி அலகாக இருக்கவில்லை; கூட்டுறவுச் சங்கத்தின் ஒரு பாகமாக இயங்கியே அனைத்து நடவடிக்கைகளையும் அது மேற்கொண்டது. தற்போதைய நிலையில் நாடு முழுவதும் எல்லாமாக 282 கூ. கி. வங்கிகளும் 685 கூ. கி. வங்கிக் கிளைகளும் வியாபித்துக் காணப்டுகின்றன.

இந்தக் கட்டுரையில் இந்த நிறுவனங்களின் நோக்கங்கள், நடைமுறைகள் பற்றியும் அவற்றின் உருவாக்கத்துக்கான பின்னணி மற்றும் கிராமியக் கடன் வழங்கலில் அவற்றின் பங்களிப்பு போன்றவற்றை விபரிப்பதற்கு ஒரு முயற்சி மேற்கொள்ளப்படும்.

கடனுதவி, சந்தைப்படுத்தல், வளங்களை ஒன்று திரட்டல், ஏனைய பொது நோக்கங்களுக்கான நடைமுறைகள் யாவற்றையும் கிராமமட்டத்தில் ஓரமைப்பின் கீழ் கொண்டுவரும் கருதுகோளானது கூட்டுறவு இயக்கத்தைப் பொறுத்தவரை புதிதான ஒன்றல்ல. கடன் சங்கங்களின் பிதாமகரான றெய்பெய்சன் இத்தகைய நோக்கையே வெளிப்படுத்தினர்.

இலங்கையிலும்கூட, 1957 இல் கூட்டுறவு இயக்கத்தைப் புனரமைப்பதற்கான ஆலோசனைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு தனி ஒரு நோக்கில் அமைக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களாக திருத்தி அமைக்கப்பட்டன. கிராமியப் பொருளாதாரத்தில் வலுவான பங்களிப்பை மேற்கொள்வதற்காக இச்சங்கங்களின் இயக்க முறைகளில் ஒன்ருக வங்கிச் செயல்பாட்டு முறையையும் உள்ளடக்கிக் கொள்வது ஒரு அம்சமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

1957 இல் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் உருவாக்கத்தை சிபார்சு செய்த குழுவானது பல கருத்துகளினூடாக பின்வரும் குறிப்புக்களையும் வழங்கியது. ''பலநோக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் ஆரம்பக் கிராமிய வங்கிகளாக விளங்கும் என்பது குறிப்பிடத்தக்கது. மாவட்ட வங்கிகளுடனும், கூட்டுறவு அபிவிருத்தி வங்கியுடனுமான அவற்றின் தொடர்புகள் பின்னையவங்கியுடன் (3) கலந்து பேசிய பின் தீர்வு காணப்பட வேண்டிய விடயமாகும்.''

மக்கள் வங்கியின் ஸ்தாபிதத்துக்கு முன்னர் நிலவிய கிராமிய அமைப்பின் சில அம்சங்களை இப்போது நான் சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன். கூ.கி. வங்கிகளின் பின்னணியை விளங்கிக்கொள்ள அது உதவியாக இருக்கும்.

விவசாயத்துக்கான நிலம் 45 இலட்சம் ஏக்கர்களாகும்; இதில் 23 இலட்சம் ஏக்கர் பரப்பில் தேயிலை, றப்பர், தென்னை முதலிய மரப் பயிர்கள் பயிரிடப்படுகின்றன. இவை முக்கிய விவசாய ஏற்றுமதி விளைபொருள்களாக இருப்பதுடன் பெரும்பாலும் வர்த்தகரீதியிலே கையாளப்பட்டு வருகின்றன. மறுபுறத்தில், சிறு விவசாயிகளின் விவசாயமாக நெற்செய்கை விளங்குகின்றது. காணிகளின் அளவு சிறியவையாகவும் பொருளாதார ரீதியில் பலங்குன்றியவையாகவும் உள்ளன. காணித் துண்டுகளின் எண்ணிக்கை 1,189,801 ஆகவும் அவற்றில் நெற் காணிகள் 49 வீதமாகவும் விளங்கின. ஒரு சராசரிக் காணி 1.9 ஏக்கர்களாகவும் வயல்களின் அளவுகள் பேரளவில் வேறுபட்டும் இருந்தன. (4) இயற்கை அனர்த்தங்கள் இப்பயிர்ச் செய்கையை தொடர்ந்து அச்சுறுத்தி வந்தன.

ஏறக்குறைய 72 சதவீத மக்கள் தொகையினர் கிராமப் பகுதிகளில் வாழ்கின்றனர். பெரும்பாலும் அவர்கள் விவசாயத்திலேயே ஈடுபட்டிருந்தனர். விவசாய வருமானங்கள் பருவகாலத் தன்மை கொண்டவையாகவும், பரந்தளவில் மாறுதல்களுக்கு உட்பட்டவையாகவும் இருந்தன. சிறு விவசாயிகளைப் பொறுத்தவரை இதன் பாதிப்பு மிக அதிகமாகும். எனவே கிராமியத் துறையைப் பொறுத்தவரை உற்பத்திக்கும், அதே வேளை நுகர்வுக்குமாக மெய்யான கடன் தேவையானது இருந்து வருகிறது.

ஐம்பதுகளின் நடுப்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட குத்தகை உரிமைச் சீர்திருத்தங்கள், உழவர்களுக்கு நிதி வழங்கக் கூடிய நிதி நிறுவனங்களின் அவசியத்தை எடுத்துவந்தன. முன்னர் நிலச் சொந்தக்காரர்களே இவ்வுதவிகளை வழங்கிவந்தனர்.

பெருமளவிலான தனிநோக்குக் கூட்டுறவுச் சங்களை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களாக மீளமைப்புச் செய்வதே இதற்கான பரிகாரமாக கருதப்பட்டது. கிராமிய வங்கி, கிராமிய சங்கக்கடை விற்பனைச் சங்கம், தொழிலாளர் சபை என்ற அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் கொண்டுவரும் ஓரமைப்பாக இது கருதப்பட்டது. எனவே, 1957 இல் நாடளாவிய ரீதியில் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்களின் ஸ்தாபிதம் மேற்கொள்ளப்பட்டது.

மக்கள் வங்கி

இந்தப் பரந்த வியாபித்த வலைப்பின்னல் அமைப்புக்கான நிதித் தேவைகளை வழங்குதற்காக பலம் வாய்ந்த கூட்டுறவு உயர் வங்கியொன்று ஸ்தாபிக்கப்படவேண்டியதாயிற்று. இந்த வங்கி, 1961 இல் மக்கள் வங்கி என்ற பெயரில் ஒரு வர்த்தக வங்கியாக ஆரம்பமாயிற்று.

ஆரம்பத்தில், கூட்டுறவுத் துறையூடாக கிராமத் துறைக்கு நெற்கொள்வனவுக்கும், ப. நோ. கூ. சங்கங்களின் நுகர்வு, மற்றும் வியாபாரத் தேவைகளுக்கும் மக்கள் வங்கி கடன் வழங்கி வந்தது. 1963 இல் முதன் முறையாக விரிவாக்கப்பட்ட கிராமிய கடன் திட்டம் அமுல் செய்யப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட சில ப.நோ.கூ. சங்கங்களுக்கு குறுகிய கால, நடுத்தர கால அளவிலான கடன் வசதிகள் தமது அங்கத்தவர்களுக்கு மீண்டும் வழங்கப்பட்டன. (5) ஏற்கனவே அரசினால் கடன் திட்டமொன்று நடைமுறைப் படுத்தப்பட்டு வந்ததால் குறுகிய காலப் பயிர்க் கடன்கள் வழங்கப்படவில்லை. 1984 முற்பகுதியில், வங்கியினால், இத்திட்டத்தின் விளைவுகள் குறித்தும் மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது. அதன் பலனாக கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறான பல்வேறு பலவீனமான அம்சங்கள் சீரமைக்கப்பட்டு, ஒரு முன்னேற்றகரமான திட்டத்துக்கான அடிப்படை அமைக்கப்பட்டது. (6).

(அ) வெளிவாரியான உதவி மற்றும் பயிற்சி என்பவற்றுக் கூடாக ஊழியர்களின் முகாமைத்துவத் திறன்கள் பலப்படுத்தப்படல் வேண்டும்.

(ஆ) கடன் வழங்குவதில், விண்ணப்பங்களுக்கான முன் அனுமதி, பின் அனுமதி மதிப்பீடுகள் ஒழுங்கான ஒரு முறையில் செய்யப்பட வேண்டும்.

(இ) (i) கிராமங்களில் காணப்படும் தெளிவற்ற உறுதிப் பத்திரங்களைக் கொண்ட காணிகளை பிணையாக ஏற்றுக் கொள்வதற்கும் (ii) தமது தகுதியைத் தீர்மானிப்பதற்கான சான்றாதாரங்களை கடன் பெறுவோர் சமர்ப்பிக்க முடியாததனால் அவர்களது கடன் தகுதியை அங்கீகரித்தல் போன்றவற்றுக்கென முறைமைகள் வகுக்கப்படுதல் வேண்டும்.

(ஈ) உப குழுக்களுக்கும், கடன் முகாமையாளர்களுக்கும் கூட்டுறவுச் சங்க பணிப்பாளர் சபை அதிகாரங்களை பகிர்ந்தளித்தல் வேண்டும். அப்பொழுதுதான் கடன்கள் தொடர்பாக உடனடியாக தீர்மானங்களை எடுக்கவும், கடன்களை பகிர்ந்தளிக்கவும் முடியும்.

(உ) (i) சிறந்த முறையில் ஆவணங்களைப் பாதுகாத்தல் (ii) தரமான வரவு செலவுப் பதிவேடுகள் (iii) பாதுகாப்பு ஏற்பாடுகள் (iv) கடன் ஆவணங்கள் முதலியன தொடர்பான நடைமுறைகள் வலுப்படுத்தப்படல் வேண்டும்.

(ஊ) இந்தத் திட்டம், அது அமைக்கப்பட்ட முறையில், அதன் நோக்கத்திலும், அதன் நடைமுறையிலும் கிராமியக் கடன் தேவைகளை நிறைவு செய்வதிலும், கிராமத்துறையை முன்னேற்றுவதிலும் போதிய தாக்கமுடையதாக இருக்கவில்லை.

(எ) கடன் வழங்கல் மற்றும் துணைச் சேவைகள் என்பன கிராம மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்க முடியவில்லை. கிராம மக்கள் கடந்த அரை நூற்றாண்டு காலமாக கூட்டுறவுச் சங்கங்களின் கடன் பகிர்வினை அவதானித்து வந்துள்ளனர். கூட்டுறவுச் சங்கங்களின் கடன் திணைக்களங்கள் வங்கிகளின் பிம்பத்தைப் பெறுதல் வேண்டும்.

(ஏ) சங்கங்களின் கடன் வழங்கல் வங்கிகளின் கடன் வழங்கலோடு இணைக்கப்படல் வேண்டும்.

கிராமிய வங்கிகளின் உருவாக்கம்

இந்தப் பரீட்சார்த்த முயற்சிகளிலிருந்து பெற்ற படிப்பினைகளும் கிராமியத் துறையில் தனது பங்கு வரையறுக்கப்பட்ட ஓர் அளவில் மட்டுமே இருக்கிறது என்ற உண்மையும் மக்கள் வங்கியை 1964 இல் ஒரு தீர்மானத்துக்கு இட்டுச் சென்றன. கூட்டுறவுஇயக்கத்தினூடாக வங்கிச் சேவைகளை வழங்கும் நடைமுறைச் சாத்தியமான ஒரு கருதுகோளினை அது அபிவிருத்தி செய்தது. கிராமிய வங்கிகளை அமைக்கும் திட்டமே இந்தப் புதிய கோட்பாடாகும்.

அவ்வேளையில் கிராமிய வங்கி உருவாக்கத்தின் நோக்கங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் பின்வருமாறு தெளிவுபடுத்தப்பட்டன.

(i) சங்கத்தின் உறுப்பினர்களுக்கான கடன்வசதிகளை உபயோகமான முறையில் வழங்குதல்.

(ii) வழங்கப்பட்ட கடன்களை கண்காணித்து வருதல்.

(iii) கணக்கு வைப்பு, ஆவணத் தயாரிப்பு முறைகளைத் தர முயர்த்தல்.

(iv) சேமிப்புக்களை திரட்டுவதற்கான நடைமுறைகளை அபிவிருத்தி செய்தல்.

அவற்றின் நிலைத்து நிற்கும் ஆற்றலை உறுதிப்படுத்தும் வகையில், குறித்த சில தகுதி நிலைகளையுடைய ப.நோ.கூ. சங்கங்களில் மட்டும் இப் புதியதிட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. விரிவுபடுத்தப்பட்ட கடன் திட்டத்தினை வெற்றிகரமாக அமுல்படுத்திய சங்கங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.

தகுதியான சங்கங்கள் இந்தத் திட்டத்தில் இணைந்துகொள்வதற்கான விண்ணப்பங்களை வங்கிகளில் சமர்ப்பிக்க வேண்டியிருந்தது. அதன்பின் ஒவ்வொரு விண்ணப்பத்தினையும் நன்கு பரிசீலித்து, குறித்த சங்கத்தினையும் நுணுக்கமாக ஆராய்ந்து வங்கி தெரிவுகளைச் செய்யும். அவ்வாறு தெரிவு நடைபெற்றதும் சங்கமும், மக்கள் வங்கியும் ஓர் உடன்படிக்கையை செய்துகொள்ளும் கிராமிய வங்கியின் செயற்பாடு குறித்த வரையறைகளும், நிபந்தனைகளும் இதில் இடம்பெறும்.

கிராமிய வங்கிகள் உருவாக்கத்தின் ஆரம்பப்படியாக, தெரிவுசெய்யப்பட்ட சங்கங்கள், கிராமிய வங்கிகளைத் தாபிக்கும் வகையிலே தமது உப-விதிகளைத் திருத்தியமைக்குமாறு வேண்டப்பட்டன. மக்கள் வங்கி பின்வருவனவற்றை வழங்கும்:

(அ) கடன் வழங்குவதற்காக நிதி உதவி (ஆ) தமது ஊழியர்களிலிருந்து முகாமைத்துவ உதவி (இ) நகை அடைவு வேலைக்கான பாதுகாப்புப் பெட்டிகள், கரும பீடங்கள், காகிதாதிகள், மற்றும் உபகரணங்கள் (ஈ) மேற்பார்வை செய்தல்.

இத்திட்டத்தின் கீழ், உற்பத்தித்துறை, வீடமைப்பு, கடன் அடைத்தல், வர்த்தகம், நுகர்வு, அவசர தேவைகள், கிராமிய மின்சாரம் ஆகியவற்றுக்காக, அங்கத்தவர்களுக்கு கடன் வசதிகள் வழங்கப்பட்டன. ஒரு வருடம் முதல் 5 வருடங்கள் வரையான காலத்தில் திருப்பிச் செலுத்தக் கூடிய குறுகிய கால, நீண்டகால தவணை அடிப்படையில் இவ்வசதிகள் வழங்கப்பட்டன.

இந்தக் கிராமிய வங்கிகள், மக்கள் வங்கியின் முகவர்களாக இருந்து நகை அடைவு பிடிப்பதில் ஈடுபடவும் அதிகாரமளிக்கப்பட்டன. அரசின் விவசாயக் கடன் திட்டம் நடைமுறையிலிருந்ததால், பருவகால முறையில் பயிர்க்கடன் வசதிகள் வழங்குதல் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், அத்தகைய கடன்களுக்குப் பதிலாக, தற்காலிக இட்டுக்கட்டும் நிதி வசதிகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டது.

உறுப்பினர், உறுப்பினரல்லாதோர் யாவருக்கும், சாதாரண சேமிப்புக் கணக்குகள், சிறுவர் சேமிப்புக் கணக்குகள், முதலீட்டுச் சேமிப்புக் கணக்குகள் போன்ற வெவ்வேறு சேமிப்புக் கணக்குகளை வைத்திருப்பதற்கு வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன. உறுப்பினர் குறித்த சங்கத்துடன் விற்பனை ஒப்பந்தமொன்றைச் செய்து கொள்ள வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. விற்பனை வரவுகள் அனைத்தும் அவர்களது கணக்குகளில் சேர்க்கப்படும். உறுப்பினர், உறுப்பினரல்லாதோரிடமிருந்து நிலையான வைப்புகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. நடைமுறைக் கணக்கு வசதிகள் கூட, ஆரம்பகால கட்டத்தில் முதல் 3 கிராமிய வங்கிகளின் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. பின்னால், சில சட்டரீதியான இடையூறுகள் ஏற்பட்டபோது இந்த வசதிகளை உடனடியாக வாபஸ் பெற வேண்டியிருந்தது. இந்த நடைமுறைக் கணக்கு வசதிகள் தொடர்ந்தும் இருந்திருக்குமானால், மேலும் புதிதான கடன் வசதிகள் இதன் மூலம் விஸ்தரிக்கப்பட்டிருக்கும்.

1971 அளவில் இத்திட்டம் 111 சங்கங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டுவிட்டது. கணக்குகளின் எண்ணிக்கையும் 60871 ஆக வளர்ச்சியடைந்தது. இந்தக் கால கட்டத்தில் இவ்வமைப்பானது கிராமிய மக்களின் நம்பிக்கையைப் பெற்றுக் கொண்டதுடன் ஒரு புதிய வங்கி கோட்பாடு என்ற முறையில் ஆய்வாளர்கள், கல்விமான்கள் மற்றும் அதிகாரிகள் என்போரின் சிறப்பு அக்கறையையும் இது பெற்றது. ஒன்றிணைக்கப்பட்ட எல்லாப் ப. நோ. கூ. சங்கங்களிலும் வங்கிப் பிரிவுகளை அமைப்பதென்பதும் அரசின் கொள்கையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ப. நோ. கூ. சங்கங்களின் ஒன்றிணைப்பின் பின் கிராமிய வங்கிகளில் ஏற்பட்ட மாற்றங்கள்:

பெருந்தொகையான சிறு, சிறு ப. நோ. கூ. சங்கங்கள் பாரிய ப. நோ. கூ. சங்கங்களாக இணைக்கப்பட்டமையால் விசாலமான பரப்பளவைக் கொண்ட பகுதிகளை உள்ளடக்கி அவை இயங்கவேண்டி இருந்தன. இதனால் 1973 இல் கிராமிய வங்கிகளின் அமைப்பு முறையில் சில நடைமுறை மாற்றங்களை ஏற்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதுவரை காலமும் தனி அலகுகளாக இயங்கி வந்த இவ்வங்கிகள் தலைமை அலுவலகம், கிளை அலுவலகங்கள் எனும் கிளை வங்கி அமைப்பில் கொண்டு வரப்பட்டன. பெரும்பாலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னைய கிராமிய வங்கிகள் புதிதாக அமைக்கப்பட்ட வங்கியின் கிளைகளாக மாறின. கிராமிய வங்கி எனும் பெயர்கூட 'கூட்டுறவுக் கிராமிய வங்கி' என்று மாற்றப்பட்டது. 'சந்தைப் படுத்தல்/கடன் முகாமையாளர் (11) எனும் புதிய பதவியில் கூட்டுறவுத் துறை ஊழியர்கள் இவ்வங்கிகளின் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டனர். கணக்குப் பதிவுகள், பதிவேடுகளின் பராமரிப்புகள் ஒரு முகப்படுத்தப்பட்டன. மக்கள் வங்கி இப்போது மேற்பார்வை வகிக்கும் பங்கினையே முக்கியமாக வகித்தது. இந்த நிறுவனங்களின் மீது மக்கள் வங்கியின் கட்டுப் பாட்டுப்பிடி தளர்வதற்கு இந்நிலைமை வழிகோலியது.

1973 இல், புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட, விரிவு படுத்தப்பட்ட விவசாயக்கடன் திட்டத்துக்கு ஈடு கொடுக்கும் வகையில் கூ. கி. வங்கிகளின் கருமங்கள் பின்வருமாறு மீளொழுங்கு படுத்தப்பட்டன.

(அ) உறுப்பினர்களிடமிருந்து வைப்புக்களைத் திரட்டுதல்;

(ஆ) உற்பத்தி, நுகர்வு நோக்கங்களுக்கென உறுப்பினர்களுக்கு கடன் வசதிகளை (ப. நோ. கூ. சங்க வேலைத்திட்டங்களுக்குப் பொருத்தமான முறையில்) வழங்குதல்;

(இ) உறுப்பினர், உறுப்பினரல்லாதோருக்கான நகை அடைவுக் கடன் வசதிகள்;

(ஈ) பணம், கொடுப்பனவுகள், கைமாற்றல் சேவைகளுக்கான வசதிகள்.

விவசாயக் கடன் வசதிகளும் கூ. கி. வங்கிகளுக்குக் கீழ் கொண்டுவரப்பட்டன. 1973 இல் இலங்கை வங்கியும் இத்திட்டத்தில் இணைந்து கொண்டதனால் கூட்டுறவுத் துறை விவசாயக் கடன் மீது கொண்டிருந்த

அட்டவணை 1

கூ. கி. வ. கடன் வசதிகள்

| நோக்கம் | ஆகக்கூடிய தொகை | | | | | திருப்பச் செலுத்தும் காலம் |
|---|---|---|---|---|---|---|
| | 1964 | 1968 | 1973 | 1980 | 1985 | |
| 1. உற்பத்தி | 2,500 | 5,000 | 7,500 | 15,000 | 35,000 | 1-5 வருடங்கள் |
| 2. வீடமைப்பு | 2,500 | 5,000 | 7,500 | 15,000 | 35,000 | 3-5 வருடங்கள் |
| 3. கடன் மீட்பு | 2,500 | 5,000 | 5,000 | 5,000 | 5,000 | 5 வருடங்கள் |
| 4. வர்த்தகம் | — | — | 1,000 | 2,000 | 5,000 | — |
| 5. நுகர்வு (வானொலிப் பெட்டிகள், தையல் மெஷின்கள் போன்ற பொருட்களை வாங்குதல்) | 500 | 500 | 1,000 | 5,000 | 7,500 | 1 வருடம் |
| 6. அவசர தேவைகள் | 200 | 200 | 200 | 500 | 1,000 | 1 வருடம் |
| 7. மின் இணைப்பு பெறல் | — | 600 | 1,000 | 3,000 | 3,000 | 5 வருடங்கள் |
| தனி நபரொருவருக்கான ஆகக்கூடிய கடன் எல்லை | 3,000 | 5,000 | 7,500 | 15,000 | 35,000 | |

அட்டவணை 2

கூ. கி. வங்கிகள் - மொத்த கடன்கள் (30.06.88)

| | கணக்குகளின் எண்ணிக்கை | நிலுவை (ரூபா) |
|---|---|---|
| 1. விவசாய உற்பத்தி - உப மொத்தம் | 19,647 | 57,645,634 |
| 2. நுகர்வு | 4,871 | 9,966,801 |
| 3. கைத்தொழில் | 5,643 | 20,660,585 |
| 4. வீடமைப்பு | 44,537 | 211,999,345 |
| 5. கடன் மீட்பு | 7,785 | 20,144,976 |
| 6. வர்த்தகம் | 5,040 | 15,881,824 |
| 7. கால்நடை வளர்ப்பு | 4,801 | 15,811,695 |
| 8. மின் இணைப்பு பெறல் | 1,611 | 4,384,680 |
| 9. ஏனையவை | 5,941 | 17,267,356 |
| மொத்தம் | 99,876 | 373,762,896. |

ஏகபோகத்தினை இழந்தது. விவசாயியை உற்பத்தியின் ஓர் அலகாகக் கருதி அவனது அனைத்து கடன் தேவைகளையும் ஒரு விரிவான திட்டத்தின் கீழ் மதிப்பிடுவதுமான விஸ்தரிக்கப்பட்ட கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஒரே கடன் எல்லைக்குள் பலவகைப்பட்ட கடன் தேவைகள் வந்து சேர்ந்தாலும் மத்திய வங்கியின் மீள் நிதியானது விவசாயக் கடன்களுக்கு மட்டுமே ஒதுக்கப்பட்டது. எனவே வெவ்வேறு கடன் வழங்கும் திட்டங்கள் தனித்தனியாக பரிபாலிக்கப்பட்டன.

### கடன் திட்டங்கள்

இவ்வகையில், மூன்று முக்கிய கடன் வழங்கும் திட்டங்கள் நடைமுறைக்கு வந்தன. (1) விரிவாக்கப்பட்ட கடன் திட்டம், முந்தைய கிராமிய வங்கித் திட்டம் என்பவற்றின் கீழ் வழங்கப்பட்ட குறுகிய, நடுத்தர கால கடன் வசதிகள், (2) விரிவாக்கப்பட்ட கடன் திட்டத்தின் கீழ் நெல், மற்றும் உப உணவுப் பயிர்களுக்கான பருவகாலப் பயிர்க் கடன் வசதிகள். (3) மக்கள் வங்கியின் முகவராக செயற்பட்டு நகை அடைவு பிடித்தல்.

### குறுகிய, நடுத்தர காலக் கடன்கள்

அட்டவணையில் இக்கடன்கள் தொடர்பான நோக்கங்களும், அவற்றுக்கான நிபந்தனைக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிராமிய வங்கிகளின் முற்பணங்களும முதலீடுகளும் · 1988 முடிவில்

| வகை | மாவட்டம் | சங்கங்களின் எண்ணிக்கை | இ. வ. எண்ணிக்கை | மொத்த வைப்புக்கள் | மொத்த முற்பணங்கள் | அடகு கடன் | ம. வங்கியில் முதலீடு | ஏனைய வங்கிகளில் | மொத்த முதலீடு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கொழும்பு | 10 | 63 | 189.6 | 96.0 | 63.3 | 68.7 | 34.8 | 103.5 |
| நகர | | 10 | 63 | 189.6 | 96.0 | 63.3 | 68.7 | 34.8 | 103.5 |
| மொத்தத்தில் % | | | 6.4 | | | | | | |
| | களுத்துறை | 10 | 47 | 72.1 | 23.8 | 16.3 | 21.1 | 26.1 | 47.2 |
| | காலி | 18 | 72 | 165.7 | 60.6 | 27.2 | 46.0 | 49.7 | 95.7 |
| | கம்பகா | 17 | 110 | 298.6 | 109.4 | 83.4 | 76.6 | 148.5 | 225.1 |
| | கண்டி | 22 | 73 | 167.9 | 77.0 | 40.7 | 68.1 | 6.6 | 74.7 |
| | யாழ்ப்பாணம் | 22 | 28 | 54.7 | 1.7 | - | 52.0 | 5.4 | 57.4 |
| பட்டின | | 89 | 330 | 759.0 | 272.5 | 167.6 | 263.8 | 236.3 | 500.1 |
| மொத்தத்தில் % | | | 33.7 | | | | | | |
| | கேகாலே | 10 | 51 | 75.7 | 37.9 | 14.9 | 34.2 | 4.2 | 38.4 |
| | பதுளை | 12 | 47 | 59.4 | 23.2 | 17.2 | 21.7 | - | 21.7 |
| | இரத்தினபுரி | 13 | 58 | 154.0 | 22.8 | 16.2 | 61.5 | 52.3 | 113.8 |
| | மாத்தளை | 10 | 17 | 26.6 | 17.1 | 8.8 | 9.6 | 1.0 | 10.6 |
| | மாத்தறை | 8 | 64 | 145.5 | 35.5 | 16.5 | 13.6 | 71.4 | 85.0 |
| | நுவரெலியா | 9 | 26 | 37.9 | 19.2 | 9.0 | 16.3 | 2.4 | 18.7 |
| | குருணாகல் | 18 | 119 | 201.7 | 58.9 | 9.7 | 54.6 | 109.6 | 164.2 |
| | அநுராதபுரம் | 21 | 30 | 13.6 | 5.4 | 4.0 | 4.1 | - | 4.1 |
| | பொலனறுவை | 9 | 25 | 31.2 | 29.2 | 6.7 | 13.2 | - | 13.2 |
| | திருகோணமலை | 7 | 12 | 0.1 | 0.4 | 0.4 | 0.1 | - | 0.1 |
| நகர/கிராமிய கலவை | | 117 | 449 | 745.8 | 249.6 | 103.4 | 228.9 | 240.9 | 469.8 |
| மொத்தத்தில் % | | | 45.9 | | | | | | |
| | மொனராகலை | 6 | 13 | 11.0 | 0.5 | 0.1 | 6.3 | - | 6.3 |
| | அம்பாந்தோட்டை | 7 | 32 | 41.7 | 17.0 | 7.2 | 19.4 | 8.8 | 28.2 |
| | புத்தளம் | 8 | 38 | 51.3 | 19.2 | 8.3 | 9.5 | 22.3 | 31.8 |
| | மட்டக்களப்பு | 13 | 12 | 4.0 | 3.1 | 2.9 | 2.3 | - | 2.3 |
| | அம்பாறை | 15 | 22 | 6.8 | 8.2 | 5.7 | 0.8 | - | 0.8 |
| | வவுனியா | 3 | 3 | - | - | - | - | - | - |
| | மன்னார் | 6 | 6 | 0.3 | - | - | 0.7 | - | 0.7 |
| | கிளிநொச்சி | 4 | 4 | 2.8 | - | - | 2.4 | - | 2.4 |
| | முல்லைத்தீவு | 5 | 5 | - | - | - | - | - | - |
| கிராமிய | | 67 | 135 | 118.0 | 48.0 | 24.2 | 41.4 | 31.1 | 72.5 |
| மொத்தத்தில் % | | | 13.8 | | | | | | |
| இலங்கை | | 283 | 977 | 1,812.4 | 566.1 | 358.5 | 602.8 | 543.1 | 1,145.9 |
| மொத்தத்தில் % | | | 100.0 | | | | | | |

| வகை | சங். எண். | இ. வங். எண். | மொத்த வைப்புக் | வைப்புக்கள் % | மொத்த முற்பணங்கள் | முற்பணங்கள் % | மொத்த முதலீடு | முதலீட்டு % | மொத்த வைப்புக்களில் முதலீடுகளின் % |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நகர | 10 | 63 | 189.6 | 10.5 | 96.0 | 14.4 | 103.5 | 9.0 | 54.6 |
| பட்டின | 89 | 330 | 759.0 | 41.9 | 272.5 | 40.9 | 500.1 | 43.6 | 65.9 |
| நகர/கிராமிய கலவை | 117 | 449 | 745.8 | 41.1 | 249.6 | 37.5 | 469.8 | 41.0 | 63.0 |
| கிராமிய | 67 | 135 | 118.0 | 6.5 | 48.0 | 7.2 | 72.5 | 6.3 | 61.4 |
| இலங்கை | 283 | 977 | 1,812.4 | 100.0 | 666.1 | 100.0 | 1,145.9 | 100.0 | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளும் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு நோக்கங்களுக்குமான கடன்தொகை வளர்ச்சியடைந்து வந்திருப்பதனை இது காட்டுகின்றது. இரு ஏற்றுக் கொள்ளக் கூடிய உறுப்பினர்களின் பிணையின்பேரில் 5000/- ரூபா வரையான கடன் பெறக் கூடியதாயிருந்தது. இதற்கு மேற்பட்ட தொகை விடயத்தில் வரையறுக்கப்பட்ட சமமான பாதுகாப்புப் பிணை பெற்றுக் கொண்டு கடன் வழங்கப்பட்டது. நன்கு உரிமை பிரிக்கப்படாத காணி உறுதிகளும் கூட பிணையாக ஏற்றுக்கொள்ளுவதற்கு வழிவகைகள் செய்யப்பட்டன. கிராம நொத்தாரிசுகள் சிறிய அளவிலான பரிசீலனைகளையும், அடைமானப் பத்திரம் எழுதுவதையும் மேற்கொண்டனர். நிலையான மற்றும் சேமிப்புக் கணக்குகளின் நிலுவையில் 90% மும் கடனாக வழங்கப்பட்டது. 30. 06. 1988-ல் 67,364 கடன்களுக்கான குறுகிய நடுத்தர கால கடன்களின் நிலுவைத் தொகை ரூபா 37 கோடியே 37 இலட்சமாக இருந்தது. பிரதேச ரீதியான பகுப்பாய்வொன்று 92 சதவீதத்துக்கும் கூடுதலான கடன் கொழும்பு மாவட்டத்துக்கு வெளியே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது என்பதனை காட்டுகிறது. கடன் வழங்குவதில் பலமான கிராமிய சார்பு இருப்பதனை இது நிரூபிக்கப்படுகின்றது. கடன் செயலாற்றுகையும் பகிர்வும் எதிர்பார்த்த அளவு சிறப்பாக இருக்கவில்லை. கடன் பெறுதற்கான குறைந்த பட்ச.பங்குத் தேவைகள் ஒப்பீட்டளவில் உயர்வான வட்டிவீதம், உள்ளக நிர்வாகப் பிரச்சினைகள், சிற்றளவிலான கிராமியத் திட்டங்களை அடையாளம் காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் கூடிய முக்கியத்துவம் அளிக்கப்படாமை போன்றன இந்நிலைமைக்கு ஏதுவாக இருந்தன.

### அட்டவணை 3

**கூ. கி. வங்கிகளுக்கூடாக அரச ஆதரவுடனான வேளாண்மைக்கடன்கள் - 30. 06. 1988 தேதியில்** ('000)

| வருடம் | பயன்படுத்தப்பட்டதொகை ரூபா | மொத்த கடன் வசூல் ரூபா | செலுத்தப்படாத நிலுவை ரூபா | வசூல் % |
|---|---|---|---|---|
| 1973 | 38,381 | 26,872 | 11,509 | 70.0 |
| 1974 | 134,605 | 76,703 | 57,902 | 56.9 |
| 1975 | 97,087 | 52,293 | 44,794 | 53.8 |
| 1976 | 67,491 | 41,406 | 26,085 | 61.3 |
| 1977 | 89,273 | 43,828 | 45,445 | 49.0 |
| 1978 | 371,495 | 102,051 | 269,444 | 27.4 |
| 1979 | 25,995 | 23,767 | 2,228 | 91.4 |
| 1980 | 23,960 | 21,964 | 1,996 | 91.6 |
| 1981 | 28,150 | 25,639 | 2,511 | 91.0 |
| 1982 | 24,096 | 20,959 | 3,137 | 86.9 |
| 1983 | 28,740 | 26,861 | 1,879 | 93.4 |
| 1984 | 23,955 | 21,842 | 2,113 | 91.1 |
| 1985 | 14,829 | 12,765 | 2,064 | 86.0 |
| 1986 | 27,677 | 23,806 | 3,871 | 86.0 |
| 1987 | 37,240 | 27,898 | 9,342 | 74.9 |
| 1988* | 16,927 | 7,322 | 9,605 | 43.2 |
| மொத்தம் | 1,049,901 | 555,976 | 493,925 | 52.9 |

* 1988 - 30. 09. 1988 தேதியில்

| | தொகை (ரூ. பத்து இலட்சம்) | கணக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| **முற்பணங்கள்** | | |
| (1) குறுங்கால, நடுத்தர கால கடன்கள் | 373.7 | 99,876 |
| (2) அடகு கடன்கள் | 368.5 | 391,153 |
| (3) 1988 யால போகத்திலிருந்து பயிர்ச் செய்கைக்கடன் திட்டம் | 583.7 | — |
| | 1,325.9 | |
| **வைப்புக்கள்** | | |
| சேமிப்பு | 1,556.7 | 2,273,358 |
| நிலையான வைப்புக்கள் | 194.0 | 25,165 |
| | 1,750.7 | |

#### பயிர்ச் செய்கைக் கடன்கள்

1973-ன் பின்னர் பருவகால வேளாண்மைக் கடன்களுக்கான ஏற்பாடுகளும் கூ. கி. வங்கித் திட்டத்துள் கொண்டுவரப்பட்டன. கடன் வசதிகள், நெற்செய்கைக்கும், வேறு பதினாறு உப உணவுப் பயிர்களுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டன. நிலத்தைத் தயார்படுத்தல், விதை, பசளை, விவ்சாய கிருமிநாசினிகள் வாங்குதல், மற்றும் அறுவடைத் தேவைகளுக்காக இவை வழங்கப்பட்டன.

(அடுத்த இதழில் முடியும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

( 10 –ம் பக்கத் தொடர்ச்சி)

தொகைகள் காணப்பட்டன. கிராமிய வங்கித்திட்டத்தின் தொடக்க காலத்தின் பிற்பட்ட வருடங்களில், வைப்புத்தொகைகள் சிறியனவாயிருந்த போதிலும் அதிகமானோர் நிலையான வைப்புக் கணக்குகளை ஆரம்பித்தனர். உதாரணமாக 1967 இல் 41 நிலையான வைப்புக் கணக்குகள் சராசரி வைப்பான ரூபா 1,595 உடன் இருந்தபோது 1971 இல் 838 இத்தகைய கணக்குகள் ரூபா 1,595 சராசரி வைப்புடனும், 1971 இல் இத்தகைய 838 கணக்குகள் ரூபா 807 சராசரி வைப்புடனும் காணப்பட்டன.

1967 இறுதியில் 2,897 ஆகவும் ரூபா 2,029,000 ஆகவும் காணப்பட்ட கிராமிய வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கையும், மொத்த கடன் தொகையும் 1970 இறுதியில் முறையே 10,017 ஆகவும் ரூபா 7,122,000 ஆகவும் அதிகரித்தன. எவ்வாறெனினும், இந்த இரு இலக்கங்களிலுமான அதிகரிப்பு 1971 இல் மிகக்குறைவாக இருந்தது. ஏனெனில் 1971 ஆரம்ப பகுதியில் சேமிப்புக் கணக்குகளிலிருந்து மீளப்பெறப்பட்ட பணத்தின் பெரும்பகுதி அவற்றின் கடன் தேவைகளை நிறைவேற்றப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.

அடகுக் கடன்களைப் பொறுத்த வரையில் வழங்கப்பட்ட ஒரு கடனின் சராசரி அளவு 1967-ல் 96 ரூபாவாகவும் 1968-ல் 114 ரூபாவாகவும் இருந்தது. ஏனைய கடன்களைப் பொறுத்தவரையில் கடனொன்றின் சராசரி அளவு 1965-ல் ரூ. 793 ஆகவும் 1968-ல் ரூ. 650 ஆகவும் இருந்தது. 1972-க்கு முற்பட்ட வருடங்களில் அநேகமாக இதே போக்கே நிலவியது. அடகுக் கடன்கள் தவிர்ந்த ஏனைய கடன்களை, அவை வழங்கப்பட்ட நோக்கங்களைக் கொண்டு பகுப்பாய்வு செய்யும் போது (1971-க்கு முற்பட்ட காலத்தில்) வீடமைப்பு நோக்கங்களுக்கே அதிகளவு கடன்கள் வழங்கப்பட்டிருப்பது தெரிகிறது. விவசாய நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட கடன்கள் இரண்டாவது இடத்தைப் பெற்றதுடன் அவை வீழ்ச்சியடைந்து கொண்டும் வந்தன. அடகுக் கடன்கள் தவிர்ந்த மொத்த கடன்களில் வீடமைப்புக் கடன்களின் பங்கு 1964-ல் 23.4 சதவீதமாக இருந்து 1971-ல் 36.2 சதவீதமாக அதிகரித்திருந்தது. அதே வேளையில், விவசாய நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட கடன்கள் 1964-ல் 36.5 சதவீதமாக இருந்து 1971-ல் 18.8 சதவீதமாக வீழ்ச்சியடைந்திருந்தது. கிராமிய வங்கியமைப்பின் முற்று முழுதான செயற்பாட்டினை நாம் பகுப்பாய்வு செய்து பார்க்கும் போது, முதல் ஆறுவருட காலத்தில் இவ்வங்கிகள் தாம் திரட்டிய வைப்புக்களிலும் கூடிய தொகையை கடன்களாக (அடகுக்கடன்கள் உட்பட) வழங்கி வந்திருப்பது தெரிகிறது. எனினும், இந்த ஆரம்ப கட்டத்தின் பின்னர் - குறிப்பாக 1970-ன் நடுப்பகுதியில் - இவ்வங்கிகள் நிதிகள் விஷயத்தில் தன்னிறைவடைந்தன. வைப்புக்கள் முற்பணங்களை விடவும் கூடிய வேகத்தில் தொடர்ந்தும் அதிகரித்து வந்தன.

கிராமிய வங்கிகளின் முதல் ஏழாண்டு காலம் பரீட்சார்த்த கட்டமாக இருந்தது. இந்த திட்டம் தாக்குப் பிடிக்கக்கூடியது என்பதனை இந்த பரீட்சார்த்த கட்டம் நிரூபித்தது. எந்த நோக்கங்களுக்காக இவ்வங்கியமைப்பு உருவாக்கப்பட்டதோ அந்த நோக்கங்களை வென்றெடுக்க முடியும் என்ற நம்பிக்கையும் வந்தது. எனினும், இந்த ஆரம்ப கட்டத்தில் கூட்டுறவு கிராமிய வங்கிகளின் கருமங்கள் வரையறுக்கப்பட்ட அளவிலேயே இடம் பெற்று வந்தன. கிராமப்புறங்களிலும் கூட ஒரு சில பகுதிகளிலேயே இவ்வங்கிகள் இயங்கி வந்தன. ஆனால், கணிசமான அளவில் கிராமிய சேமிப்புக்களை ஒன்று திரட்டுவதில் அவை வெற்றி கண்டதுடன், கிராமியத் துறையில் உள்ளூர் மூலவளங்களைக் கொண்டே முதலீடுகளை மேற்கொள்வதற்கு இது வகை செய்தது. முன்னர் சேமிப்பு நோக்கங்களுக்கும் அதே போல கடன் தேவைகளுக்கும் முறைசாரா துறையை நம்பியிருந்த பெரும்பாலான கிராம மக்கள் வங்கித்துறையை நாடி வரத் தொடங்கினர்கள். இது இந்த திட்டத்தின் ஒரு முக்கியமான சாதனை என்று குறிப்பிட வேண்டும். கிராம மக்களிடையே வங்கிப்பழக்கத்தை அறிமுகம் செய்வதில் முதல் ஏழாண்டு காலத்தில் இவ்வங்கிகள் வெற்றி கண்டன. பரீட்சார்த்த கால கட்டத்தில் கிடைத்த அனுபவங்களும், வெற்றிகளும் அடுத்து வந்த வருடங்களில் இவ்வங்கிகள் துரிதமாக வளர்ச்சியடைய பல வழிகளில் உதவின.

( 26 –ம் பக்கத் தொடர்ச்சி)

ண்டாவதாக, கடன் தீர்மானங்களை மேற்கொள்வதில் இடைநடுவர்களின் (தரகர்களின்) தலையீடும் அதிகரிக்கின்றது. இத்தகைய குழு பல்வேறு செல்வாக்குப் பிரிவினரை உள்ளடக்கியதாக விளக்குகின்றது. அவற்றின் செல்வாக்குப் பிரயோகம் அனேக சந்தர்ப்பங்களில் வங்கிக் கோட்பாடுகளைக் குறிப்பாக கடன் ஒழுங்கமைப்பைத் தகர்த்தெறிவதாக உள்ளது.

இந்தக் கட்டுரை கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் பற்றிய, குறிப்பாக அவற்றின் மிகை வைப்பு நிதி பற்றிய சில கசப்பான உண்மைகளை வெளிப்படுத்த முயன்றுள்ளது. ஆனால், ஏனைய பல்வேறு துறைகளிலும் இவ்வங்கிகள் ஆற்றிவரும் சேவைகளை இங்கு எவ்விதத்திலும் குறைத்து மதிப்பிட்டு விட முடியாது. கிராமப்பகுதிகளில் கடன் பளுவின் இருளைப் போக்குவதற்கு கிராமிய வங்கிகள் விளக்கேற்றி வைத்துள்ளன என்பதனை எவரும் மறுக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபாற் கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

மக்கள் வங்கி ஒரு சமூகப்பணித் திட்டமாக "பொருளியல் நோக்கை" வெளியிடுகின்றது. பாரபட்சமற்ற பரிசீலனைகள், கருத்தாழமிக்க கலந்துரையாடல்கள் என்பன மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்திப் படிமுறையிலும் ஆர்வத்தினை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதே எமது குறிக்கோளாகும். நாட்டின் மிக முக்கியமான சமூக, கலாசாரத் தேவைகள் குறித்து வங்கியின் வளங்கள் பயன்படுத்தப்படும் பல்வேறுபட்ட திட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.

மேலும், மக்கள் வங்கி, நாடெங்கணும் சிதறிக் காணப்படும் 300 க்கும் அதிகமான அதன் கிளைகள் மூலமும், சுமார் 800 கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் மூலமும், கடற்றொழில் வங்கிகள் மூலமும் விரிவான சகல வங்கிச் சேவைகளையும் வழங்கி வருகின்றது. உலகெங்கணுமிருக்கும் முகவர்கள், பிரதிநிதிகள் என்போரின் உதவியுடன் சர்வதேச வர்த்தகம், கொடுப்பனவுகள் என்பன குறித்த சகல அம்சங்களையும் வங்கி மேற்கொண்டு வருகின்றது.

பிரதி விலை
ரூ. 7.50
வருட சந்தா விலை
ரூ. 90.00

# பொருளியல் நோக்கு

## மக்கள் வங்கியின் ஆராய்ச்சிப் பகுதி வெளியீடு

பூபாலசிங்கம் புத்தகசாலை
போன் { கடை: 23631 வீடு: 24076
4-A, ஆஸ்பத்திரி ரோட், யாழ்ப்பாணம்

283, கே. சிறில் சி. பெரேரா மாவத்தை, கொழும்பு 13.ல் உள்ள ஐ ஜீ எம் லிமிட்டெட் அச்சுயந்திரசாலையில் அச்சிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org